
KALKI 17.2.2002
ரூ. 6.00
கல்கி
வைரவிழா ஆண்டு
கன்யாவின் காதல்!

Steelwin®

THE RECLINER CHAIR

முழுமையான சுகம்

உங்கள் விரல் முனையில்



Patent No. 178496

Imagine being able to do all this on one chair! Steelwin's amazing Recliner can change from chair to hammock to bed and everything in between, in a trice, at a gentle flick of the elegant arms rest. That's the Recliner. A chair that changes to suit your need.

CHENNAI : Triveni & Co. 5, Raja Street, T. Nagar, Chennai - 600 017. Ph: 4360111.

Siva Sakthi Industries, 100, Menambedu Road, SIDCO IND. ESTATE, AMBATTUR, Chennai - 98. Ph: 623 3957.

BANGALORE : Steelwin, 131, Devaiha Plaza, Residency Road, Bangalore - 560 025. Ph: 080 - 2210541, 2221866

DEALERS

• **Purasawalkam :** ○ Sakthivel Enterprises, Ph: 6433556 • **Annanagar :** ○Carrefour, Ph:6210933. ○J.F.A, Ph: 6223377. **National Furnitures,** Ph:6212666, • **Annasalai :** ○Apollo chairs, Ph:8411960. ○Spencer & Co., Ph: 8523611. ○Challarams, Ph: 858 3046 • **Royapettah High Road :** ○J.F.A., Ph: 813 1384.○Sathya Furniture Co. Pvt. Ltd., Ph: 4983929. ○ Cyber Cove Furniture Mart, Ph: 8207211. • **Ashok Nagar :** J.F.A. Ph: 3713493. • **Teynampet:** ○Imperial Furniture Co., Ph: 4349644. ○Kapsons, Ph:4339986. • **T.Nagar :** ○Fantasy Furniture Co., Ph : 8234420. ○Gunsa Marketing, Ph: 4340083. ○Muthu Furniture, Ph:4344193. ○New Gold House Foams & Furnishers, Ph: 8230375. ○Anush Furniture, Ph: 4338021. • **Lloyds Road :** ○Indroyal Furniture Co., Ph: 826 8966. • **Vadapalani:** ○Palve, Ph: 4840812. • **Egmore:** ○New Foam Palace, Ph : 8250688 • **Kilpauk :**○Seating World, Ph : 6444005 • **Adyar :** ○Deepak Furnitures, Ph: 4465625 ○Maruthi Decors, Ph: 4420783 • **Thiruvanmiyur :** ○Punyas Agencies, Ph: 4451520. ○Jayaraja Furniture, Ph: 4456315 • **Guindy:**○Cybercove Furniture Mart, Ph : 2322111 • **Nanganallur :** ○Balasubramaniam & Co., Ph: 2332425 • **Avadi :** ○Sri Lakshmi Agencies, Ph: 6551549 • **Thiruvottiur:**○Comfort Foams & Furniture, Ph : 5735849

List of Dealers in Tamil Nadu

• **Coimbatore:** Elite Furniture, Ph: 399122. Rexin Land, Ph:233240. Elite Furniture Mart, Ph:236662. Carrefour, Ph: 302303. • **Erode :** A.P. Thomas, Ph: 257471. • **Karaikudi :** Sree Laxmi & Sons, Ph:38288 • **Kumbakonam:** Standard Steel Furniture, Ph: 421846. Bismi Furniture, Ph: 425262. • **Madurai :** Saca Enterprises, Pvt. Ltd., Ph: 536212. Sri Vinayakam Furniture, Ph: 746748, Saca & Sons, Ph: 747656. • **Mayiladuthurai:** Bismi Furniture Pvt. Ltd., Ph: 22856. • **Nager Koil:** Rohith Furniture, Ph: 76955. • **Pudukottai:** Mumtaj Furniture Mart, Ph: 22060 • **Ramanathapuram:** Surya Home Applicants, Ph: 21009. • **Salem:** Millennium Neo Furn, Ph: 419145. • **Thanjavur:** Standard Steel Furniture, Ph: 31493. • **Tirunelveli:** Bright Furniture, Ph: 333028. • **Tirupur:** Woodland Furniture works, Ph: 425181. • **Trichy:** Cauveri Furniture, Ph: 764661 - Galaxy Wood House, Ph: 763551 - Vedham Furniture, Ph: 760433. • **Tuticorin:** Ganga Rajesh Furniture, Ph: 326245. • **Kovilpatty: Bharath** Furniture Super Market,Ph: 21258 • **Vellore :** T.P.G. & Sons, Ph : 20333. • **Sivakasi :** Bharath Agencies, Ph: 422789. • **Sankaran Kovil :** Rajesh Agencies, Ph:22410


List of Dealers in Kerala

• **Calicut:** ○Ruby Furniture Co., Ph: 721307 • **Cochin:** ○Diwaniya Associates, Ph:330886 ○Manuel Sons Exporters Pvt Ltd, Ph: 366742 ○Comfort Furnitures & Interior Decorators, Ph : 345686 • **Thiruvananthapuram:** ○Mankar (Motors)Ltd., Ph: 477420 • **Trichur:** ○M.D. Francis & Sons, Ph:420613 ○M.D. Francis & Co., Ph: 212464 ○Furniture Plaza, Phone : 443453

List of Dealers in Andhra Pradesh

• **Hyderabad:** ○Furniture World, Ph: 3353708 ○ Om Prakash Iron Metal Works, Ph : 4602260 - ○Posh Living Furniture, Ph: 6661322 • **Nellore:** ○House Beauty Furniture, Ph: 326586 • **Secunderabad :** ○Aalishaan Furniture, Ph : 7844750 ○Linga Plaza, Ph:7744859 • **Visakhapatnam :** ○Wood Decor, Ph:706752 ○Wood Land, Ph: 552313 ○Bubai's Furniture Furnishings, Ph: 516255 ○The Decograph Interiors, Ph: 530770 • **Vijayawada :**○Amulya Steel Wood Furnitures, Ph: 574584 ○Alankar Tubular Furniture Mfg.Co., Ph: 579725

PONDICHERRY: Bismi Furniture Pvt. Ltd., Ph: 346139. Sadhuram Industries, Ph: 338568.


ஜனவரி 23, 1935

இனியவளே,
சென்னையிலிருந்து அன்பொழுக
நீ எழுதிய கடிதம் கிடைத்தது.
உன் இதயம் தாங்கிய அந்தக்
கடிதத்தில் நான் நிறைந்திருப்பதை
உணர்ந்தேன். எத்தனை
இடங்களாக, மலர்ந்தும் மெலிய
உன் இதயத்தில் இடம் பெற்றிருப்
பதை வார்த்தைகளில் விளக்க
முடியாது. என்னால் காதல்
சொல்ல முடியாத அன்பில்
நிறைந்திருக்கிறது.

காலம் இவ்வளவாக நகர்ந்து
கொண்டிருந்தாலும் உனக்கும்
எனக்குமான அந்யோன்ய உறவு
வளர்ந்து கொண்டுதான் இருக்கும்.
எத்தனையோ துன்பத்தையும்
துயரத்தையும் தாங்கிக் கொண்டிருந்
தாலும் இந்த உறவு தொடர்வது
மகிழ்ச்சி ஊற்றாகவே இன்பமே!

– இந்தக் காதல் கடிதத்தை எழுதியவர்
யாரென்று தெரிகிறதா?...
எண்பத்தொன்பதாம் பக்கத்தில் எட்டிப் பாருங்கள்...!

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com   ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

காதலுக்காக ஏங்கினேன்!

காதலை மண்வாசனையோடு படம் பிடிக்க பாரதி ராஜா, பிரம்மாண்ட அழகியல் கலந்து காதலைப் பார்க்கும் கதிர், நாட்டு நடப்போடு காதலின் கலவையைத் துல்லியமாகக் கலக்கும் மணிரத்னம். இப்படி காதல் மீது காதல் வருவது போன்று படமெடுக்கத் தெரிந்த இயக்குனர்கள் வரிசையில் உணர்ச்சிகரமான காதலுக்குச் 'சொல்லாமலே சசி' என்று சொல்லிவிடலாம்.

மூன்றாண்டு இடைவெளிக்குப் பிறகு 'ரோஜாக் கூட்டம்' படத்தை எடுத்து முடித்துவிட்டு, பின்னணி இசைச் சேர்ப்பில் பிஸியாக இருந்த சசியிடம் "ஏன் இத்தனை இடைவெளி?" என்று பேச்சுக் கொடுத்தோம். "கதைதான் காரணம்" என்றபடி பேச ஆரம்பித்தார்.

"நல்ல கதை இருந்தால் மட்டும்தான் ரசிகர்கள் படம் பார்க்க வருவார்கள். நான் கதையைத்தான் முதலில் நம்புகிறேன். அடுத்த படத்திற்கு நல்ல கதையைத் தயார் செய்யமால் களத்தில் இறங்க விரும்பவில்லை. நல்ல கதை என்றால் ஐந்து வருட இடைவெளி கொடுத்து படமெடுத்தால்கூட, ரசிகர்கள் கைவிட மாட்டார்கள். நம்மை மறக்கவும் மாட்டார்கள். அதேபோல கதை மீது நம்பிக்கை வைக்கிற தயாரிப்பாளரும், நம்மைப் போன்றவர்களை எங்கிருந்தாலும் தேடிப் பிடித்து கூட்டி வருவார்கள். மூன்று வருட இடைவெளிக்கு இன்னொரு காரணமும் உண்டு. 'சொல்லாமலே' படத்தை தெலுங்கில் ரீமேக் செய்வதற்காக ஒன்றரை வருடம் செலவிட்டேன். இப்போது ரோஜாக் கூட்டத்தையும் இதே கால அளவில் உருவாக்கியிருக்கிறோம்" என்றவரிடம் "காதலுக்காக நாயகன் நாக்கை அறுத்துக் கொள்ளும் அதீத உணர்ச்சியோடு சொல்லாமலே படத்தை எடுத்திருந்தீர்கள். ரோஜாக் கூட்டத்திலும் அப்படியொரு அதீத காதல் உணர்ச்சியைத் தான் கையாண்டு இருக்கிறீர்களா?" என்றால், திட்டவட்டமாக மறுக்கிறார்.



"சொல்லாமலே படத்தில் நான் சொல்ல வந்த விஷயத்தைத் தப்பாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள். காதலி கிடைக்க வேண்டும் என்பதற்காகவோ காதலுக்காகவோ, நாயகன் தியாகம் பண்ணவில்லை. தன்னை ஒரு வாய் பேச முடியாதவன் என்று நம்பிக் கொண்டிருக்கும் பெண்ணை அவன் ஏமாற்ற விரும்பவில்லை. அதை அவன் வசனத்திலேயே சொல்லுவான். தூய காதல் எப்படி ஒருவனை உண்மையுள்ளவனாக மாற்றுகிறது என்பதுதான் படத்தின் கரு. தன்னை உண்மையானவனாக மாற்றிக் கொள்ளத்தான் நாயகன் தியாகம் செய்கிறான். ரோஜாக் கூட்டத்தின் கதையைக் காதலின் வேறொரு விளிம்பு நோக்கி நகர்த்தியிருக்கிறேன். காதலின் கடைசி கட்டம் அல்லது உச்சமே காதலை எதிர்பார்க்காமல் இருப்பதுதான். அதை மிகைப்படுத்தாத, கொஞ்சம் கற்பனை கலந்த யதார்த்தமாகச் சொல்லியிருக்கிறேன்" என்ற சசியிடம், "வளர்ந்து வரும் இயக்குனர்கள், முன்னணி ஹீரோக்களை நம்பித்தானே

இரண்டாவது முயற்சியில் குதிப்பது வழக்கம். நீங்கள் புதிய ஹீரோவை அறிமுகப் படுத்துவதன் பின்னணி என்ன?" என்றால், "இந்தக் கதைக்கு இமேஜ் இல்லாத நாயகன்தான் தேவை. கதைக்கு



எப்படி மரியாதை தருகிறோமோ அதே போல கதைக்கு ஏற்ற நடிகர்களைத் தேர்வு செய்வதிலும் கவனம் செலுத்தினால்தான் நல்ல சினிமா கிடைக்கும்... அந்த வகையில் இந்தக் கதைக்குப் புதிய ஹீரோ தான் வேண்டும் என்றபோது, என்னை நம்பி ஒத்துக் கொண்ட தயாரிப்பாளர் ஆஸ்கார் ரவிச்சந்திரனின் பெருந் தன்மையை நன்றியோடு நான் நினைவு கூர விரும்பு கிறேன்'' என்கிறார்.

''சினிமா காதலுக்கும், நிஜக்காதலுக்குமான இடை வெளி குறைந்து வருவதற்கு, காதல் பற்றிய சினிமாவின் ரீல் சுற்றல்தானே காரணம்?'' என்றால் "பூங்கா, கடற்கரை, திரையரங்கம் என்று நிறைய காதலர்கள் சுற்றுவதை வைத்து நீங்கள் இப்படிக் கேட்கிறீர்கள் என்று தோன்று கிறது. சினிமா என்பதே வாழ்க்கையைப் பிரதிபலிக்கிற விஷயம். யதார்த்தத்தோடு கொஞ்சம் கற்பனையையும் கலந் தால்தான் பார்க்க முடியும். நூறு விழுக்காடு யதார்த்தம் என்றால் விவரணைப் படத்தொனி வந்து விடும். யதார்த்தமாகப் படம் எடுக்க முடியவில்லை என்றா லும் இல்லாததை எடுப்பதும், தீய விஷயங்களை எடுப்பதையும் தவிர்த்து விடலாம். யதார்த்தத் தோடு கொஞ்சம் கற்பனை கலப்பதில் தவ றில்லை. ரசிகர்களுக்கு, சினிமாவில் எவையெல் லாம் ஜிகினாத்தனமென்று நன்றாகவே தெரி யும். காதலர்கள் இன்னும் விவரமானவர் கள்."

"இன்டர்நெட்டில் காதலித்துக் கைபிடிப் பது மாதிரியான ஹைடெக் காதல் விவ காரம் எல்லாம் நிரந்தமானதா?"

'நிச்சயமாக' என்கிறார் சசி.

"காதலில் கருத்துப் பரிமாற்றம் என்பது மிக முக்கியம். நமது திருமண அமைப்பில் கூட, மணமாவதற்கு முன்பு, பெண்ணோ, பையனோ கலந்து பேசி தங்கள் உள்ளக் கிடக்கையைப் பரிமாறிக் கொள்ள முடி யாத நிலைதான் இன்றும் நீடிக்கிறது. பெற்றோரின் நிர்ப்பந்தத்திற்காக கழுத்தை நீட்டுகிற, தாலி கட்டுகிற இளைஞர்கள், யுவதி களின் விழுக்காடுதான் அதிகம். இணையம் மாதிரியான ஒன்று பெரிய வரப் பிரசாதம். அங்கே வெறும் உடல் அளவுகள் மட்டுமல்ல, கருத்துக் களையும் பரிமாறிக் கொள்கிறார்கள். முழுவதுமாக புரிந்து கொள்கிறார்கள். இன்டர்நெட் வழியே வெற்றி பெறுகிற காதல் பக்குவப்பட்டதாகத்தான் இருக்கும் என்பது என் நம்பிக்கை. விதிவிலக்குகளைப் பற்றிக் கவலைப் படத் தேவையில்லை'' என்றவரிடம் அவரது பிள்ளைக் காதல், பள்ளிக்காதல், கல்லூரிக் காதல் பற்றிக் கேட் டோம்.

"என்னை யாரேனும் காதலிக்க மாட்டார்களா? என்று ஏங்கியிருக்கிறேன். ஆனால், இப்போது தீவிரமாக காதலித்துக்கொண்டிருக்கிறேன், அவர் என் மனைவி இதா'' என்கிறார், கொஞ்சமாய் வெட்க ரேகைகள் முகத்தில் பரவ!

சந்திப்பு: ஜெ
படங்கள்: வர்ஷா

— சொல்லாமலே சசி

என் ப்ரியமானவளுக்கு,

நான் உன்னை உயிருக்குயிராகக் காதலிக்கிறேன். நீயில்லா வாழ்க்கை நீரில்லா மீன்போல்தான். உன்னுடன் பேசவும், பழகவும் துடிக்கிறேன். நாளை மாலை பள்ளி முடிந்ததும் அந்த டெலிபோன் பூத் அருகில் நிற்கவும். நீ நின்றால் என்னைக் காதலிப்பதாக அறிந்து கொள்கிறேன். இல்லையென்றால் என்னை வெறுக்கிறாய் என்று தெரிந்து கொள்கிறேன்.

– சமூக சேவகர் ஒருவர் இந்தக் காதல் கடிதத்தை நம்மிடம் காட்டியதும் அதிர்ந்தே போய்விட்டோம். காரணம் இதை எழுதியது கல்லூரி மாணவரோ, மாணவியோ அல்ல. ஒன்பதாம் வகுப்பு மாணவன், தன் வகுப்புத் தோழிக்கு எழுதிய கடிதம்தான் இது.

ஒன்பதாம் வகுப்பிலேயே காதலா?

"அட போங்க சார்... ஸ்கூல் யூனிபார்மிலேயே ஆட்டோல உட்கார்ந்து பீச்சுக்குப் போறாங்க. உள்ளே உட்கார்ந்து அவங்க பேசற பேச்சும், கூத்தும் ரொம்ப கேவலமாயிட்டுதுசார். நான் படிக்கும்போதெல்லாம் பொம்பளை புள்ளைங்ககிட்ட பேசினாலே கொலை குத்தம் மாதிரி. இப்ப பாருங்க. ரொம்ப கெட்டுப் போச்சுங்க" என்கிறார் திருவல்லிக்கேணி பகுதியில் ஆட்டோ ஓட்டும் சரவணன்.

இந்தச் சின்னஞ்சிறு(?!) காதலர்களைப் பல பகுதிகளின் பஸ் ஸ்டாண்டுகளிலும் தெருக்களிலும் சினிமா தியேட்டர்களிலும் உச்சி வெயிலில் பீச்சிலும் பார்க்க முடிகிறது. வண்டலூர் ஜூவிற்கு யூனிபார்ம் மாணவ மாணவிகள் சேர்ந்து வந்தால் டிக்கெட் அனுமதி மறுக்கப்படுகிறதாம். ஆனால் பீச்சில்?...

"நாங்க என்னங்க பண்ண முடியும். சின்ன பசங்கன்னு தெரிஞ்சா... ஏய் எந்த ஏரியான்னு கேட்டா.. அவனைத் தெரியும், இவனைத் தெரியுங்கறாங்க. வீட்டைப் பார்த்து ஓடுங்கன்னு கொஞ்சம் அதட்டி விரட்டத்தான் முடியும். வேறென்ன பண்ண முடியுங்கறீங்க?" என்கிறார் போலீஸ்காரர் ஒருவர்.

"முளைச்சு மூணு இலை விடலை, அதுக்குள்ள இப்படியா?" என்று மனசுக்குள்ளேயே கேள்விகேட்டுப் பொதுமக்களும் செல்வதால் இவர்களுக்கு யாரைப் பற்றியும் கவலையில்லை.

பெற்றோர்கள் இருவரும் பணியிலிருப்பவர்களாக இருந்தாலோ இவர்கள் பாடு கொண்டாட்டமாகி விடுகிறது. வகுப்புக்கு 'டாட்டா' காட்டிவிட்டு வீட்டில் பொழுது கழிக்க ஆரம்பித்து விடுகின்றனர்.

"சினிமா, டி.வி. என்று எல்லாவற்றிலும் காதல்.. காதல் என்று ஒரே பல்லவியாகிப் போக இந்த ஓவர் டோஸின் விளைவுதான் இப்படி" என்கிறார் அண்ணா நகரைச் சேர்ந்த குடும்பத் தலைவி ஒருவர்.

இவர்களை, பள்ளிக் கூடத்தில் ஆசிரியர்களும், வீட்டில் பெற்றோர்களும் எப்படி அணுகுவது? சின்னப் பிள்ளைகளின் விவரமறியாத விளையாட்டுத்தனம் என்று ஒதுக்கித் தள்ளி விடலாமா? இல்லை, விபரீதத்துக்கு வித்திடும்



விவகாரம் என்று அடக்கி வைக்க வேண்டுமா?

பள்ளி நிர்வாகத்தில் பல்லாண்டு அனுபவமுடையவர்; அந்தக் காலத்திலேயே காதலித்து திருமணம் செய்து கொண்டவருமான திருமதி ஒய்.ஜி.பியிடம் கேட்டபோது:

"பொதுவாக பத்து, பன்னிரண்டு வயதாகிற போதுதான், பையனோ, பெண்ணோ, தங்கள் உடலில் ஏற்படும் பாலியல் ரீதியான வேறுபாடுகளை உணர ஆரம்பிக்கிறார்கள். இதனால் ஆரம்பத்தில் அவர்களுக்குள் ஒருவித வெட்கம் இருக்கும். நாளடைவில் அதுவே அடுத்த இனத்தின் மீது ஒருவித ஈர்ப்பை ஏற்படுத்தும். இதுதான் இயற்கை.

"ஆனால், இன்றைய சினிமா, டீ.வி. போன்ற மீடியாவின் அதித பாதிப்பால், இந்த இயற்கையான கவர்ச்சியை, இவர்கள்

யூனிபார்ம் காதல்!

'காதல்' என்று தப்பு அர்த்தம் பண்ணிக் கொண்டு விடுகிறார்கள். இந்த சமயத்தில், ஆசிரியர்களும்சரி, பெற்றோர்களும் சரி, வெகு ஜாக்கிரதையாக அவர்களை நெறிப்படுத்த வேண்டும்.

"முதலில் கவனிக்க வேண்டிய விஷயம், 'ஐ லவ் யூ' என்று சொன்னதையோ லவ் லெட்டர் எழுதிக் கொடுத்ததையோ, குற்றமாகச் சுட்டிக்காட்டி, அவர்களை, அதற்காக தண்டிக்க முற்படக் கூடாது. அதனால் எதிர்மறையான விளைவுகளே ஏற்படும்.

"மாறாக, சம்பந்தப்பட்ட பையனையும், பெண்ணையும் அழைத்து, இந்த 'லவ்' சமாசாரமெல்லாம், படிக்கிற இந்த வயதுக்கு அவசியமில்லாதது. காதலிக்கவும், கல்யாணம் பண்ணிக் கொள்ளவும், தக்க வயது இருக்கிறது. அதற்குள் அவசரப்படக் கூடாது என்று ஆலோசனை சொல்லி, அவர்களுக்கு ஏற்பட்ட மன சஞ்சலத்தைத் தெளிவாக்கி, ஒரு



வழி காட்டும் நண்பர்போலச் செயல்பட்டால், அது பாசிடிவ் ஆன பலனைக் கொடுக்கும்.

"உதாரணத்துக்கு ஒரு சம்பவத்தை இங்கே நினைவு கூர விரும்புகிறேன். எங்கள் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த ஒரு பையனுக்கும், ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணுக்கும் 'காதல்'. பள்ளிக்கூடத்திற்கு வந்து விட்டால், இடைவேளை நேரங்களில் இரண்டு பேரும் சந்தித்துக் கொள்ளுவார்கள். காலையில் பள்ளிக் கூடம் ஆரம்பிக்கிறநேரத்துக்கு ரொம்பவும் முன்னாலேயே இரண்டு பேரும் ஸ்கூலுக்கு வந்து விடுவார்கள். பள்ளி விட்டவுடன், வேறு எங்கேயாவது போய் சுற்றிக் கொண்டு இருந்து விட்டு, லேட்டாக வீடு திரும்புவார்கள். பெண்ணின் வீட்டிலோ, அம்மாவுக்கு உடல் நலமில்லை. எனவே அந்தப் பெண்ணின் நடவடிக்கைகளைத் தட்டிக் கேட்பாரில்லை.

ஆனால், விஷயம் பெண்ணின் கிளாஸ் டீச்சருக்குத் தெரிந்துவிட்டது. அவர் என் கவனத்துக்குக் கொண்டு வந்தார். நான் இரண்டு பேரையும் கூப்பிட்டேன். "நீங்கள் இரண்டுபேரும் ஒருவரையொருவர் காதலிக்கிறீர்களா?" என்று கேட்டேன். 'ஆமாம்' என்றார்கள்.

"அடுத்து, "காதல் என்றால் என்னவென்று அர்த்தம் தெரியுமா உங்களுக்கு? உங்களுக்கு இடையில் ஏற்பட்டிருப்பது நீங்கள் நினைத்துக் கொண்டு இருப்பது மாதிரி காதல் இல்லை. வெறும் எதிர் இனத்தின் மீதான கவர்ச்சி! என்று எடுத்துச் சொன்னேன்.

"காதலிப்பதாக சொல்லிக் கொள்ளும் உங்கள் இருவருக்கும், பெற்றோர்கள் எதிர்ப்பு தெரிவித்தால், நீங்கள் என்ன செய்வீர்கள்? வீட்டைவிட்டு வெளியேறி,



திருவண்ணாமலை நகரச் சிறப்பிதழ்!

* அருணகிரிநாதரில் தொடங்கி, ரமணர், சேஷாத்ரி சுவாமிகள், யோகி ராம்சுரத்குமார் போன்ற மகான்கள் வாழ்ந்த உங்கள் புனித நகரம், இப்போதும் ஆன்மிகத்தைச் சுவாசிக்கிறதா...?
* அண்ணாமலையார் அருள்தேடி வரும் கிரிவல பக்தர்களின் அனுபவங்கள் என்ன?
* தினந்தோறும் உலகெங்கிலுமிருந்து பயணிகள் வந்து போகும் உங்கள் ஊர் உதாரண நகரமாக உயர உங்களிடம் யோசனைகள் உண்டா?
* தொடரும் சர்ச்சைகள், நடப்பு அரசியல், நிறைவேற்றப்படாத திட்டங்கள், வியப்பில் ஆழ்த்தும் வினோதங்கள், விபரீதங்கள் எதைப் பற்றியும் எங்களுக்கு எழுதுங்கள். கடைசி தேதி (28.2.2002) வரை காத்திருக்காமல் இன்றே எழுதி அனுப்புங்கள்.

திருமணம் செய்து கொண்டு தனியாக வாழ்க்கையைத் தொடங்குவீர்களா? அதற்கான பொருளாதார சுதந்திரம் உங்களுக்கு இருக்கிறதா? மைனரான நீங்கள், திருமணம் செய்து கொள்ள சட்டத்தில் இடமில்லை என்பதாவது உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டேன்.

'நீங்கள் தவறு ஏதும் செய்ததாக நான் கருதவில்லை. எனவே உங்களுக்கு யதார்த்தத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தண்டனை ஏதும் தரவிரும்பவில்லை. ஆனாலும் உங்கள் எதிர்கால நன்மையைக் கருதி, நம் பள்ளியின் இருவேறு கிளைகளில் படிக்க நடவடிக்கை எடுக்கப் போகிறேன். காதல் விவகாரங்களையெல்லாம் இத்துடன் மூட்டை கட்டி வைத்துவிட்டு, பாடங்களில் முழு கவனம் செலுத்துங்கள். நன்கு படித்து, வேலைக்குப்போய் வாழ்க்கையில் செட்டிலான பிறகு, அப்போதும் நீங்கள் இரண்டு பேரும் ஒருவரையொருவர் மனதார விரும்புவதாகக் கருதினால், என்னிடம் வாருங்கள். உங்கள் பெற்றோர்களைச் சமாதானப்படுத்தி, உங்கள் திருமணத்தை நானே நடத்தி வைக்கிறேன்'' என்று அறிவுரை கூறினேன்.

"அந்த இரண்டு பேரும், நன்கு படித்து, முன்னேறி, காதலைப் புதுப்பித்து திருமணம் செய்து கொண்டு இப்போது அமெரிக்காவில் இருக்கிறார்கள்.

"நம் கலாசாரத்தில் அடுத்தவருக்கு நம் மரியாதையைத் தெரிவிக்க, கைகூப்பி வணக்கம் தெரிவிப்பதுதான் மரபு. கைகுலுக்குதல் போன்றவைகள், ஸ்பரிசம் என்பதன் அடிப்படையில் நிகழ்வதால், அது தேவையில்லாத எதிரினக் கவர்ச்சிக்கு வழி கோலிடக் கூடும். அதேபோல, ஒவ்வொரு ஆணும் தனக்குத் தானே சில கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு, வாழ வேண்டும். இதுவே 'பிரம்மச்சரிய' தத்துவத்தின் அஸ்திவாரம். இது போன்ற சுயகட்டுப்பாடு, ஆண், பெண் இருபாலருக்குமே பொதுவானது.

"ஆரம்பத்திலிருந்தே, புற அழகு அடிப்படையிலான கவர்ச்சியாகப் பெண்களைப் பார்க்காமல் அவளும் ஒரு சக மனுஷி; யோசிக்கத் தெரிந்த புத்திசாலி என்று பார்க்க வேண்டும். அடுத்தவரை மதிக்கக் கற்றுக் கொண்டு விட்டால், பிரச்னைக்கு இடமில்லை.

"காதல் என்பது கண்டனத்துக்குரியது இல்லை. படிக்கிற வயசில் காதலுக்கு இடமில்லை என்று குழந்தைகளுக்குப் புரிய வைப்பது பெரியவர்களின் கடமை."

— அப்பு, மௌலி

ஆண்டிப்(ப)பட்டி!



● கண்டனூர் அம்பேத்கார் சிலை அருகில் முதல்வர் பன்னீர் பேசும் போது கூட்டத்தில் இருந்த வேலாயுதபுரம் பாண்டியன் அடித்த கமெண்ட்ஸ் சில:

"ஐயா... என்னத்தய்யா பேசப் போற?"

"'டம்மி' வந்துட்டாரு"

"உன்னை 16வது ஆளா (சிறந்த முதல்வர்கள் வரிசையில்) போட்டுட் டாங்களே ஐயா."

"பிப்ரவரி 24க்கு அப்புறம் ஐயாவுக்கு என்ன பொழைப்புன்னு கேளுங்கப்பா?"

"புரட்சித் தலைவர் எம்.எல்.ஏ.வாக இருந்த போதுதான் தொகுதியில் பல வளர்ச்சிப் பணிகள் நடந்தன. அதன் பிறகு ஒன்றுமே இல்லை" என்றார் பன்னீர். 91-96 ஜெ. ஆட்சி காலத்திலும் ஒன்றும் செய்யப்படவில்லை' என்பதைச் சொல்லிவிட்டாரே!



● "தி.மு.க. எங்களை எதிர்த்து அல்லவா வேட்பாளர் போட்டி ருக்கிறது. நாங்கள் தான் ஆளும் கட்சியை முழு பலத்துடன் எதிர்க்கிறோம்" என்கிறார் ம.தி.மு.க. வேட் பாளரான ஜெயச்சந்திரன். தொகுதியில் மாற்றுக் கட்சிக்காரர்களைக் கூட மாமா, மச்சான் என்று பாசத்துடன் அழைக்கும் வகையில் நெருங்கியிருக்கிறார் இவர். கல்லூரியில் படிக்கும்போது 1970களில் கலைஞருடன் திருச்செந்தூருக்கு நீதிகேட் டுப் பயணம் செய்திருக்கிறார். தவிர 1996ல் தி.மு.க. வேட்பாளர் வைகை சேகர் ம.தி.மு.க. சார்பில் நின்றபோது முழுக்க முழுக்க அவருக்காக வேலை செய்தவர் இவர்.

● கடமலைக்குண்டு ராஜு"வுக்கு பிளாஸ்டிக் குடங்கள், மற்றும் தட்டுமுட்டுச் சாமான்கள் விற்கும் வியாபாரம். "எட்டு கிராமத்தைச் சுற்றி வந்தும் என் வருமானம் இன்று 60 ரூபாய் தான்" என்று காண்பிக்கிறார். "எம்ஜியார் (MGR) உயிரோட இருக்கிற வரை நம்ம இரட்டை இலைதாங்க.. இப்ப என்னங்க அரசியல் நடக்குது. பெரிய மீன் சின்ன மீனைச் சாப்பிடப் போகுது.



கிராமங்கள்ள பார்த்தா வெள்ளையும் சொள்ளையுமாக அம்மா கட்சிதான் கண்ணுக்குத் தெரியறாங்க" என்கிறார். நல்ல தமாஷாகப் பேசுவாராம் ராஜு". பா.ஜ.க., சி.பி.எம். என்று இரண்டு கட்சிக்காரர்கள் கூப்பிடுகிறார்களாம். "பொழைப்பு முக்கியம்" என்று சைக்கிளை மிதிக்கிறார். (நாம் இவரை நடுரோட்டில் மடக்கிய போது அ.தி.மு.க. கரை வேட்டி கட்டிக் கொண்டு வோட்டுக் கேட்ட ஸ்பெஷல் பிராஞ்ச் போலீஸ் பற்றி தனிக்கதை எழுத வேண்டும்.)



● "நான் எதுவும் பேசாமல் இருக்கும்போதே அதைச் சொன்னார்; இதைச் சொன்னார் என்று பரபரப்பு உண்டாக்குகிறார்கள்" என்கிறார் மு.க. அழகிரி. காலை எட்டு மணிக்கு தேர்தல் ஆபிஸில் ஆஜராகி விடுகிறார். எட்டரைக்குப் பிரசாரத்துக்குக் கிளம்பி விடுகிறார். வீடு, வீடாகச் சென்று வோட்டு கேட்கிறார். அவருடன் வேட்பாளர் வைகை சேகர் கூட செல்வதில்லை. "உங்களுக்கும் ஸ்டாலினுக்கும் மோதல் என்றும் அதனால் தி.மு.க. பிரசாரம் பாதிக்கப்படுகிறது'' என்றும் சொல்கிறார்களே என்று கேட்டபோது, முதலில் சொன்ன பதில்தான் அழகிரியிடமிருந்து வந்தது. "நீங்களும் ஸ்டாலினும் சேர்ந்து பிரசாரம் செய்தால் செல்வாக்கு கூடுமே!" என்றபோது "அவரவர்கள் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டுச் செய்து கொண்டிருக்கிறோம். தனித்தனியாகச் சென்றால் நிறைய பகுதிகளை கவர் செய்யலாமே" என்று வழுக்கினார்.



ஆபாச பேச்சு!

● ராதா ரவி, ஜூனியர் பாலையா, நடிகை சி.ஆர். சரஸ்வதி என்று பல கலைஞர் களைக் களம் இறக்கி இருக்கிறது ஆளுங்கட்சி. இதில் நடிகை சரஸ்வதி, சில காலம் ம.தி.மு.கவில் இருந்தவர். அப்போது அடக்கி வாசித்த இந்த நடிகை இப்போது ஆண்டிப்பட்டியில் அவிழ்த்து விடும் ஆபாச பேச்சுக்களுக்குப் பஞ்சமில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், அவரது ஆபாசப் பேச்சு சில சமயங்களில் அப்பாவி ஜனங்களுக்குப் புரியவில்லை என்பதுதான். (தேங்க் காட்!)



● ''முக்குலத்தோர் பிரிவைச் சேர்ந்த பன்னீருக்கு, அம்மா முதல்வர் பதவியைக் கொடுத்தார். அதனால் அவருக்கு வோட்டுப் போடுங்கள்" என்று ஆளும் கட்சியினர் பேசுகிறார்கள். "அப்படியா சேதி! அந்த அம்மாவைத் தேர்ந்தெடுத்தால் பன்னீரின் பதவி காலியாகும்'' என்றுதான் நாங்கள் சொல்கிறோமே தவிர இதில் ஜாதி உணர்வைத் தூண்டக் கூடிய எதுவும் இல்லை" என்கிறார் வைகை சேகர். வைகை அணையை ஒட்டியிருக்கும் இவரது கிராமத்தில் ஆளுங்கட்சியின் பிரசாரம் தான் பனிச்சென்று தெரிகிறது. "இந்த கிராமத்தில் கூட சேகருக்கு வோட்டு விழாது'' என்று சொல்கிறார்கள் அ.தி.மு.க. பிரமுகர்கள்.


இலையை மறந்துடாதே!

● மயிலாடும் பாறையில் குருவம்மாவைச் சந்தித்தோம். நாற்பது வருடங்களாக போலீஸ் ஸ்டேஷனில் துப்புரவாளராகப் பணிபுரியும் குருவம்மாவிற்கு இரட்டை இலையைத் தவிர வேறு எதுவும் தெரியாதாம். ஆனால் "இந்த முறை நீ என்ன கண்ணு சொல்லுற" என்று நம் முகவாய்க் கட்டையைப் பிடித்தார். பாட்டியின் தடுமாற்றத்திற்குக் காரணம்:

"வருசா வருசம் ஒழுங்கா கொடுத்துட்டு வந்த பொங்கல் வேட்டிச் சேலையை இந்த வருஷம் கொடுக்கலியே ஐயா... ஏழைங்க எங்கே போறது" என்று கேட்டார் குருவம்மா பாட்டி.

"பாட்டி... அதெல்லாம் சரியாயிடும்... இலையை மறந்துடாதே" என்றார் அருகிலிருந்த டீக்கடை உரிமையாளர்.





• "தி.மு.க.தான் ஜாதி உணர்வைத் தூண்டி விடுகிறது" என்கிறார் முக்குலத்தோர் அமைப்பான மூவேந்தர் முன்னேற்ற கழகத்தின் ஸ்ரீதர் வாண்டையார். "தி.மு.க.வில் எத்தனையோ பிரமுகர்கள் இருக்க, முக்குலத்தோர் பிரிவைச் சேர்ந்த டி.ஆர். பாலு, கோ.சி. மணி, தா. கிருஷ்ணன், ஐ. பெரியசாமி ஆகியோரைத் தேர்தல் வேலை செய்ய இங்கே அனுப்பியிருக்கிறதே தி.மு.க. தலைமை; இதிலிருந்தே ஜாதியைப் பயன்படுத்த நினைப்பது தி.மு.க. என்பது புரியுமே" என்கிறார் ஸ்ரீதர். ஐந்து வருட தி.மு.க. ஆட்சியில் 16 இடங்களில் தேவர் சிலை உடைக்கப்பட்டதாகவும், முக்குலத்தோர் மீது வன்கொடுமை சட்டத்தில் கேஸ் போடப்பட்டதாகவும் புள்ளி விவரம் சொல்கிறார் அவர்.

பழமொழி!

• "அறுக்க மாட்டாதவன் இடுப்பைச் சுற்றி அரிவாள் எதற்கு?" – இப்படிக் கேட்டார் வைகோ! விஷயம் என்னவாம்?

"28 சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு, சட்டமன்றத்தில் ஜெயலலிதாவை எதிர்க்க தி.மு.க. பயப்படுகிறது. எனவே எதற்கு தி.மு.கவுக்கு மற்றொரு எம்.எல்.ஏ.? ஆகவே உங்கள் வோட்டை ம.தி.மு.க.வுக்குப் போடுங்கள்"– பழமொழியின் பின்னணி இது தான்.

சுற்றி வளைத்த மக்கள்!

• தேர்தல் விதிகளை மீறாமல் ஆடம்பரம் தவிர்த்து, பிரசாரம் நடைபெறுகிறதா? என்று பார்க்க மூன்று அப்சர்வர்களை (ஐ.ஏ.எஸ்.



அதிகாரிகள்) தேர்தல் கமிஷன் போட்டிருக்கிறது. அவர்களைப் பார்த்து மிகவும் அப்செட்டாகிப் போயிருப்பவர்கள் ஆளுங்கட்சிக்காரர்களே! கட்அவுட்கள், ஆளுயர தட்டிகள், பேனர்கள் வைக்க முடியவில்லை. கொடித் தோரணங்கள் கூட, ஓரளவுக்கு மேல் கட்ட முடியவில்லை. குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் தேர்தல் பணிகளுக்கும், பிரசாரத்துக்கும் வாகனங்களை வைத்துக் கொள்ள முடியவில்லை. எனவே தொகுதியில் கொடி கட்டாத வண்டிகளில் பறக்கிறார்கள் ஆளுங்கட்சிப் பிரமுகர்கள், அமைச்சர்கள் துரைராஜ், சண்முகநாதன் ஆகியோரை, கொடி கட்டாத கார்களில் கிராமங்களில் பார்க்க முடிந்தது. ஆனால் அப்படிச் சென்றும் கைத்தறி துறை அமைச்சர் சண்முகநாதனை, 'பொங்கலுக்கு வேட்டி – சேலை ஏன் கொடுக்கவில்லை?' என்று சுற்றி வளைத்து விட்

தட்சணை!

• அ.தி.மு.க. மக்களவை உறுப்பினர் மலைச்சாமி, ரகசிய யுக்திகள் வகுப்பதில் ஒரு பக்கம் பிஸியாக இருந்தாலும், புதுமையான பிரசாரத்திலும் ஈடுபட்டிருக்கிறார். மாலையில் கிளம்பும் அவர், தமது வண்டியில் இனிப்பு, கேக், மிக்சர் என்ற பலசரக்கோடு கிளம்புகிறார். நான்கைந்து கிராம மக்களை ஓரிடத்தில் கூட்டி, "தேர்தல் என்றால் என்ன? எப்படி வாக்குப் போடுவது (தேர்தல் அதிகாரியாக இருந்தவர் ஆயிற்றே!) என்று ஆசிரியர் போல வகுப்புகள் எடுக்கிறார். இடையில் கொண்டு போகும் நொறுக்குத் தீனியும் விநியோகிக்கப்படுகிறது. "வாக்குச் சீட்டில் உங்கள் கண்ணுக்கு இரட்டை இலையைத் தவிர வேறு எதுவும் தெரியக் கூடாது!" என்று வகுப்பை முடிக்கிறார். கட்சிக்காரர்களே கூட, "இன்னிக்கு மாஸ்டர் ப்ரோக்ராம் என்ன?" என்று ஜோக் அடிக்கிறார்கள். சொல்ல மறந்து விட்டோமே! தலைக்குப் பத்து ரூபாய் தட்சணையும் உண்டு!

டாக்டரம்மா!

ஆண்டிப்பட்டி தொகுதியில் சுவர் விளம்பரங்களில் எந்த இடத்திலும் ஜெயலலிதா என்று போடாமல், பெரும்பாலும் "டாக்டர் அம்மா", "டாக்டர் புரட்சித் தலைவி" என்றே எழுதி வைத்திருக்கிறார்கள். கூடவே எம்.ஜி.ஆர். படமும் உண்டு.

டார்கள்!

● ஆளுங்கட்சிக்காரர்கள் ஒவ்வொரு கிராமத்தையும் விலை பேசுகிறார்கள். எப்படி?... ஒரு கிராமத்தில் கோயில் பணிகள் போன்ற பொதுப் பணிகள் பாதியில் நின்றிருந்தால், "அதற்கு இத்தனை லட்சம் தருகிறோம்" என்று ஒரு ரேட் பேசி ஊர்ப் பெரிசுகளிடம் கொடுத்து விடுவது; அவ்வளவுதான். இனி பெரிசுகள் யாருக்கு வோட்டுப் போடச் சொல்கிறார்களோ அவர்களுக்குத்தான் வோட்டு. தேர்தல் நாளன்றும் தனி கவனிப்பு உண்டு. 400 கிராமங்களுள் பாதிக்கு மேற்பட்ட கிராமங்களில் "பெரிசுகளை" வாங்கிவிட்டார்களாம்.

● ஆண்டிப்பட்டியின் வாக்காளர் எண்ணிக்கை போலி வாக்காளர்களையும் சேர்த்து, 2, 08, 215. "ரொம்ப டெக்னிகலாக, போலிகளைச் சேர்த்து விட்டார்கள்" என்கிறார் தி.மு.க. தேர்தல் பொறுப்பாளராகன போடி முத்து மனோகரன். "உதாரணமாக கடமலைக்குண்டு ஜெயலலிதா பேரவைச் செயலாளர் பிச்சை என்பவரின் ஐந்தாவது படிக்கும் மகனையும், வயதை அதிகமாக காண்பித்து சேர்த்திருக்கிறார்கள்" என்கிறார் அவர். இந்த முத்து மனோகரன்தான் முதல் முதலாக 1989ல் ஜெயலலிதா போடியில் போட்டியிட்டபோது ஜானகி அணியின் சார்பில் எதிர்த்து நின்றவர்.

எல்லாரும் கேட்பாங்களே!

● "ஐயா! தி.மு.க. டெபாஸிட் வாங்கறது கஷ்டம்" என்று நம்மிடம் சொன்னார் ஒத்தக் கோயில் சி.மணிகண்டன். ஏன்? "அந்த அளவு தி.மு.க. பெயரை டேமேஜ் செய்திருக்கிறார் ஐந்து வருடம் எம்.எல்.ஏ.வாக இருந்த ஆசையன். யாராவது ஆசையனிடம் "எங்கள் கிராமத்துக்கு பஸ் விடுங்க" என்றால் "உங்க கிராமத்துக்கு விட்டால் எல்லோரும் கேப்பாங்களே(!)" என்று வெட்டிக் கொண்டு போவார்" என்று சொல்கிறார் மணிகண்டன். பேராசிரியர் அன்பழகன், தொகுதி செயல் வீரர்கள் கூட்டத்தில் பேசும்போது "வேட்பாளர் தேர்ந்தெடுக்கும் பொறுப்பைத் தம்மிடம் விட்டிருந்தால் ஆசையனை தேர்ந்தெடுத்திருப்பேன்" என்று பேசியது உடன்பிறப்புகளை மிகவும் நோகடித்திருக்கிறது.

● "உங்கள் தலைவர் போட்டியிடாவிட்டால் தி.மு.க. வெற்றி பெறும்" என்கிறார்களே என்ற பொம்மாநாயக்கன்பட்டி கார்த்திகேயனைக் கேட்டபோது, "சென்ற சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வோடு கூட்டணியில் இருந்தோம்.



'எங்கள் வோட்டுக்கள் அவர்களுக்கு முழுதும் விழுந்தனவே தவிர, அவர்களது வோட்டு எங்களுக்கு விழவில்லை. அந்த வருத்தம் எங்களுக்கு உண்டு. தவிர எங்கள் பலத்தையும் காட்ட வேண்டிய நிலையில் இருக்கிறோம்'' என்றார் அவர். சுமார் 18 பட்டிகளில் டாக்டர் கிருஷ்ண சாமி தி.மு.க.வுக்குச் சம்மட்டி அடி கொடுப் பார் என்கிறார்கள். 'இரண்டு நாள் பிரசா ரம்; இரண்டு நாள் ஓய்வு' என்ற கணக்கில் கிருஷ்ணசாமியின் பிரசாரம் இருக்கிறது.

● ஆண்டிப்பட்டி தொகுதி தி.மு.க. தலைமை தேர்தல் அலுவலகத்தைச் சுற்றி மூன்று பக்கமும் தி.மு.க. விளம்பரங்கள் இருக்க, ஒரு பக்கம் மட்டும் அம்மா விளம் பரம்? அந்த மண்டபம் நாடார் மகமை சங் கத்துக்கு சொந்தமானதாம். மெயின் ரோட்டில் ஊருக்கு முகப்பில் இருக்கும் அந்த கட்ட டத்தை தி.மு.க. முழுதும் பயன் படுத்தினால், ஆண்டிப்பட்டியில் நுழையும் போதே "தி.மு.க. பிரசாரம் பிரமாதம்'' என்று தோன்றுமாம். 'அம்மா அது போல் நினைத்து விட்டால் ஆபத்து என்று, அன்பாக நாடார் நிர்வாகிகளை மிரட்டி ஒரு பக்கத்து கவரைக் கைப்பற்றி விட்டார்களாம் ஆளும் கட்சிப் பிரமுகர்கள்.

● மு.க. அழகிரியின் நிகழ்ச்சி நிரல் இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே அம்மாவின் செல்லப் பிள்ளையாம் தினகரன் கையில் கிடைத்து விடுகிறது. பிறகு அந்த குறிப்பிட்ட கிராமங்களுக்கு ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் பறக்கிறார்கள். கிராமத்தின் தேவைகள் அறியப்பட்டு, அரசு அதிகாரிகள் அங்கு அனுப்பப்படுகிறார்கள். பிரச்னைகள் தீர்க்கப்படுகின்றன. அழகிரி விசிட் செய்யும்போது கிராமம் வழக்கம்போல் இருக் கிறது. இந்த ரகசியம் இப்போது கண்டறியப்பட்டு அழகிரியின் சுற்றுப்பயணம் முந்தைய நாள் மாலைதான் இறுதியாக்கப்படு கிறது. பெரியகுளத்தில் உள்ள தினகரன் வீட்டில் எப்போதும் கூட்டம். பெரும்பாலும் உள்ளூர் அதிகாரிகள்தான். அதே சமயம் அருகில் உள்ள முதல்வர் பன்னீர் வீட்டில் லோக்கல் கட்சிக்காரர்கள் அதிகம்.

— ப்ரியன்


படங்கள் : ராஜன்

• ஸ்டாலினுக்கு வரவேற்பு





தினகரன்



2002 பிப்ரவரி 17
விஷு மாசி 5
மலர் : 60
இதழ் : 29

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



பற்றாக்குறை பட்ஜெட்டா? பாதகமில்லை!

உலகம் முழுவதும் பொருளாதார தேக்கம் நிலவி வருகிறது என்பதால் நம் நாட்டிலும் அதன் பாதிப்பு இருக்கத்தான் செய்யும். ஆனால், முன்னேறிய நாடுகளைக் காட்டிலும் முன்னேற முயன்று திணறிக் கொண்டிருக்கும் நாடுகளையே இந்தத் தேக்க நிலை அதிகம் பாதிக்கும். அவ்வாறு திணறிக் கொண்டிருக்கும் நாடுகளுள் ஒன்று நம்முடையது என்று சொல்லத் தேவையில்லை.

ஆண்டாண்டு காலமாக பற்றாக்குறை பட்ஜெட்களையே நாம் கண்டு வருகிறோம். பற்றாக்குறையின் அளவு அபரிமிதமாக அதிகரித்து வருகிறதேயொழிய குறையவேயில்லை. புதிய பொருளாதார கொள்கையும் பொருளாதார சீர்திருத்தங்களும் அறிமுகமான பின்னரும் எதிர்பார்த்த வேகத்தில் நமது பொருளாதாரம் முன்னேறவில்லை. பங்குச் சந்தை ஊழல் மிகப் பெரிய அளவில் வெடித்து, தனியார் துறையை ஓர் உலுக்கு உலுக்கியது. அதே சமயம் அரசுத் துறை நிறுவனங்களின் நஷ்டமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. இப்போது சர்வதேச பொருளாதார தேக்கமும் சேர்ந்துகொள்ள, இந்தியப் பொருளாதாரம் திணறித் திண்டாடுகிறது.

இந்நிலையில் மத்திய அரசு எடுத்துள்ள இரண்டு முடிவுகள் தலைப்புச் செய்தியாகி யிருக்கின்றன. வி.எஸ்.என்.எல்., I.B.P. ஆகிய இரு அரசு நிறுவனங்களும் தனியாரிடம் விற்கப்பட்டுவிட்டன. இது தவிர அரசின் சுற்றுலாத் துறைக்குச் சொந்தமான நான்கு



ஹோட்டல்கள் தனியாருக்கு விற்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் மத்திய அரசுக்குப் பல்லாயிரங்கோடி ரூபாய் வருமானம் கிடைக்க விருக்கிறது.

செலவைக் குறைக்கும் முயற்சியாக மத்திய அரசு ஊழியர்களுக்கு வி.ஆர்.எஸ். திட்டத்தையும் அறிவித்துவிட்டது அரசு.

தனியார்மயமாக்கல் முயற்சிமூலம் கிடைக்கப் போகிற கணிசமான பணம் அரசு கஜானாவுக்கு வந்து சேர நீண்ட காலம் ஆகும். அப்படி வந்து சேர்ந்த பிறகும் அது புத்திசாலித்தனமாகக் கையாளப்படுமா என்பது மில்லியன் டாலர் கேள்வி!

வி.ஆர்.எஸ். திட்டமோ அரசுக்கு உடனடியாகச் செலவை அதிகரிக்கத்தான் செய்யுமேயொழிய, குறைக்காது. ஐந்தாண்டுகளுக்கு அரசு ஊழியர்களைப் புதிதாக நியமிப்பதில்லை என்ற மாற்றுத் திட்டத்தை அறிவித்திருப்பின், ஐந்தாண்டு காலத்தில் செலவுச் சுமை படிப்படியாகக் குறைந்திருக்கும். இப்போதோ, வி.ஆர்.எஸ். திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு விருப்ப ஓய்வு பெறும் ஊழியர்கள் அனைவருக்கும் கணிசமான நஷ்டஈடு முதலில் கொடுத்தாக வேண்டும். அந்த ஊழியர்களின் விலகலால் மிச்சமாகக் கூடிய செலவு என்பது ஓர் எதிர்பார்ப்பே. அது கனவாகிவிடும் அளவில் அரசு புதிய செலவினங்களுக்கு வழிவகுத்துவிடக் கூடும்.

இந்நிலையில், வரவிருக்கும் மத்திய பட்ஜெட் என்பது சிம்ம சொப்பனமாக சராசரி இந்தியனை மிரட்டுகிறது.

'பற்றாக்குறை விழுவதைத் தவிர்க்க முடியாதுதான். ஆனால், பற்றாக்குறையின் அளவைக் குறைக்க முயற்சி செய்ய வேண்டும்' என்பது பொதுவாகச் சொல்லப்படும் பொருளாதார அறிவுரை.

ஆனால், சமீபத்தில் ரிசர்வ் வங்கி இதற்கு மாறான அறிவுரை ஒன்றைத் துணிந்து மத்திய அரசுக்கு வழங்கியிருக்கிறது :

'பட்ஜெட் பற்றாக்குறையைச் சரிக்கட்ட வழிகளைத் தேடி மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டாம். பற்றாக்குறை அதிகரித்தாலும் பாதகமில்லை. ஆனால் செலவுகளை



அதிகரிப்பதற்குப் பதிலாக முதலீடுகளை அதிகரியுங்கள். அவ்வாறு செய்வதன் மூலம் தொழில் வர்த்தகம் பலப்படுவதற்கான தளம் அமைத்துத் தந்து, இயல்பான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகை செய்ய முடியும்.'

- ஆர்.பி.ஐ.யின் இந்த அறிவுரை அல்லது வழிகாட்டல் பல பொருளாதார நிபுணர்கள் ஏற்கெனவே கடந்த இரண்டு - மூன்று ஆண்டுகளாகச் சொல்லி வருவதுதான். ஆனால், அரசுக்கு வழிகாட்ட வேண்டிய ஆர்.பி.ஐ., அந்தப் பொறுப்பை இப்போதுதான் சீரியஸாக எடுத்துக் கொண்டு இந்த அறிவுரையை வழங்கியிருக்கிறது.

தாமதமாக வழங்கப்பட்டபோதிலும் இவ்வறிவுரை ஏற்கப்பட வேண்டிய, சரியான அறிவுரைதான்.

அரசின் செலவினங்கள் குறைந்து, அடிப்படை வசதிகள் பெருக்கம், மின் உற்பத்தி, போக்குவரத்து போன்ற துறைகளில் முதலீடு அதிகரிக்கப்படுமானால், தொழிலும் வர்த்தகமும் நடைபெற வளமான சூழல் உருவாகும். மாறாக, கடுமையான வரிவிதிப்புடன் கூடிய பட்ஜெட், பொருளாதார தேக்கநிலையை அதிகரித்து மக்களை மேலும் வருத்தும்.

அதிக வரி விதிப்பைத் தவிர்த்தால் மட்டும் போதாது. தனியார் துறைமீது அரசு இயந்திரத்தின் கட்டுப்பாடும் அர்த்தமேயில்லாத ஆயிரத்தெட்டு விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய அனாவசிய கெடுபிடிகளும் இந்தச் சீர்திருத்த யுகத்தில் ஒழித்துக் கட்டப்பட வேண்டும். இதன் மூலம் கால விரயமும் பண விரயமும் தவிர்க்கப்படும். லஞ்ச-ஊழல் மட்டுப்படும்.

இந்த நிதியாண்டில் ஒன்பது மாதங்களுக்கான வரிவசூல், எதிர்பார்த்ததைக் காட்டிலும் 25 சதவிகிதம் குறைவு என்றும் செலவினங்கள் 15 சதவிகிதம் அதிகம் என்றும் நிதியமைச்சரே ஒப்புக் கொண்டிருக்கிறார். முக்கிய சீர்திருத்தமாக, வரிகளை அதிகரிப்பதற்குப் பதில், வரிகளை உரிய காலத்தில் வசூலிக்கும் ஒரு கண்டிப்பான நெறிமுறை வகுக்கப்பட்டு அமுலானால், ஏற்கெனவே வசூலிக்கப்படாமல் இருக்கும் கோடிக் கணக்கான ரூபாய் கஜானாவுக்கு வந்து சேரும்.

தேவை, தொலை நோக்கு பட்ஜெட்டோ, புரட்சி பட்ஜெட்டோ அல்ல... நடைமுறை சாத்தியமான சீர்திருத்த பட்ஜெட்தான்! ○

காதில் விழுந்தவை!

உ.பி. தேர்தலில் தமிழகப் பணம்!



• கண்ணப்பன்



• மாயாவதி



● கோயில்களையும் அதன் சொத்துக்களையும் அற நிலையத் துறை நிர்வகிப்பது போல, தமிழகத்திலுள்ள மசூதி, தர்க்கா ஆகியவற்றையும், அதன் சொத்துக்களையும் நிர் வகிப்பது வக்பு வாரியம். இப்போது அதன் தலை வராகப் பொறுப்பேற்றிருப்பவர் பாதர் சயீது என்ற பெண்மணி. கட் அண்ட் ரைட் குணம் கொண்ட இவர் எஸ்.ஐ.இ.டி கல்லூரியின் தாளாளர். ஜெய லலிதாவுடன் ஒன்றாகப் படித்தவர். இவர் பொறுப்பேற்றது, வக்பு வாரிய ஊழல் பெருச் சாளிகளுக்கு வயிற்றில் புளியைக் கரைத் திருக்கிறது. "முஸ்லீம் அறநிலைய சொத் துக்களை நியமிக்கும் ஒரு அமைப் புக்குப் பெண்கள் தலைவராக வர முடியாது. அது ஷரி யத்துக்கு விரோதமானது; காரணம் பெண்கள் மசூதிக்கு வர முடியாது" என்றெல்லாம், மத வாதிகளைக் கிளப்பி விட்டு, பிரசாரம் செய்துகொண்டிருக் கிறார்கள். "ஜெய லலிதாவுக்கு நேரடி யாகத் தெரிந்தவராக இருப்பதால், இந்த ஊழல் பெருச்சாளிகளால் ஒன்றும் செய்ய முடியாது. அந்தப் பெருச்சாளிகளின் கவலை, பழைய ஊழல்களை அவர் கிளறாமல் இருக்க வேண்டுமே" என்பதுதான் என்று சொன்னார் வக்பு வாரிய ஊழியர் ஒருவர்.

● "ம.தி.மு.க பொருளாளரான கண்ணப் பன், சில காலமாக கட்சி விவகாரங்களில் அதிக ஆர்வம் காட்டாமல் இருக் கிறார்" என்று தாயகம் வட்டாரம் சொல்கிறது. சில மாதங்களுக்கு முன், தம் பேரனுக்காக, ம.தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு திரைப்பட அதிபரிடம் அறுபது லட்ச ரூபாய் கொடுத்து படம் எடுத்துத் தரச் சொன்னாராம். ஆனால் அந்த அதிபர் பூஜை போட்ட கையோடு அமைதியாகி விட்டாராம். கேட்டால் "இன்னும் கொஞ்சம் போடுங்க" என்று இழுக்கிறாராம். இதனால் கண்ணப்பன் 'அப்செட்' என்கிறார்கள். சமீப காலமாக கோவை, ஈரோடு மாவட்டங்களிலிருந்து ஏராள மான கட்சிப் பிரமுகர்கள், அறிவாலயம் பக்கம் ஒதுங்கி விட்டார்கள். இதைத் தடுக்க கண்ணப்பன் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை' என்று தாயகம் பிரமுகர்கள் வருத்தப்படு கிறார்கள்.

● உ.பி. தேர்தலில் தமிழக பணம் ஏகமாக விளை யாடுகிறதாம். ஏற்கெனவே மாயாவதிக்கும் தமிழக ஆளும் கட்சியின் நிழலாகச் செயல் பட்டுக்கொண்டிருக்கும் ஒரு பிரமுகருக்கும் தொழில் ரீதியான தொடர்பு உண்டு. இப்போது மாயாவதிக்காக கோடிகள் லட்சுமணபுரிக் குக் கைமாற்றப்பட்ட தாகச் சொல்கிறார்கள். அதுபோல முலாயம்சிங் குக்கும், கனிவு காட்டப் பட்டுள்ளது. சிறிது காலம் முன்பு முலாயம் சிங்கின் தளபதி அமர்சிங் அம்மா வைச் சந்தித்த ரகசி யம் இதுதானாம். இது ஒரு பக்கம் இருக்க, பா.ஜ.க.வுடன் தோழமை யாக உள்ள அஜீத்சிங் கட்சிக்கும் உதவி செய் யப்படுகிறதாம். அது சரி; இதெல்லாம் எதற்காக? எதிர்காலத்தில் தேசிய அரசியலில் அம்மா களம் இறங்க முதலீடாம்!

• சஞ்சயன்

இரண்டாவது பிரளயம்!

சென்னை தரமணி திரைப்படக் கல்லூரிக்குள் கல்லூரி வைரத்தைத் தேடிப் புகுந்தால், இறுதியாண்டு இயக்கம் படித்து வரும் சுப்புராமனைக் காட்டுகிறார்கள். சுப்புராமன் சக மாணவர்களோடு இயக்கியிருக்கும் 'பிக் பாங்க் இரண்டு' என்ற குறும்படம், அவரது இமேஜை உயர்த்தியிருக்கிறது. வளாகத்தில் இருக்கும் ரீரெக்கார்டிங் தியேட்டரில் படத்தைத் திரையிட ஏற்பாடு செய்திருந்தார்.



• சுப்புராமன்



• 'பிக் பாங் - ll' படத்தில்

''திண்டுக்கல்தான் எனக்குச் சொந்த ஊர். இங்கே சேர்வதற்கு முன்பு சினிமா ரசனை மட்டும்தான் இருந்தது. இன்று அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் சினிமாவை அணுகக் கற்றுக் கொடுத்திருக்கிறது இந்தக் கல்லூரி. சக்தி வாய்ந்த சினிமா மொழியை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்பதைக் கற்றுக் கொடுத்திருக்கிறது'' என்று சொல்லிவிட்டுப் படத்தை ஓட விட்டார்.

பாரத் பயோடெக் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டின் ஆராய்ச்சிக்கூடம். ஒரு பெண் உடலிலிருந்து உயிரணு எடுத்து, பரம்பரை நோய்கள் உட்பட உலகின் எந்த நோயும் தாக்காத 'ஜீன் கரெக்ஷன்' செய்யப்பட்ட ஒரு குளோனிங் பெண் குழந்தையை உருவாக்கி சாதனை படைக்கிறார்கள் நம் விஞ்ஞானிகள்!

முழு ஆரோக்கியத்துடன் இருக்கும் 'பூர்ணா'வுக்கு நான்கு வயதாகிறது. இதுவரை ஆராய்ச்சிக்கூடத்திலேயே இருந்தவளை, வெளி உலகத்துக்கு அழைத்து வருகிறார்கள். பூக்களும், மரங்களும், பறவைகளும் அவளுக்குப் புதிய அனுபவத்தைத் தருகின்றன. தன்னை குளோன் செய்து உருவாக்கிய மருத்துவரை அப்பா என்று அழைக்கிறாள். பன்னிரண்டு மணி நேரமே வெளி உலகில் இருந்த பூர்ணா மனரீதியான புதியதொரு பாதிப்புக்கு ஆளாகி மயங்கி விழுகிறாள். அவளது உடலில் திடீர் மாற்றங்கள். மருத்துவர்கள் மறுபடியும் அவளை ஆராய்ச்சிக்கூடத்துக்கே எடுத்து வருகிறார்கள். ஆராய்ச்சி தொடர்கிறது.

காட்சிகள் ஒவ்வொன்றும் நறுக்குத் தெறித்த மாதிரி பாதிக்கின்றன. முதல் பிரபஞ்சப் பிரளயம் காரணமாக இந்தப் பால்வெளி உலகம் தோன்றியது. பூமியில் உடல் ரீதியாக குறைகள் இல்லாத மனிதனை உருவாக்கும் இரண்டாவது பிரளயமாக (Big Bang II) ஆராய்ச்சி தொடர்கிறது என்று பதினைந்து நிமிடத்தில் ஆங்கிலப்படம் போல அழுத்தமான ஷாட்டுகளால் பதிய வைத்திருக்கிறார் சுப்புராமன்.

இந்தக் குறும்படத்தை உருவாக்கும் முயற்சியில் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றிய ராம்ஜி, கோலப்பன், சரவணன், மன்மதன் ஆகிய சகமாணவர் குழுவையும் நினைவு கூரும் சுப்புராமன், ''மக்கள் பிரச்னைகளை மக்கள் ஏற்றுக் கொள்கிற மாதிரி படம் எடுக்க வேண்டும். அதுதான் இலட்சியம்'' என்கிறார்.

- ஸ்ரீ சக்கரம்

படம்: ஸ்ரீஹரி



கன்யாவின் காதல்!

கிராமத்துக்கு வந்து போகும் டவுன்பஸ் மாதிரி தான் காதலும். எப்போது வருமென்று யாருக்கும் தெரிவதில்லை.

"நீலவானம் தொடரின் ஷூட்டிங்கில் சின்ன தகராறு. ஒரு கோபக் காரனாகத்தான் கன்யாவைச் சந்திக்கச் சென்றேன். அந்தச் சந்திப்பு விரைவில் காதலான விஷயத்தை மனத்திடம் தான் கேட்க வேண்டும்" - தனது மூக்குக் கண்ணாடியை ஆட்காட்டி விரலால் அழுத்திவிட்டு ப்ளாஷ்பேக்கிற்குச் சென்று வருகிறார் டி.வி. தொடர் இயக்குனர் கவிதா பாரதி.

கன்யா?

வம்சம், காலம் போன்ற தொடர்களிலும், தற்போது காவியாஞ்சலி தொடரிலும் நடித்து வரும் தாரகை.

"எந்த ஒரு விஷயமும் மோதலில் ஆரம்பித்தால் நல்லதென்று சொல்வார்கள். (அப்படியா?) எங்கள் காதல் சண்டையில் ஆரம்பித்திருக்கிறது. சந்தோஷத்தில்தான் தொடரும்" - தரையில் கோடு கிழித்துக் கொண்டே காதல் தாங்கிய கண்களோடு சொல்கிறார் கன்யா.



"ஒவ்வொரு பருவத்திலும் ஏதோ ஒன்றின் மீது மனக காதல் வயப்படுகிறது. பன்னிரண்டிலிருந்து பதினெட்டு வயது வரை எனக்கு கம்யூனிஸத்தின் மீது காதல். ரசனை கொஞ்சம் மாறிய பிறகு ஓவியம், இசை மீது காதல் இருந்தது.







ஒரு பெண்ணைக் காதலிக்கும் வயதில் நான் காதலிக்கவில்லை. இப்போது இயக்குனரான பிறகு கன்யாவைக் காதலிக்கிறேன். இது பருவம் தாண்டிய காதல் என்றாலும் பக்குவப்பட்ட காதல் என்று நினைக்கிறேன்'' பட்டுத் தெறிக்கிற மழைத் துளியாய் வார்த்தைகளைச் சிதறுகிறார் கவிதாபாரதி.

''நான் நடிப்பைக் காதலித்தேன் சிறு வயதிலேயே. சில தொடர்களில் கதாநாயகர்களுடன் காதல் வசனங்கள் பேசும்போது எனக்கான ஹீரோ மனசுக்குள் எங்கோ நின்று கொண்டு கவிதை பொழிவது மாதிரி ஒரு பிரமை ஏற்பட்டதுண்டு - கவியைக் (கவிதா பாரதியை இப்படித்தான் அழைப்பாராம்) காதலிக்கும்வரை. இப்போது கவியே கவிதை பொழிகிறார்.'' - கண் இமைகள் படபடக்க வெட்கச் சிரிப்புடன் சொல்கிறார் கன்யா.

''கதைகளில் பிரச்னையை உருவாக்குபவர்கள் கதாசிரியர்களும், இயக்குனர்களும், அதாவது நீங்கள். உங்கள் நிஜ வாழ்க்கையில்...?''

''என் கதைகளில் வரும் பெண் பாத்திரங்கள் பிரச்னைகளை எதிர்கொள்கிற, சமாளிக்கிறவர்களாகத்தான் படைக்கப்படுகிறார்கள். கன்யாவிடமும் அதைத்தான் எதிர்பார்க்கிறேன்...''

இதற்கு கன்யாவின் பதில்!

''இப்போது 'காவியாஞ்சலி' தொடரில் நான் ஏற்றிருக்கும் மருமகள் பாத்திரம் போல்தான் என் வாழ்க்கையிலும் இருக்க



பிரிதலும், பிரிதல் நிமித்தமும்!

- பச்சைக் கொடி இசைய
விசிலின் குரல் விரட்ட
நகரும் சக்கரம்
நசுக்குகிறது நம் சந்திப்பை.

- பெட்டிகளை இணைத்து
இழுத்துப் போகிற எஞ்சின்
கொஞ்சமும் அறியாது
நம் பிரிவை.

- எனக்கான வண்டிக்காய்
காத்திருப்பதைத் தவிர
ஏதும் இயலாது என்னால்.

- வழியேதுமின்றி
பிளாட்ஃபார சிமெண்ட் அமர்வில்
பின்நோக்கி விடப்படுகிறேன்
உனது ஏக்கக் கருவிழியின்
நடுக்கோண நோக்கலில்.

- தடதடக்கும்
இதயம் உள்ளிட்ட
உடல் நலத்திற்குத்
தீங்கானவை
ஜன்னலோர தேவதைகள் சுமந்து
சந்திப்புதோறும்
வந்து போகும் ரயில்கள்.

- ஜெயந்த். ஆர்.சி

ஆசைப்படுகிறேன். மாமனார், மாமியாரிடம் நல்ல பெயர் வாங்கிக்கொண்டு, பிரச்னைகளைச் சமாளிக்கிற குடும்பப் பெண்ணாக இருக்கத்தான் ஆசை."

காதலி பற்றி வர்ணிக்காத காதலர்கள் இல்லை. ஆனால் கவிதாவுக்கு தமது காதலியின், தொழில் ஈடுபாடும், இயக்குனராக, தாம் எதிர்பார்ப்பதை உடனே செய்கிற பங்களிப்பும்தான் அவர் மீதான காதலை வளர்த்ததாம்.

"எனது கதையில், மனத்துக்குள் நான் கற்பனை செய்து வைத்திருக்கிற ஒரு கேரக்டரைத் தேர்ந்த ஈடுபாட்டோடு அவரால் இயல்பாகச் செய்ய முடிகிறது என்றால் நான் மனத்திற்குள் வைத்திருக்கிற காதலி, மனைவி பாத்திரத்தையும் நிஜத்தில் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. என் எண்ணமும் சிந்தனை போலவே அவரின் எண்ணமும், சிந்தனையும் இருப்பதாக உணர்கிறேன்" என்கிறார் கவிதாபாரதி.

"எல்லோரிடமும் ஏதோ ஒரு சிறப்பம்சம் இருக்கிறது. கவிதாவிடம் அவரின் நடத்தையும் பாசாங்கற்ற முகமும் எல்லோரையும் ஈர்க்கும். அவர் மீதான காதலை எனக்குத் தந்ததும் அதுதான்" - கன்யா.

இருவரும் நேரில் சந்தித்துப் பேசுவதுகூட குறைவுதானாம். தொலைபேசியில்தான் காதல், சடுகுடு ஆடுகிறார்களாம்!

"இரண்டு பேருமே பிஸியாக இருக்கிறோம். இயக்கும் பணியில் நான் இருக்கும்போது, ஒரு நடிகை இடையிடையே பத்து இருபது நிமிடங்கள் 'கட்' அடித்துவிட்டுச் சென்றால் எனக்கு எவ்வளவு கோபம் வருமோ அந்தக் கோபத்தை இன்னொரு இயக்குனருக்கு நான் கொடுக்க விரும்பவில்லை. அதனால்தான் எங்கள் சந்திப்பு தொலைபேசியிலேயே நடக்கிறது" என்று சொல்லும் கவிதா பாரதி, இயக்குனர் பாரதி ராஜாவின் சிடர்.

மனசு இரண்டும் காதலித்து விட்டது. இவர்கள் வீட்டில்?...

கவிதாபாரதியைப் பொறுத்தவரை ஓ.கே.தானாம்.

"என் மீது பெற்றோர் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். நான் எதைச் செய்தாலும் சரியாகவே செய்வேன் என்பது அவர்களுக்குத் தெரியும்."

ஆனால் கன்யா வீட்டில் கனேபரம்!

"இப்படியொரு விஷயத்தை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. முதலில் அவர்களுக்கு அதிர்ச்சி. பிறகு சொல்லி சமாளிப்பதற்குள் போதும்போதுமென்றாகிவிட்டது. இப்போது தலையாட்டி விட்டார்கள். விரைவில் திருமணம்!"

திருமணத்திற்குப் பின்?

"இருவருமே இதே துறையில்தான் இருப்போம். ஓடுவதைத் தவிர நதிகளுக்கு வேறென்ன வேலை?"

- சலாம்ஜி

அட்டை, வண்ணப்படங்கள்: ஆல்பர்ட்

வெளியே குளிர்: உள்ளத்தில்

"செய்தித் தாள்களும் பத்திரிகைகளும் இலட்சிய நோக்கைப் புறக்கணித்து முழுக்க முழுக்க வியாபார நோக்குக்கு மாறிவிட்டன! பத்திரிகையாளர்களிடையே நன்னடத்தை என்பது பழைய கதையாகி வருகிறது! ஜனநாயகத்தின் நான்காவது தூணான பத்திரிகைத்துறையின் நம்பகத்தன்மையே ஆட்டங்கண்டிருக்கிறது!"



• ஓடி ஓடி உழைத்த 'வாய்சஸ்' குழு

- இப்படியெல்லாம் 'கண்டனத் தீர்மானம்' நிறைவேற்றியது யார் என்று நினைக்கிறீர்கள்...? அரசியல் கட்சியினரோ, நீதித்துறையோ, தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினரோ அல்ல...

இந்த அறிக்கையை வெளியிட்டவர்கள் சாக்ஷாத் பத்திரிகையாளர்களேதான்!



• சென்னையிலிருந்து நிர்மலா லக்ஷ்மண்..

'நம்மை நாமே ஆராய்ந்து பார்த்துக் கொள்ள வேண்டிய கட்டத்தில்' இருக்கிறோம் என்று வெளிப்படையாக ஒப்புக் கொண்ட அந்தப் பத்திரிகையாளர் குழு, பெண் பத்திரிகையாளர்களை மட்டுமே கொண்டமைந்தது.



• ஆந்திராவிலிருந்து...

பத்திரிகைத் துறையின் சீர்கேடுகளை மட்டுமின்றி அதற்கான காரணங்களையும் ஆராய்ந்து, குறிப்பாகப் பெண் பத்திரிகையாளர்கள் இச் சூழலில் சந்திக்கும் கஷ்டங்கள், சவால்கள், பிரச்னைகளையும் அலசியது இக்குழு.

ஜனவரி 28, 29, 30 தேதிகளில் தலைநகர் புது டெல்லியில் கடுமையான குளிர். ஆனால், பெண் பத்திரிகையாளர்கள் மாநாடு நடந்த இந்தியா இன்டர்நேஷனல் சென்டரில் மட்டும் வெப்பநிலை பத்து - பதினைந்து டிகிரி அதிகம். அதன் அரங்கிலும் கான்ஃபரன்ஸ் அறைகளிலும் நடந்த அனல் தெறிக்கும் விவாதங்கள் மட்டுமின்றி, ஆத்மார்த்தமான அனுபவப் பகிர்வுகளிலும் அந்த வளாகம் கனப்பூட்டப்பட்டது. கோபத்தில் கனன்று, நட்பில் கதகதப்பாகி, சக ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியறிந்து கொதித்து, அவர்கள் பட்ட துன்பங்களை அறிந்து வெந்து தணிந்து - உணர்ச்சிக் கலவைகளின் உச்சங்களைத் தொட்டுப் பார்த்தபோதும்... இறுதியில்



• அருணா ராய், கிருஷ்ண குமார்

அறிவு சார்ந்த ஆராய்ச்சியின் வடிவமாக ஓர் அறிக்கையைத் தயாரித்து வழங்கினர் 16 மாநிலங்களிலிருந்து கூடியிருந்த



• கேரளாவிலிருந்து....

• கூட்டம் முடிந்தது

• தேனீர் இடைவேளையில்...

• பதினைந்து நிமிடங்களில் தொகுத்து

• மூன்று நாள் விவாதங்களை.... (அம்மு ஜோஃப், கல்பனா ஷர்மா)

தீப்பொறி!

சீதா ரவி

நூறு பெண் பத்திரிகையாளர்கள்.

★ உலக மயமாக்கலின் (குளோபலைஸேஷன்) விளைவாக வியாபார கண்ணோட்டம் அதிகரித்துவிட்டது. இலட்சியங்கள் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளதற்கு இது முக்கிய காரணம்.

★ இதனால் பத்திரிகைகளில் முக்கியமான பிரச்னைகளுக்குப் போதுமான இடம் தரப்படுவதில்லை; அவை ஆழமாக அலசப்படுவதில்லை.

★ பல சமயங்களில் மக்கள் பிரச்னைகளிலிருந்தும் சமுதாயச் சிக்கல்களிலிருந்தும் வாசகரின் கவனம் திட்டமிட்டு திசைதிருப்பப்பட்டுவிடுகிறது. 'பரபரப்பான' செய்திகள் அனாவசிய முக்கியத்துவம் பெறுவதும் உண்மையைத் திரித்துக் கூறுவதும் அபாயகரமான போக்குகள்.

★ இப்படிப்பட்ட சூழலில் பெண் பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறதேயொழிய அவர்களுடைய பணிச் சூழல் மோசமாகி வருகிறது.

★ பத்திரிகைத் துறையில் பணியாற்றும் பெண்கள், கொடுமைக்கும் பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்படுவது அதிகரித்து வருகிறது.

★ தொழிலாளர் சட்டங்களில் புகுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் பெண் பணியாளர்களின் பாதுகாப்பின்மையை அதிகரிக்கச் செய்துள்ளது. சட்டத்துக்குப் புறம்பான ஒப்பந்த முறையில் பணி வாய்ப்புகள் வழங்குவது பெருகிவருகிறது. பல இடங்களில் பெண்களுக்குப் பேறுகால விடுப்பு மறுக்கப்படுகிறது.

★ உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கான சட்டம், எலக்ட்ரானிக் மீடியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர்களையும் உள்ளடக்கும் வகையில் இன்னும் திருத்தி அமைக்கப்படாததால் இந்த மீடியாவைச்

சேர்ந்த ஊழியர்களுக்குச் சட்டரீதியான பாதுகாப்பு என்பது இல்லை...

" மூன்று நாள் மாநாட்டின் இறுதியில் உருவான பத்து அம்ச அறிக்கை இது!

இந்தியா முழுவதிலும் உள்ள பெண் பத்திரிகையாளர்களை இணைக்கும் ஒரு வலைப்பின்னலும் உருவாகி, Network of Women in Media, India என்று பெயர் சூட்டப் பெற்றது!

தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற சம்பிரதாய அதிகார மண்டலங் களற்ற 'சமதர்ம' முயற்சியாக இந்த அமைப்பு ஓராண்டுக்கு இயங்கும். பதி னாறு மாநிலங்களிலும் உள்ள குழுக்களுக்கு ஒருங்கிணைப்பாளர்கள் மாறி மாறித் தேர்வு செய்யப்படுவார்கள். மண்டல அளவிலான ஓர் ஒருங்கிணைப்பாளரும் இயங்குவார் என்று முடிவாகியது.

கூடிய விரைவில் இவ்வமைப்பு ஒரு வலைத்தளம் அமைத்து அதன் மூலம் செய்தியும், உதவியும் வழங்கி தொடர்பு வைத்துக் கொள்ளும்.

அனைத்திந்திய அளவில் இப்படி யொரு வரலாறு காணாத மாநாடு நடக்க உந்து சக்தி என்ன...?

அம்மு ஜோசஃப் என்ற பெயரை அறி யாதவர்கள் இனி ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். பெங்களூரைச் சேர்ந்த ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளரான இவர், இந்தியா முழுவதிலும் உள்ள பெண் பத் திரிகையாளர்கள் பலரை பேட்டி கண்டு, 'Women in Journalism, Making News' என் றொரு புத்தகம் எழுதினார். அப்போது வெளிப்பட்ட அனுபவங்கள், கருத்துக்கள், பெண் பத்திரிகையாளர்கள் பல விஷயங் களைப் பகிர்ந்து கொள்வதற்கான முகாந் திரம் இருப்பதை உணர்த்தின. அதன் விளைவாக, சென்ற ஆண்டு மண் டல அளவில் பெண் பத்திரிகை யாளர்கள் சந்திப்பும் விவாத மும் நடைபெற்றது. இந்த மண்டல குழுக்கள் ஓராண்டு காலம் தொடர்பு வைத்துக் கொண்டு இயங்கின. ஓராண்டின் இறுதியில் தலைநகரில் அனைத்து அனுபவங்களையும் ஒன்றாகக் கொட்டி சலித்தெடுத்தபோது பிறந்தவை தான் பத் தம்ச அறிக்கையும் அனைத்திந்திய பெண் பத்திரிகையாளர் களின் கூட்டமைப்பும்.

"காதல் என்பது என்ன? நம்மைப் பிறரிடம் கண்டுபிடிப்பதும், அந்தக் கண்டுபிடிப்பில் உண்டாகும் மகிழ்வும்தான்" - அலெக்ஸாண்டர் ஸ்மித்.

மண்டல அளவிலும் பின்னர் அனைத் திந்திய அளவிலும் மாநாடுகள் நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்து உழைப்பை வழங் கியது. பெங்களூரைச் சேர்ந்த 'வாய்சஸ்' என்ற தன்னார்வ அமைப்பு, யுனெஸ்கோ நிதியுதவி செய்தது. இந்தியா இன்டர் நேஷனல் சென்டர் (புதுடெல்லி) துணை நின்றது. இந்த முக்கூட்டு முயற்சி வீண் போகவில்லை என்பதை, மூன்று நாட் களும் மாநாட்டில் பங்கேற்று, டெல்லி குளிரையும் விவாதங்களின் அனலையும் சம அளவில் அனுபவித்த நாம் 'காய்தல் உவத்தலி'ன்றிச் சொல்ல முடியும்!

இருபதாண்டுகளுக்கு முன் பத் திரிகைத் துறையில் நுழைந்த பெண்கள், 'பெண் பத்திரிகையாளர்' என்று அழைக் கப்படுவதை விரும்பவில்லை. 'பெண்' என்ற அடைமொழியே பேதம் புகுத்துவ தாகக் கருதினார்கள். ஆனால் இன்று கதை வேறு. புதிய நூற்றாண்டில், பத்திரிகை துறையில் இயங்கும் பெண்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது. தந்தை வழி சமுதாயத்தின் விளைவாக வேரோடிவிட்ட பல பிரச்னைகளையும் சிக்கல்களையும் மாறுபட்ட கோணத்தில் அணுகி விவா தித்து, தீர்வுகளை அடையாளம் காட்டக் கூடிய தகுதியும் ஆற்றலும் இன்று பெண் பத்திரிகையாளர்களிடம் இருக்கிறது.

உதாரணமாக வடக்கே தன்ஸா ஏரியி லிருந்து தண்ணீர் எடுத்து வந்து பயன்படுத் திய பழங்குடி பெண்கள் திடீரென்று அந்த உரிமை மறுக்கப்பட்டனர். ஏரியை அர சாங்கம் 'கோக்' நிறுவனத்துக்குக் குத்த கைக்கு அளித்துவிட்டது. தண்ணீருக்கு பஞ்சம் வந்தது.



ஆந்திராவில் பாரம்பரிய விவ சாயம் நடைபெற்று வந்த பல்லாயிரம் ஏக்கர் நிலத்தை, அரசு அமெரிக்க நிறுவனம் ஒன்றிடம் குத்தகைக்குக் கொடுத்துவிட்டது. மலர் களும் 'பேபி கார்ன்' என்ற இளஞ் சோளமும் பயி ரிடப்படும் இந்த இடத் தில் உள்ளூர்ப் பெண் களுக்கு விவசாயப் பணி வாய்ப்புகள் அற்றுப் போய்விட்டன.

வடகிழக்கு மாநிலங் களிலோ வேறு வித மான சிக்கல்கள். ஏழு

மாநிலங்களில் வாழும் இனங்கள், பேசப்படும் மொழிகள் வட்டார வழக்குகளின் கூட்டு எண்ணிக்கை 300! போதாக்குறைக்கு ராணுவத்துக்கும் தீவிரவாத அமைப்புகளுக்கும் எப்போதும் மோதல். வீதிகளில் உலவவோ வெளியே வரவோ இயலாமல் ராணுவத் தடை! இதனால் விவசாயக் கூலிப் பெண்களின் பணி நேரம் கணிசமாகக் குறைகிறது. அவர்கள் பெறக் கூடிய கூலி குறைந்து போய் வயிற்றுப் பாட்டுக்கே கஷ்டமாகிறது. விவசாயம் நடைபெறாததால் நெல் விளைச்சல் குறைந்து விலைவாசியும் ஏறுகிறது!



ஆனால் செய்தித்தாள்களிலும் பத்திரிகைகளிலும் இந்தத் துயரங்கள் வெளிப்படுவதில்லை. வடகிழக்கில் ராணுவத்தின் பராக்கிரமமும் ஆந்திராவில் அந்நியச் செலவாணிப் பெருக்கமும் கோக் நிறுவனத்தின் வெற்றிக் கதையும் தான் செய்தியாகின்றன.

செய்தியின் மறுபக்கத்தைக் காணும் நுண்ணிய உணர்வும் அதை எடைபோடும் சார்பற்ற மனமும் எளிமையாகவும் மனத்தைத் தைக்கும்படியும் அதை எழுதுகின்ற ஆற்றலும் எல்லா பத்திரிகையாளர்களுக்குமே இருக்கத்தான் வேண்டும் என்ற போதும் பெண் பத்திரிகையாளர்களிடம் இவை ஒரு மாற்று அதிகமாகக் காணப்படுவது உண்மை.

அதனால்தான் பெண் பத்திரிகையாளர்களின் பங்களிப்பும் பொறுப்பும் அதிகமாவதுடன் அவர்களுடைய முக்கியத்துவமும் அதிகரித்திருக்கிறது. கூட்டமைப்புக்கும் கூக்குரலுக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

பெண்ணை போகப் பொருளாகவும் வியாபாரப் பொருளாகவும் காண்கின்ற ஆரோக்கியமற்ற போக்கு அதிகரித்து வருகிறது. இந்தப் போக்கு பத்திரிகைத் துறையையும் பிடித்து ஆட்டுகிற நேரத்தில், அத்துறையில் பணியாற்றும் பெண்கள் உள்ளிருந்தபடியே அதை எதிர்த்துப் போராட முடியும்.

"காதலித்தபோது என்னென்ன முட்டாள்தனங்களைச் செய்தோம் என்பது ஒருவனுக்கு நினைவுக்கு வரவில்லையென்றால், அவன் காதலிக்கவில்லை என்றுதான் அர்த்தம்". - ஷேக்ஸ்பியர்.

இதன் காரணமாகவும் பத்திரிகைத் துறையில் பெண்களின் முக்கியத்துவம் முன்னெப்போதைக் காட்டிலும் அதிகரித்திருக்கிறது.

ஆனால் இதே காரணங்களால் பத்திரிகை நிர்வாகங்கள் பெண் பத்திரிகையாளர்களை அச்சுறுத்தல்களாக எண்ணுகின்றன. அவர்களது வளர்ச்சியை அனுமதிக்க அஞ்சுகின்றன. பல சந்தர்ப்பங்களில் பெண்கள் பிழைப்பு கருதியோ மனமொடிந்தோ பத்திரிகை நிறுவனங்களிலிருந்து வெளியேற வேண்டியிருக்கிறது. அமைப்பு சாராத ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளர்களின் பிழைப்போ இன்னும் கொடுமையாயிருக்கிறது.

இத்தனை சிக்கல்களையும் பிரச்னைகளையும் விவாதித்ததுடன் சுபாஷினி அலி, அருணா ராய், கிருஷ்ண குமார், அனுராதா செனாய், தனிகா சர்க்கார் போன்ற சிந்தனையாளர்கள் / இயக்கவாதிகளின் உரைகளையும் இடையிடையே கேட்கும் சந்தர்ப்பமும் வாய்த்தது. அடித்தள மக்களின் பிரச்னைகளைப் புரிந்துகொண்டவர்களும், அரசாங்கத்தின் சூதுவாதுகளை நன்கு அறிந்தவர்களும் பேசப் பேச மனத்தில் தீப் பொறியுடன் வந்திருந்த பெண் பத்திரிகையாளர்கள் தீப்பிழம்புகளாக சீறினார்கள். அந்திகளைச் சாடினார்கள். சபதங்கள் செய்தார்கள். தனிப்பட்ட முறையிலான விவாதங்களையும் உரையாடல்களையும் இங்கே எழுத முடியாது.

விவாதங்களிடையே அரசியல் சார்புகள் வெளிப்படவே செய்தன; கொஞ்சம் மதவாதம் தலை தூக்கியது; நிறைய விதண்டாவாதம் இருந்தது. ஆனால் சுயபச்சாதாபம் என்பது எந்த நேரத்திலும் தலைகாட்டவில்லை. இத்தனைக்கும் குடும்பத்தின் எதிர்ப்பையும் சமுதாயத்தின் சாடலையும் முதலாளிகளின் பாரபட்சத்தையும் எதிர்கொண்ட கசப்பான அனுபவத்தைத் தாங்கி பல பெண்கள் வந்திருந்தனர். அந்த அனுபவங்களைப் பிறருக்குப் படிப்பினையாகவே பகிர்ந்து கொண்டனர். சொந்த சுக துக்கங்களைக் கடந்து பத்திரிகைத் துறையின் மேம்பாட்டுக்கும் அதன் மூலம் ஜனநாயகத்தின் உயர்வுக்கும் நாட்டு நலனுக்கும் பாதைகள் தேடினர்.



மேம்பாலத்தடியில் சிலுசிலுவென்று காற்று அடித்தது. தலைமாட்டில் லாரி கடந்து போகிற சப்தம். வாழ்க்கைக்கும், மரணத்துக்கும் இடையே கிடைத்த ஒரு சாண் இடைவெளியில் ரோட்டோரம் அந்த நாடோடிக் கும்பல் நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தது. மேலே நட்சத்திரங்கள் இல்லாத வானம். தண்டவாளத்தில் விளக்குகள் மின்ன, தொலைவில் ஸ்டேஷன் தெரிந்தது. வெளியூர் போகிற உற்சாகத்தில் புகை வண்டி கூவியது. சோட்டு, இருட்டில் ரப்பர் துண்டுகளைத் தேடி எடுத்து நெருப்பில் போட்டான். காற்றில் தீய்கிற வாசனை கமறியது. பழைய சினிமாப் பாட்டு ஒன்றை ஜன்னல் வழியே மிதக்க விட்டு நெடுஞ்சாலையில் வீடியோ பஸ் விரைந்தது. தெருவில் காகிதம் அலைக்கழிந்து சற்று தூரம் பின்னால் பறந்து தரை தட்டி நின்றது.

சாயிராவுக்குத் தூக்கம் வரவில்லை. கிழிந்த போர்வைக்குள் புதியதாய் வந்த ஜில்லுவின் பால்மணம் அவளைக் கிறங்க அடித்தது. தூங்கினால் கனவாகி விடும் என்ற பயத்தில் அவள் தூங்காமல் இருந்தாள். இத்தனை கிட்டத்தில் ஒரு குழந்தையை அவள் அணைத்ததே இல்லை. ஜில்லு சியாமளா ஞாபகத்தில் சாயிராவின் வயிற்றி லேறி விரல் போட்டு குப்பறித்தான். பழகிய சுதகதப்பில் அவன் கண்கள் செருகிக் கொண்டன. அடாடா. இதற்குத்தான் ஒரு குழந்தை வேண்டுமென்று சொல்கிறார்களா? சாயிரா இருட்டில் ஆனந்தமாய்க் கண் திறந்து ரசித்தாள். வானில் ஒரு வியூகமாய் நாரைக் கூட்டம் ஒன்று தாழ்வாய்ப் பறந்து போனது.

சாயிராவின் நிறைவேறாத ஆசைகளின் வரிசை நீளமானது. வெறும் நாடோடிப் பெண்ணாக வாழ்ந்து மடிகிற அளவுக்கு அவள் எளிமையானவள் அல்ல. அவள் யோசிக்கிறவள். சிறு வயதில் பள்ளிக்கூடம் போக வேண்டுமென்று ஆசைப்பட்டாள். அழகிய சீருடை. காலில் பூட்ஸ் அணிய வேண்டும். இரட்டைப் பின்னலில் ரிப்பன்கள் பட்டாம்பூச்சிகள் போல் கட்டியிருக்கும்.



முதுகில் புத்தக மூட்டையை ஒரு சுமை யென்று எப்போதும் அவன் கருத மாட்டான். ஒரு குட்டி டிபன் பாக்ஸ்.

அதில் இரண்டு பிரெட் துண்டுகள். ஒரு ஸ்பூன் ஜாம். பள்ளியிலிருந்து வீடு திரும்பியதும் டு மினிட்ஸ் நூடுல்ஸ். பள்ளிக் கனவு பலிக்காததால் மற்ற கனவுகளும் பலிக்காமலே போய் விட்டன. ஆனால் சாயிராவின் அம்மா கெங்குவுக்கு, மகளின் ஆசைகள் தெரியும். பாவம். தெருவோரத்துக்கு வாழ்க்கைப்பட்டவள் என்ன செய்து விட முடியும்? அவனால் முடிந்தது சாயிராவுக்கு ரிப்பன் வைத்து இரட்டைப் பின்னல் பின்னி விடுவான். விலையைப் பார்க்காமல் பிரெட்டும், நூடுல்ஸும் வாங்கித் தருவான். பள்ளிக்கூடம் மட்டும் அனுப்ப முடியாது. ஊருக்கு நடுவே அல்ல; அவர்கள் ஊருக்கு வெளியே வாழ்கிறவர்கள். ஓரிடத்தில் நில்லாத தேசாந்திரிகள். கூடாரம் தூக்கி விட்டால் இனி அடுத்த ஊர் எது என்று தெரியாது. யாதும் ஊரே. யாவரும் கேளிர்.

பிற்பாடு சாயிரா நிறைவேறாத ஆசைகளுடன் வாழப் பழகிக் கொண்டாள். தெரு போஸ்டர்களில் கொஞ்சம் கொஞ்சம் ஹிந்தி பயின்றாள். ஆங்கிலப் பயிற்சிக்கென்று புத்தகம் ஒன்றும் வாங்கிக் கொண்டாள். திரிசங்கு வாழ்க்கையில் இப்போது அந்தப் புத்தகம் போன இடம் தெரியவில்லை. குளிருக்கு நெருப்பு வளர்க்கிற சோட்டுவுக்குத்தான் வெளிச்சம்.

வாலிப வயதில் சாயிரா சராசரி லம்பாடியாகவே ஆகி விட்டாள். சதாசர்வ நேரமும் அலறிக் கொண்டிருக்கிற ஒரு டிரான்ஸிஸ்டர். சிறிய கண்ணாடிகள் பதித்த பாவாடை, சோளிகளில் அவள் உலகம் தன்னிறைவு பெற்றது. கண் மை, ரெமி பவுடர், மலிவான லிப்ஸ்டிக். முகம் பார்க்க உடைந்த கண்ணாடி எப்போதும் இருக்கும். திருமணத்துக்கு வெளியே எங்கும் மாப்பிள்ளை தேடி போகும்படியாய் இல்லை. அவள் தகப்பனுக்கு குறி தவறாமல் முயல் அடிக்கிற சோட்டுவை ரொம்பப் பிடிக்கும். சுயம்வரத்தில் வேறு அரசர்கள் இல்லை. சாயிராவுக்குச் சோட்டுவே கணவனாக வாய்த்தான்.

சாயிராவுக்கு இப்போது ஒரு கனவு கூடியது. அவள் ஒரு குழந்தைக்குத் தாயாக வேண்டும். கூடாரம் போடுகிற ஊர்களில் எளிய எலெக்டிரிகல் வேலைகளைப் படிக்க சோட்டுவைத் தூண்டினாள். அவள் சொல்கிறபடியெல்லாம் தலையை ஆட்டி சோட்டு ஒரு எலெக்ட்ரீஷியன் ஆனான். எத்தனையோ வருடங்கள் கழித்து சாயிராவின் டிரான்ஸிஸ்டரைப் பாட வைத்தான். சாயிரா அப்போது கர்ப்பமாய் இருந்தாள். கெங்குவுக்கு அவளைப் பார்க்கிறபோதெல்லாம் சந்தோஷமாய் இருந்தது. அவளது அடர்ந்த கூந்தலை இளம் வெய்யிலில் பின்னி விடும் போது சாயிரா தன் ஆசைகளைச் சொல்வாள்.

3

ம.வே. சிவகுமார்

காக்ரே பூக்ரே.... காக்ரே பூக்ரே.

அம்மா. என் அன்புள்ள அம்மா. உனக்குத் தெரியுமா என் புருஷன் ஊருக்கு நடுவே பிழைக்கிற வித்தையைக் கற்று விட்டான். நல்லவிதமாய் குழந்தை பிறக்க வேண்டும். ரோட்டோரம் வசிக்கிற இந்த திகம்பர வாழ்க்கை போதும். நாம் உழைக்கத் தெரிந்தவர்கள். கூடுதல் வருவாய்க்குக் கூடைகள் பின்னலாம். எனக்கு ஓவியம் வரையத் தெரியுமென்று உனக்குத் தெரியும்தானே? பானைகளில் ஓவியம் தீட்டி விற்கலாம். உனக்குத் தெரியுமா அம்மா. சோட்டு ரொம்பவும் ஆண்மையானவன். உனக்குப் பேரன்தான் பிறக்கப் போகிறான்.



"காதல் நோய்க்கு மருந்து என்பது மேலும் மேலும் காதலிப்பதுதான்" - *ஹென்றி டேவிட் தாரோ*

அநேகம் ஆசைகளுடன் சாயிரா அன்று இரவு தூங்கப் போனாள். நள்ளிரவு தாண்டியிருக்கும். சாலையோரமாய் சப்தமில்லாமல் இரண்டு ஜீப்கள் வந்து நின்றன. உள்துறை மந்திரி மறுநாள் மதியம் அந்த வழியாக காரில் கடக்கவிருக்கிறார். தெருவோரத்தில் நாடோடி கும்பலினால் எதுவும் நேர்ந்து விடக் கூடாது. நெருப்பைச் சுற்றி சுருண்டிருந்த கூட்டத்தை, கையில் லத்தியுடன் போலீஸ் வளைத்தது.

காக்ரே பூக்ரே காக்ரே பூக்ரே.

"சாயிரா. போலீஸ் வந்திருக்கிறது, ஓடு!"

இருட்டில் சோட்டு ஒரு பக்கமும், கெங்கு ஒரு திசையிலும், சாயிரா ஒரு புறமும் அவள் தகப்பன் இன்னொரு திக்கிலுமாக கண்மண் தெரியாமல் ஓடினார்கள். முரட்டுத்தனமாய் போலீஸ்காரன் ஒருவன் தண்டவாளக் கட்டையில் தடுக்கி விழுந்த சாயிராவின் கூந்தலைப் பிடித்துத் தூக்கினான். அந்த ஒரு இரவில் அடுத்தடுத்து அநேக முரட்டு ஆட்களை சாயிரா எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பழைய இடத்தில் இரண்டு நாட்கள் கழித்து அனைவரும் சந்தித்துக் கொண்ட போது கேள்விகள் எதுவும் கேட்கப்படவில்லை. கெங்குவை அணைத்து சாயிரா ஓவென்று அழுதாள். அவள் வயிற்றில் உருவான கரு அங்கேயே கலைந்தும் விட்டது.

தொடர்ந்த இரத்தப்போக்குடன் தெருவோரம் சாயிரா பல நாட்கள் கிடந்தாள். இனி அவளுக்குக் குழந்தையே பிறக்காது என்று கெங்கு தன் அனுபவத்தில் கண் கலங்கிச் சொன்னாள். ஊர் நடுவே வாழ்கிற சாயிராவின் ஆசை இவ்வாறாய் அஸ்தமித்தது.

சாயிராவுக்கு ஒரே ஒரு ஆசை மட்டும் மிஞ்சியிருந்தது. கடைசி வரை அவளுடைய அன்பான அம்மா கெங்கு அவள் கூடவே இருக்க வேண்டும். அதுபோதும் அவளுக்கு. குறைந்தபட்சம் இந்த ஒரு ஆசையை ஆண்டவன் நிறைவேற்றுவான் என்று சாயிரா நம்பிக்கையாய் இருந்தாள். பெரும் நகரங்களில் முகாமிடும் போது சோட்டு ஊருக்குள் வேலை செய்து கைநிறைய சம்பாதித்து வந்தான். எல்லாமே கடலில் கரைத்த பெருங்காயம்தான். பரவாயில்லை. அவள் அம்மா கெங்கு அவளுடன் இருக்கிறாள். சாயிராகாசு மிச்சம் பிடித்து தாயாருக்கு ஒரு ஸ்வெட்டர் வாங்கினாள். அதை அணிந்து கொண்ட இரவுதான் கெங்கு தூக்கத்திலேயே மாரடைத்து இறந்து விட்டாள்.

காக்ரே பூக்ரே... காக்ரே பூக்ரே.

யாதும் ஊரே... யாவரும் கேளிர்.

எங்களுக்கென்று எந்த ஊரும் கிடையாது. கூடாரம் இருக்கிற ஊர் எங்கள் ஊர்.

தெருவில் போக்குவரத்து அதிகமாக இருந்தது. யாருக்கும் அருகாமையிலேயே ஓர் இறுதிச் சடங்கு நடப்பது தெரியாது. கெங்குவின் உடல் கூடாரத்துக்குப் போனது. உள்ளே பெரிய பள்ளம் தோண்டியிருந்தார்கள். சொல்வதற்கு நண்பர்கள் இல்லை. வருவதற்கு உறவினர்கள் யாரும் இல்லை. சாயிராவின் தகப்பன் மடேர் மடேர் என்ற தலையில் அடித்துக் கொண்டான். பள்ளத்தில் கெங்கு சாயிராவைப் பார்த்துச் சிரித்த மாதிரி இருந்தது. சாயிரா குளிந்து புதிய

ஸ்வெட்டரை செங்குவின் மேல் வைத்தான். எம்ப்ராய்டரி வேலைப்பாட்டை ஈர மண் மூடத் துவங்கியது. வெளியே உலகம் வழக்கம் போல் இயங்கிக் கொண்டிருந்தது.

இது அதே கூடாரம். வேறு ஊர். அம்மாவைப் புதைத்த ஊர் பெயர் மறந்து விட்டது. காலம் செய்த அற்புதம். சாயிராவின் வயிற்றின் மேல் கதகதப்பாய் ஒரு குழந்தை படுத்திருந்தது. சாயிரா ஒற்றை விரலில் ஜில்லுவின் அரையணாக் கயிறு அவன் இடுப்பில் பதித்த தடத்தை தடவிக் கொடுத்தாள். போதும். அவளுடன் இந்த குறவர் வாழ்க்கை நிற்கட்டும். இது மதராஸி குழந்தை. மதராஸிகள் நல்லவர்கள். பாவம். அந்த முகம் தெரியாத மதராஸி பெண். குழந்தையைத் தொலைத்து விட்டு என்ன பாடு பட்டுக் கொண்டிருப்பாள்? அவளிடம் இந்தக் குழந்தை சேர வேண்டும். வயிற்றின்

''காதல் என்பது அணையிட்டுத் தடுக்க முடியாத ஆசை. அந்த ஆசையின் நோக்கம் நம்மை யாராவது காதலிக்க வேண்டும் என்பதுதான்'' — *ஹாயி கின்ஸ்பெர்க்*

மேல் புதிய கதகதப்பு பழகி விடக் கூடாது. இது ஊருக்கு நடுவே வளர வேண்டிய குழந்தை. அங்கேதான் இருக்க வேண்டும். சாயிரா ஜில்லுவை இடுப்பில் தூக்கிக் கொண்டாள். அனுபவ ஞானத்தில் சோட்டு வைத் துணைக்கழைத்து போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

இன்ஸ்பெக்டர் பியாரேலாலின் புல்லட் வண்டி ஜபல்பூரில் மிகவும் பிரசித்தமானது. ரௌடிகள் போட்டது போட்டபடி அதன் சப்தத்தில் ஓடி விடுவார்கள். கான்ஸ்டபிள் ராம்லால் பின்னால் அமர்ந்திருக்க வண்டியை பியாரேலால்தான் ஓட்டி வருவான். தகராறு நடக்கிற இடங்களில் வண்டியில் உட்கார்ந்தபடியே லத்தியைச் சுழற்றுவான். ஆங்காங்கே மறைவாய் நடக்கிற மாமூல் விஷயங்கள் அவன் அனுமதித்தவைதான். ஆனால் எல்லாமும் எப்போதும் அவன் கட்டுக்குள்தான் இருக்கும்.

பியாரேலால் உத்திரப்பிரதேசத்துக்காரன். ஜாட் இனத்தைச் சேர்ந்தவன். அவர்கள் கரடுமுரடானவர்கள். இலேசில் சிரிக்க மாட்டார்கள். போராடுகிற குணம் படைத்தவர்கள். பியாரேலால் மிகவும் ஜாலியான பேர் வழி. போலீஸ் உத்தியோகத்தில் பணத்துக்குப் பல வழிகள் இருக்கின்றன. ஆனால் அத்தனை பணத்துக்கும் ஒரு கிலுகிலுப்பை வாங்க முடியாமல் குழந்தை இல்லாததுதான் அவனுடைய குறையாக இருந்தது.

பல பேர் சொன்னதின் பேரில் பியாரேலால் தமிழ்நாட்டில் ராமேஸ்வரம் கோவிலுக்கு குழந்தை வரம் வேண்டி புறப்பட்டான். அவனும், அவன் மனைவியும் டூரிஸ்ட் பஸ்ஸில் திருப்பதி வழியாக தென்னகத்துக் கோவில்களை ஒரு வலம் வந்தார்கள். அரசமரத்தைச் சுற்றிய உடனே அடி வயிற்றைத் தொட்டுப் பார்த்தால் எப்படி? நல்ல செய்தி இனிமேல் வரும்.



பியாரேலால் தன் மனைவியுடன் வெளியே போகிறபோதெல்லாம் யார் மூலமாவது குழந்தை இல்லாமை பற்றி பேச்சு வந்து விடும். பெரிய பலூனுக்குச் சின்ன ஊசி போதும். உற்சாகம் வெளியேறி பியாரேலால் தோள் குறுகிவிடுவான். வீடு திரும்பியதும் தனிமையில் அவன் மனைவி அழுவாள். ஒரு குழந்தை அவன் வாழ்க்கையை எத்தனை இனிமையாக்கும்?

பியாரேலால் ஆழ்ந்த யோசனையில் பல் குத்திக் கொண்டிருந்தான். அவன் டேபிள் மேல் டீயை வைத்துவிட்டு கான்ஸ்டபிள் ராம்லால் சலாம் வைத்தான்.

"என்ன?"

"இன்றைக்குப் பௌர்ணமி."

"உம்."

பியாரேலால் நாற்காலியில் சாய்ந்து சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தான். ஸ்டேஷனின் பின்பக்கம் கல் அடுப்பில் ராம்லால் அவனுக்கு வெந்நீர் சுட வைத்தான். சுமார் நாற்பது கிலோ மீட்டரில் ஒரு மந்திர் இருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ண மந்திர்.



வாசலில்
தயங்கி நின்று போகப் போகும் - உன்
வண்டியின் ஓசைக்காகக்
காத்திருக்கிறேன்.

உன்னிடம் பேசுவதற்கான
வார்த்தைகளோடில்லை நான்

நீ வந்தால்
காண்பிக்க - எந்தப்
பூவின் இதழும்
என் சேமிப்பிலில்லை

எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாய்ச் சொல்ல
எந்த நியாயமான காரணமும்
என்னிடமில்லை தான்

ஆனாலும்
உன்னை எதிர்பார்த்துக்
கொண்டிருக்கிறேன்

நீ வருவாய் என்று
தோன்றிவிட்ட எண்ணத்தை அழிக்க.

— **வெண்ணிலா**

'நீரிலலையும் முகம்' தொகுப்பிலிருந்து.

அதன் அருகில் ஒட்டினாற்போல் போகிற தெரு. அங்கே குரு மகராஜ் முகாமிட்டிருக்கிறார். பௌர்ணமி நாட்கள்தான் விசேஷம். அப்போது மகராஜுக்கு அருள் சொல்கிற சக்தியும் வந்து விடும். அவர் சொல்லிவிட்டால் அதற்கு மறுவார்த்தை கிடையாது. காரியம் நிச்சயம் ஜெயமாகும்.

ஷாமியானா பந்தலில் பஜன் பாட்டு வரவேற்றது. வழியிலேயே சாமந்திப் பூ விற்றார்கள். உள்ளே நுழைந்ததும் ஊதுபத்தி வாசனை தூக்கியது. ஆசிரம ஊழியன் ஒருவன் பியாரேலாலை அடையாளம் கண்டு வரிசையின் நடுவில் நுழைத்து விட்டான். பின்னால் ஒருவன் அதை ஆட்சேபிக்க தடிதடியாய் ஆசிரம ஊழியர்கள் ஓடி வந்தார்கள்.

"பம் பம் மஹாதேவ்!"

குரு மகராஜ் அடிவயிற்றிலிருந்து கத்தினார்.

"என்ன அது சப்தம்?"

யாரும் பதில் சொல்லவில்லை.

"ஆண்டவன் சன்னிதானத்தில் அனைவரும் சமம். இன்ஸ்பெக்டர். தயவுசெய்து வரிசையில் வாருங்கள்."

பியாரேலால் உடல் வியர்த்து வரிசையின் பின்னால் நகர்ந்தான். நெடுநேரம் கழித்து அவன் முறை வந்தது.

குருமகராஜ் அவன் உச்சந்தலையில் கை வைத்து அழுத்தினார்.

"இன்னும் மூன்று மணி நேரத்துலே நீ ஒரு குழந்தையைப் பார்ப்பே. அதுதான் உன் குழந்தை."

சந்தேகம் கேட்பதற்குள் ஆசிரம ஆள் தள்ளி விட்டான். வெளியே வந்து ரொம்ப நேரத்துக்கு பியாரேலாலுக்கு தன் உச்சந்தலையில் குருமகராஜ் கை அழுந்துகிற மாதிரியே இருந்தது.

"இன்னும் மூன்று மணி நேரத்துலே நீ ஒரு குழந்தையைப் பார்ப்பே. அதுதான் உன் குழந்தை."

ஜபல்பூர் ஸ்டேஷன் முன் புல்லட் வண்டி நின்றது. படிக்கட்டில் சாயிரா எழுந்து கொண்டாள். பியாரேலால் அவளை முறைப்பாய்ப் பார்த்தபடியே தன் அறைக்குள் நுழைந்தான். அவனுடைய முரட்டுக் கால்களில் மெத்தென்று எதுவோ மோதியது. பியாரேலால் குனிந்து பார்த்தான். கிஷேஜில்லு அண்ணாந்து பார்த்துச் சிரித்தான்.

மூன்று மணி நேரத்தில் இன்ஸ்பெக்டர் பியாரேலால் பார்த்த முதல் குழந்தை.

(தொடரும்)

சுவடுகள் – 6

கணையாழி கி. கஸ்தூரிரங்கன் தினமணிக்கும், தினமணி கதிருக்கும் ஒருசேர ஆசிரியராக இருந்த காலம். தனி வார இதழாக வெளிவந்து கொண்டிருந்த கதிர், தினமணியின் இலவச இணைப்பாக மாற்றப்பட்டிருந்தது.

கஸ்தூரிரங்கன் சிறந்த அரசியல் கட்டுரையாளர். கணையாழி நிறுவனர். சி.சு. செல்லப்பாவின் எழுத்து பத்திரிகையில் கவிதை எழுதிய கவிஞர். அவரது அரசியல் ஆர்வங்கள் தினமணியையும் இலக்கிய ஆர்வங்கள் கதிரையும் செழுமைப்படுத்திக் கொண்டிருந்தன.

தினமணிக்கு ஓர் அழைப்பிதழ் வந்தது. ஜெயகாந்தனின் 'ஏழு தலைமுறை எழுச்சி' என்ற தொலைக்காட்சித் தொடருக்கான பத்திரிகையாளர்கள் சந்திப்பு (பிரஸ் மீட்) குறித்த அழைப்பு. தொடரைத் தயாரித்திருந்த கிருஷ்ணசாமி அசோசியேட்ஸ் நிறுவனம் அழைப்பை அனுப்பியிருந்தது. ம.பொ.சி. தலைமையில் ஜெயகாந்தன் பேசுகிறார். சுதந்திரத் தியாகிகளின் வாழ்க்கை பற்றிய அந்தத் தொடரின் சில பகுதி



• ம.பொ.சி.

ஓர் அழகிய கிழவரின் பிடிவாதம்!

களைத் திரையிட்டும் காட்டுகிறார்கள். இடம்: தாஜ் கொரமண்டல் உணவகம்.

கஸ்தூரிரங்கன் என்னை அழைத்து அழைப்பிதழைக் கொடுத்து நீங்கள் போய்வந்து ரிப்போர்ட் செய்யுங்கள்' என்றார். ம.பொ.சி., ஜெயகாந்தன் இருவருமே எனக்குப் பிடித்த பேச்சாளர்கள் என்பது அவருக்குத் தெரியும்.



• கிருஷ்ணசாமி

அழைப்பிதழின் கடைசி வரியைப் பார்த்த நான், அதைக் கஸ்தூரிரங்கனிடம் காண்பித்து என் தயக்கத்தைத் தெரிவித்தேன். 'காக்டெய்ல் பார்ட்டி' என்று அதில் அச்சிடப்பட்டிருந்தது.

'உங்களுக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. ஆகையால் நீங்கள் சர்பத் சாப்பிட்டுவிட்டு வந்துவிடலாம். ஆனால் ம.பொ.சி. பேச்சு, ஜெயகாந்தன் பேச்சு என்ற இரண்டு சிறப்பம்சங்கள் உண்டே. அவற்றை நீங்கள் தவறவிடலாமா?' என்று கேட்டார் அவர்.

அவ்விருவர் பேச்சையும் தவறவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையோடு முன்கூட்டியே அந்தப் பிரஸ் மீட்டுக்குச் சென்று காத்திருந்தேன். ம.பொ.சி., ஜெயகாந்தன் இருவரும் மேடையில் வந்து அமர்ந்தார்கள்.

அழகிய கிழவரான ம.பொ.சி.யைப் பார்த்ததும் என் நினைவுகள் பின்னோக்கிப் பாய்ந்தன. சென்னையில் எத்தனை தடவைகள் ம.பொ.சி. பேச்சைத் தேடித் தேடிச் சென்று கேட்டிருக்கிறேன்! ஒருமுறை கண்ணகியைப் பற்றி அற்புதமாகப் பேசினார் சிலம்புச் செல்வர். கூட்டம் அவர் பேச்சு முடிந்த பிறகும் வியப்பில் கைதட்ட

திருப்பூர் கிருஷ்ணன்

மறந்து லயித்திருந்தது. அவருக்குப் பின் பேச வந்தார் சௌந்தராகைலாசம். கூட்டத்தினரின் கவனத்தைத் தம் பக்கம் திருப்ப வேண்டுமே! 'ம.பொ.சி.யின் மீசை ஏன் நரைத்திருக்கிறது? என்பதை இன்று தான் கண்டுபிடித்தேன்' என்று பேச்சைத் தொடங்கினார். கூட்டம் ஆவலுடன் காரணத்தை அறியக் காத்திருந்தது. 'இப்படித் தேனொழுகப் பேசினால், தமிழ்த்தேன் பட்டு மீசை நரைக்காமல் என்ன செய்யும்!' என்றார். கூட்டத்தினரின் கைதட்டல் விண்ணைப் பிளந்தது.

மயில்போல் இலேசாய் அவ்வப்போது கழுத்தை அசைத்துக் கொண்டும் கண்களைச் சிமிட்டிக் கொண்டும் ம.பொ.சி. பேசும் திருத்தமான உச்சரிப்போடு கூடிய பேச்சைக் கேட்பது மட்டுமல்ல, அவரது பாவனைகளைப் பார்ப்பதும் தனி ஆனந்தம்.

ஜெயகாந்தன் பேசுவதற்கென்ன, கேட்கவே வேண்டாம் என்று சொல்லக் கூடாது! கேட்க வேண்டும் அவர் பேச்சை. பாரதியின் வரிகளுக்குப் புதிய விளக்கங்கள் தருவதில் கைதேர்ந்தவர். 'மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்ற வரியை விளக்கும்போது ஒருமுறை 'மாதர்களை ஆண்களாகிய நாமா இழிவு செய்கிறோம்? ஏராளமான நகைகளையும் அணிமணிகளையும் போட்டுக் கொண்டு அவர்களே அல்லவா அவர்களை இழிவு செய்து கொள்கிறார்கள். அதனால் அல்லவோ பாரதி பாடினான், மாதர் – தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்று!' எனச் சொல்லிக் கேட்பவர்களைப் பிரமிக்க வைத்தார்.

பிரஸ் மீட் தொடங்கியது. மேடைக்கு வந்தார் கிருஷ்ணசாமி. 'ம.பொ.சி. அவர்களைத் தலைமை தாங்க வருமாறு அழைக்கிறேன்' என அன்போடு அழைத்தார். ஒலி பெருக்கி முன் வந்தார் ம.பொ.சி. 'நான் தலைமை தாங்குவதா வேண்டாமா என்பதைப் பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை' என அறிவித்தார்! அவையில் திகைப்புடன் கூடிய மௌனம்.

'இந்த அழைப்பிதழில் இடம் பெற்றுள்ள ஒரு விஷயம் குறித்து எனக்கு எதுவும் தெரிவிக்கப்படாததால் தலைமை தாங்க ஒப்புக் கொண்டேன். என் தலைமை, காக்டெய்ல் பார்ட்டி இரண்டும் சேர்ந்து நிகழ இயலாது. ஏதாவது ஒன்று மட்டும் தான் நிகழலாம். எது நிகழப்போகிறது என்பதைக் கிருஷ்ணசாமிதான் முடிவு செய்ய வேண்டும்' என்று கறாராகத் தெரிவித்து விட்டு அமர்ந்துவிட்டார். பத்திரிகையாளர்கள் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

உடனடியாக மேடைக்கு வந்தார் கிருஷ்ணசாமி. தெரியாமல் தவறு நேர்ந்துவிட்டதாகவும் மன்னிக்குமாறும் கேட்டுக் கொண்டார். ம.பொ.சி. தலைமை தாங்குவது தான் சுதந்திரத் தியாகிகளைப் பற்றிய இந்தத் தொடரின் விழாவுக்குப் பொருத்தம் என்று வேண்டிக் கொண்டார். காக்டெய்ல் பார்ட்டி உடனடியாக ரத்து செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களின் கைதட்டல்களுக்கிடையே ம.பொ.சி. மேடையேறி அற்புதமாகப் பேசினார் என்பதைச் சொல்லத் தேவையில்லையே?

ம.பொ.சி. மேல் மட்டுமல்ல, நிலைமையை உடனடியாகச் சமாளித்துச் சரி செய்த கிருஷ்ணசாமியின் சாதுரியத்தின் மேலும் எனக்கு மிகுந்த மரியாதை எழுந்தது.

மதுவிலக்குக் கொள்கையில் ம.பொ.சி.க்கு இருந்த தீவிரமான பிடிப்பு, எல்லா அரசியல் தலைவர்களுக்கும் இருந்துவிட்டால் நாடு எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற சிந்தனையும் மனத்தில் எழுந்தது.

(தொடரும்)



காதல் புது மொழி!

ஹெச். கிரிதரன்
(பீகாக் என்டர்பிரைசஸ்)

சட்டுப் புட்டுனு காதல் பண்ணினா சாவகாசமா வருந்தலாம்!

ஓம் சரவணபவ

பிப்ரவரி இதழில்...

பாலகுமாரன்

எழுதும்

இதற்குத்தான் ஆசைப்பட்டனா?

-பாலகுமாரன்

பாலகுமாரசுவாமி ஆன கதை...

மகான்கள்... எத்தனை மகான்கள்!

-ஸ்ரீ வேணுகோபாலன்

இரு புதிய தொடர்கள் அதிக பக்கங்கள்



அன்பளிப்பு :

நலம் தரும்

ஸ்ரீ விஷ்ணுபாதம்

-செம்பில் வார்க்கப்பட்டது

செல்வம் தரும்

ஸ்ரீ ஐஸ்வர்யேஸ்வரர்

-லேமினேட் செய்யப்பட்ட வண்ணப்படம்

பிப்ரவரி 5 - முதல் விற்பனைக்கு.... முன்பதிவு செய்துகொள்ளவும்.

விவரங்களுக்கு: சாருப்பிரபா பப்ளிகேஷன்ஸ் , 105, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-600 014.



அன்பு பாரதி!

நீ என்னைக் காத்திருக்க வைக்க வேண்டுமென்று ஒரு போதும் நினைப்பதில்லை. நான் உன்னைக் காத்திருக்க வைக்க வேண்டுமென்று ஒரு போதும் நினைப்பதில்லை. ஆனால் எனக்காக நீயும் உனக்காக நானும் காத்திருக்க வேண்டி அமைந்து விடுகிற தருணங்கள்தான் எத் தனை உயர்வானவை.

ஏதேனும் ஒரு காத்திருத்தலை சாத்தியப் படுத்துகிற எதுவுமே உயர்வானதுதான். காத்திருக்க வைக்கிற மழை, நெல்மணி களுக்காக காத்திருக்கிற பறவைகள், அதன் குஞ்சுகள்... காத் திருக்க வைக்கிற நிழல், பருவம், சின்ன நெற்றியில் திலக மிட்டு ஜன்னல் கிழ்க் காத்திருக்கும் கண்கள், இப்படி எல்லாமே?

நீ வேண்டா மென்று நினைத்தாலும் உனக்காக காத்திருக்க வேண்டிய நிமிடங்களில் என் காதல் பூத்து விடுகிறது. நேசம் கொண்டவனுக்கு அது தொல்லை இல் லையே?

இந்த காத்திருத்தலும் தவிப்பும் என் அன்பு நெஞ்சமே உனக்கு அடிக்கடி வேண்

அன்பு பாரதி...

டும் என்று தவித்துப் போகிறேன் பாரதி.

– அந்த பழைய கடிதத்தை இப்போது படித்ததும் பாரதிக்கு கண்கள் துளித்து விட்டன. கிருஷ்ணா... என் அன்புக் காதலனே... நீதான் எத்தனை உயர்வானவன் ஏதோ ஒரு காத்திருத்தலின்போது எனக்காக நீ எழுதி வைத்த இந்தக் கடிதம்தான் வாழ்வை இப்பொழுதும் எத்தனை அர்த்தம் உடையதாக ஆக்குகிறது. இலேசாக கவிதை மாதிரி என்னென்னவோ எழுதுகிறாய், பேசுகிறாய். எனக்கு அதெல்லாம் தெரியாது.. உன்னைக் காதலிக்க மட்டும்தான் தெரியும். ஏதோ ஒரு நாள் சொன்னாயே "அள்ளிப் பறித்திட்டு அவன் மார்பில் எரிந்து என்னழலைத் தீர்வேனே" என்று ஆண்டாள் பாடினாள்னு. உடம்பு முடியாமல் படுத்திருக்கிற இந்த நேரத்தில்தான் எனக்கு ரொம்பவே அப்படித் தோணுகிறது.

கதவைத் தட்டிவிட்டு பாரதியின் அப்பா உள் நுழைந்தார். அருகில் வந்து மகளின் நெற்றியில் புறங்கையால் தொட்டுப் பார்த்தார். "என்னம்மா... இது காய்ச்சல் விடவேயில்லையம்மா...?" என்றார் கவலையோடு.

"சரியாயிடும்பா..." என்றாள் பாரதி.

அவருக்குத் தன் மகளின் மேல் கவலை அதிகமாகிவிட்டது. துறுதுறுவென்று ஓடிக்கொண்டிருப்பாள். டென்னிஸ் ஆடும்போது எத்தனை வேகமாய் சர்வீஸ் போடுவாள். "இப்படி ஏஸ் போட்டா நான் எப்படி ஆடுவேன்?'' என்பார் சுகமாக அடித்துக் கொண்டு. நான்கு நாட்களாகத்தான் இப்படி துவண்டு படுத்துக்கொண்டிருக்கிறாள். ''அப்பா... அன்னாகோர்னிகா மாதிரி ஆடறேன் இல்லை.. ஆனா அவள் மாதிரி ரகசியமாக கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்... நீங்கதான் முன்னால நின்னு கிருஷ்ணாவைக் கல்யாணம் பண்ணி வைக்கணும்" என்பாள். என்னவோ கடுமையான உடல் வலி. காய்ச்சல்தான் விடவே மாட்டேன் என்று இருக்கிறது.

"கிருஷ்ணா வரலையா...?" என்றார்.

"இன்னும் பத்து நிமிஷத்துல வந்துடுவார்... ரெண்டு மணிக்குத்தானே ஆபீஸ் முடியும்...?"

பாரதிக்கு கிருஷ்ணாதான் உலகம் என்பது அவருக்குத் தெரியும். ஆனால் கிருஷ்ணாவுக்கும் பாரதிதான் உலகம் என்பது அறிந்தபோது அவர் அடைந்த மகிழ்ச்சியை உலகத்தில் வேறு யாரும் எதற்காகவும் அடைந்திருக்க முடியாது. அற்புதமான பையன்.

சரியாக பத்து நிமிஷத்தில் கிருஷ்ணா வந்துவிட்டான்.

"பாரதி...!"

"கிருஷ்ணா...! வந்துட்டியா...? வாயேன் இப்படி பக்கத்துல உக்காந்துக்க... அப்பா கொஞ்ச நேரம் கிருஷ்ணா கையைப் பிடிச்சிக்கறேம்பா..." என்றாள்.

அவர் எழுந்து, "அதனால என்னம்மா...? நான் ஈவ்னிங் கொடுக்க வேண்டிய மருந்துகளை வாங்கிட்டு வந்துடறேன்" என்று கிளம்பினார்.

"உனக்கேத்த அப்பா..." என்று கிருஷ்ணா அவள் தலையில் தட்டினான்.

பாரதி அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு "கிருஷ்ணா... ரொம்ப போரடிக்குதுப்பா... சீக்கிரம் வீட்டுக்குப் போயிடலாம்... ஒரு ரவுண்ட் டென்னிஸ் ஆடினா எல்லாம் சரியாப் போயிடும்...'' என்றாள்.

கிருஷ்ணா, "குழந்தை மாதிரி பேசாதே... இன்னைக்கும் டெம்ப்ரேச்சர் குறையல..

வஸந்த் செந்தில்

ஹண்ட்ரட் இருக்குது... கீழே கேட்டுட்டுத்தான் வரேன்.. லேப் ரிசல்ட் வந்தாத்தான் எதுவும் சொல்ல முடியும்கிறாங்க..'' என்றான்.

''இங்க என்ன பொழுதுபோக்கு தெரியுமா...?''

''என்ன?''

''நீ எனக்கு எழுதின பழைய லவ் லட்டர்ஸை படிக்கறதுதான்..''

''நல்ல பொழுதுபோக்கு... கைய விடேன்...ஜூஸ் எடுத்துத்தரேன்...''

''மாட்டேன்... இங்க படுத்துக்கிட்டு உன் லட்டரை படிச்சப்படிச்ச என்ன ஆச்சு தெரியுமா...? எனக்கு உன்மேல காதல் அதிகமாயிருச்சப்பா...''

''என் மேல உனக்குக் காதலை அதிகமாக்கியதுக்காக இந்த நர்ஸிங்ஹோமுக்கு ரொம்ப தேங்க்ஸ்..''

''என்ன கிண்டலா....? உதைப்பேன்...!'' என்று முஷ்டி மடக்கி அவன் புஜத்தில் குத்தினான். விரல்கள் கடுமையாக வலித்தன. கண்ணீர் வந்துவிட்டது. இது சாதாரண வலி மாதிரி இல்லை.

அவள் கண்ணீரைப் பார்த்து கிருஷ்ணா துடித்துப் போய்விட்டான். ''பாரதி..'' என்று அணைத்துக்கொண்டான்.

மெல்ல கதவு தட்டப்பட, எழுந்து போய்த் திறந்தான். பாரதியின் அப்பா உள் நுழைந்தார். மருந்துகளை எல்லாம் டேபிள் மேல் வைத்துவிட்டு ''என்னம்மா...?'' என்றார் சற்று கலங்கி.

''ரொம்ப ஃபெட்டிக்கா இருக்குப்பா... எலும்பெல்லாம் கடுமையா வலிக்குது..'' என்றாள்.

''நாலு மணிக்கு லேப் ரிசல்ட் வந்துடும்மா... என்ன பெரிசா இருந்துடப் போகுது...? சரியாயிடும்மா...''

பத்து நிமிடத்தில் பாரதி மறுபடியும் உற்சாகமாகி ''அப்பா... நீங்க வீட்டுக்குப் போயிட்டுக் குளிச்சிட்டு வந்துடுங்க... கிருஷ்ணாதான் இருக்காரே...'' என்றாள்.

''ஆமா அங்கிள்... நீங்க போயிட்டு வந்துடுங்க..''

அவர் சரி என்று கிளம்பினார். முகத்தில் வருத்தம் மாறவேயில்லை. கிருஷ்ணாவும் சோகமாக இருந்தான்.

பாரதி அவனை மெல்லத் தட்டி, ''கிருஷ்ணா உன் செக்ரட்ரி ரொம்ப இன்னைக்கு உரசினாளோ...?'' என்றாள்.

''எதுக்கு?''

'லிரில் சோப் வாசனை அடிக்குது..''

''ஆரம்பிச்சுட்டியா...? நானும் லிரில் சோப்தான் போடறேன்..''

''ப்ரீத்தி ஜிந்தா விளம்பரத்துல வந்ததுல இருந்தா...? என்கிட்ட சொல்லவேயில்ல...?''

கிருஷ்ணா அவளை இலேசாக முறைத்து விட்டு, அவளின் கன்னத்தைத் தன் இரு கைகளால் தாங்கிக் கொண்டு 'ஐ லவ் யூ..' என் றான்.

''எத்தனை நாளைக்கு?''

''ம்.. என் உயிர் இருக்கறவரை.. இதென்ன கேள்வி...?'' என்றான்.

''எவ்ளோ இருக்கும் உன் காதல்? இவ்ளோ இருக்குமா?'' என்றாள் அவன் பாக்கெட்டில் இருந்த ரெனால்ட்ஸ் பேனாவைத் தூக்கிக் காட்டி.

''இல்லை...'' என்று அதை வாங்கி தன் பாக்கெட்டில் வைத்துக்கொண்டு ''அவ்ளோ..'' என்றான் சுவரில் ஓவியத்தைக் காட்டி.

சுவர் ஓவியத்தில் வானம் பரந்து விரிந்து இருந்தது. நீல வண்ணத்தில் தீற்றல்கள்.

பாரதி அவன் விரல்களோடு தன் விரல்களைப் பிணைத்துக்கொண்டாள்.

மாலை நான்கு மணி. டாக்டர் உள் நுழைந்தார். கூடவே இரண்டு செவிலிப் பெண்கள். கிருஷ்ணா வெளியில் நின்று கொண்டான். டாக்டர் மறுபடியும் பாரதியை முழுமையாகப் பரிசோதித்தார். காய்ச்சல் இன்னும் இருந்தது.

''லேப் ரிசல்ட் வந்துடுச்சா...?''

வாங்கிப் பார்த்தார். எல்லாவற்றையும் கவனமாகப் பார்த்துக் கொண்டு வர, வொயிட் ப்ளட் செல் 1 500,00/C mm என்று இருந்தது. ஓ- மைகாட்! லுக்கீமியா



காதல் புது பழமொழி!

காதலோ காதல் —
அப்புறமா
மோதலோ மோதல்!
- ஆர். பிரகாஷ்
(கம்ப்யூட்டர் ஆபரேடர்)
தொகுப்பு: எஸ்.வி.என்



''துல்லிய
மான காதல்
என்பது மிக
அரிதானது. ஓர்
உதாரணக்
காதலராக
இருக்க
வேண்டுமென்றால்
எப்போதும் மேதையின்
அடக்கத்தையும்,
குழந்தையின் விட்டுக்
கொடுக்கும்
தன்மையையும்,
ஓவியனின் நுண்ணர்வையும்; துறவியின்
பக்குவத்தையும், அறிஞனின்
பொறுமையையும் பெற்றிருக்க வேண்டும்''

\- லியோ பஸ்காகிலா

தொகுப்பு: குல்லூ

மாதிரி இருக்கிறதே... டாக்டர் அவளைப் பார்த்தார். பாவம் சின்னப் பெண். இவளிடம் எதுவும் சொல்ல வேண்டாம். கேஸ் ஷீட் வாங்கி என்னமோ எழுதினார். கவலைப்பட வேண்டாம் என்று மட்டும் சொல்லிவிட்டு வெளியில் வந்தார். வெளியில் இருந்த கிருஷ்ணாவைத் தன்னோடு வரச் சொல்லி கூப்பிட்டுக் கொண்டு வந்தார்.

கிருஷ்ணா டாக்டரையே நம்ப முடியாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

''ப்ளட் கான்ஸரா..?''

''ஆமாம்... ஆனால் மிக ஆரம்ப நிலை... சரியாகிவிடுகிற வாய்ப்புகள் அதிகம்...''

'நீங்கள் என்ன வேண்டும் அந்த பெண்ணுக்கு...?''

''வுட் பி...''

''பயப்பட வேண்டாம்... நல்ல மருந்துகள் இருக்கிறது; ஆல் தி பெஸ்ட்...'' என்றார்.

கிருஷ்ணா வெளிறிப் போய் வெளியில் வந்தான். அறைக்குள் நுழைந்ததும் பாரதி உறங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தான். எழுப்பி சொல்லி விடலாமா? என்று யோசித்தான். வேண்டாம் கிளம்பி வெளியில் வந்து விட்டான்.

விழித்ததும் தன் அருகில் அமர்ந்து இருந்த அப்பாவைப் பார்த்தாள் பாரதி.

''அப்பா... கிருஷ்ணா எங்கே...?''

''தெரியலம்மா... நான் வரும்போதே இல்லையே... உங்கிட்ட சொல்லிட்டுப் போகலையா...?''

அப்போது தன் உதவியாளர்களுடன் டாக்டர் அவசரமாக உள் நுழைந்தார். வந்தவர் பாரதியையும், அப்பாவையும் பார்த்துக் கொண்டு மிகுந்த தாழ்மையுடன் பேசினார்.

''ஸாரி மேடம்.. லேபில் தவறு நடந்து விட்டது... இதே ஃப்ளோரில் இன்னொரு பெண் இருக்கிறாள்... அவளுக்கும் பெயர் பாரதி... உங்களைப் போலவே வயது இருபத்து ஒன்று... அவளுக்குத்தான் லுக்கீமியா... உங்கள் உண்மையான ரிசல்ட் இதுதான்... மிக நார்மலாக இருக்கிறது... உங்களுக்கு வெறும் வைரஸ் ஃபீவர்தான்... உங்களுக்கு வேறு எதுவும் இல்லை... தவறாக நடந்து கொண்ட லேப் ஆளை சஸ்பெண்ட் செய்து விட்டேன். தயவு செய்து பெரிது படுத்த வேண்டாம்... மன்னித்துக் கொள்ளுங்கள்... உங்கள் வருங்கால கணவரிடம் சொல்லுங்கள்... அவர் மிக உடைந்துவிட்டார்... மன்னித்துக் கொள்ளுங்கள்...''

டாக்டர் பலமுறை மன்னிப்புக் கேட்டு விட்டுப் போனார். பாரதிக்கும், அவள் அப்பாவுக்கும் நடந்தது தெளிவாகப் புரிய சற்று நேரம் ஆனது. பாரதி எதுவுமே பேசாமல் நீண்ட நேரம் யோசித்துக் கொண்டிருந்தாள். தலையணைக்கடியில் வைத்திருந்த கிருஷ்ணாவின் கடிதத்தில் ஒன்றை எடுத்தாள்.

உனக்காக எதுவும் செய்யத் தயாராயுள்ள
ஓர் இதயம் உன்னுடன் இணைந்து
இயங்குகிறது என்பதைத் தவிர
வேறெதுவும் தெரியாதபடி உன்னை
அப்படிக் காதலிப்பேன் - என்று தாஸ்தாயெவ்ஸ்கியின் வரிகளில் கடிதம் தொடங்கியது. பாரதி அதற்குமேல் படிக்க விரும்பாமல் வைத்து விட்டாள்.

அன்று நீண்ட நேரமாகியும் கிருஷ்ணாவிடம் இருந்து தொலைபேசி வரவில்லை.

''பாரதி... பாவம்மா கிருஷ்ணா... ரொம்ப குழம்பிப் போயிருப்பான்... நான் வேணா ஃபோன் பண்ணி விஷயத்தைத் தெளிவாச் சொல்லட்டுமா...?'' என்றார்.

''வேண்டாம்பா...'' என்றாள் பாரதி ஒரு உறுதியோடு.

''பாரதி?''

''அப்பா... நான் டென்னிஸ்ல அன்னா கோர்னிகா மாதிரி வரணும்பா...'' என்றாள் ஏதோ யோசனையோடு.

தன் மகன் பாரதியைப் பார்த்தார். அருகில் சென்று மெல்ல அணைத்துக் கொண்டார். உடலில் காய்ச்சல் இல்லை. ○



S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கை யில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு


S.V. HOME FOR AGED

#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356; 475 5799
Email: svhome1rediffmail.com



திருக்கயிலாயம்-12 சோதிர்லிங்கங்கள்

1. **திருக்கயிலாயம், மானஸரோவர், நேப்பாள்** 27 நாட்கள் யாத்திரை மே முதல் செப்டம்பர் வரை ஒவ்வொரு மாதமும் நடத்தப்படுகிறது. தொடர்ந்து 4 ஆண்டுகளாக திருக்கயிலாய யாத்திரையை சிறந்த முறையில் நடத்தி வருகின்றோம்.
2. **12 சோதிர்லிங்கங்கள்** யாத்திரை (புறப்படும் நாள் 1-5-2002) 32 நாட்கள் தூங்கும் வசதி ரயில் யாத்திரை 3 வேளை சைவ உணவு மற்றும் செலவுகளுடன் கட்டணம் நபர் 1க்கு ரூ.14,990/- மட்டுமே
3. **சிம்லா - குல்லு மணாலி, டெல்லி, ஆக்ரா** 15-4-2002 மற்றும் 15-5-2002 13 நாட்கள் தூங்கும் வசதி ரயில் சுற்றுலா 3 வேளை சைவ உணவு மற்றும் செலவுகளுடன் கட்டணம் நபர் 1க்கு ரூ.6,998/-
4. **அந்தமான் சுற்றுலா** பிரதி மாதந்தோறும் இருவழி A/C கப்பலில் பங்க் கிளாஸ் கட்டணம் ரூ.6,494/- (செலவுகளுடன்) ஒருவழி A/C கப்பல் பங்க் கிளாஸ் ஒருவழி விமானம் நபர் 1க்கு கட்டணம் ரூ.12,497/- (செலவுகளுடன்)
5. **கேதார், பத்ரி, டெல்லி - ஆக்ரா** 12 நாட்கள் தூங்கும் வசதி ரயில் யாத்திரை 3 வேளை சைவ உணவு மற்றும் செலவுகளுடன் கட்டணம் ரூ.5,495/- யாத்திரை புறப்படும் தேதி 12-5-2002
6. பிரதி மாதந்தோறும் சிங்கப்பூர் - மலேசியா, பட்டாயா பீச் 7 இரவு, 8 பகல் கட்டணம் ரூ.36,005/- சிங்கப்பூர் - மலேசியா, 6 நாட்கள் கட்டணம் ரூ.27,005/-
7. **காசி, அலகாபாத், ஹரித்துவார் - ஆக்ரா, டெல்லி** தூங்கும் வசதி ரயில் யாத்திரை 12 நாட்கள் 3 வேளை சைவ உணவு மற்றும் செலவுகளுடன் நபர் 1க்கு கட்டணம் ரூ.4,991/- புறப்படும் தேதி 15-4-2002 & 15-5-2002



முன்பதிவு செய்ய அணுக வேண்டிய முகவரி

கயிலை மாமணி அரிமா மனோகர்

மனோகர் டிராவல்ஸ்

1433, ஸ்வஸ்திக் காம்ப்ளக்ஸ் (அபிராமி தியேட்டர் அருகில்) ஈரோடு - 638 011
போன் (0424) 214877, 223580, 253207, 251232 மொபைல் 98430 98898 (24 மணி நேரமும்)
பேக்ஸ் 0424 - 217159 E-mail : manohartravvels@rediffmail.com

சிவகாமியின் சபதம்

ஏழாம் அத்தியாயம்

சின்னக் கண்ணன்

ஆயனரும் பரஞ்சோதியும் பேசிக் கொண்டிருக்கையில், வாசற்படியருகில் நின்ற கண்ணபிரான் சமிக்ஞை செய்ததைச் சிவகாமி கவனித்தாள் என்று சொன்னோமல்லவா? சற்று நேரத்துக்கெல்லாம், பேசிக் கொண்டிருந்தவர்களின் கவனம் தன் மீது செல்லாதபடி, சிவகாமி மெல்ல நடந்து, வீட்டுக்கு வெளியே வந்தாள்.

''அண்ணா! என்னை அழைத்தீர்களா? ஏதாவது விசேஷம் உண்டா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்; உண்டு!'' என்றான் கண்ணன்.

''கமலி அக்கா ஏதாவது சொல்லியனுப்பினாளா?''

கண்ணபிரான் குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''அதோ உள்ளே வந்திருக்கிறாரே, அந்த வாலிபருக்கு உடனே விஷம் கொடுத்துக் கொல்லும்படி சொல்லச் சொன்னாள்'' என்றான்.

சிவகாமி, ''இதென்ன வேடிக்கை அண்ணா? எதற்காக விஷம் கொடுக்க வேண்டும்?'' என்று புன்னகையுடன் கேட்டாள்.

''அம்மணி! விஷம் கொடுப்பது வேடிக்கையான விஷயமா?''

''இல்லை, அதனால்தான் 'எதற்காக' என்று கேட்கிறேன்.''

''மாமல்லருக்கு இவர் போட்டியாக வந்திருக்கிறார், தாயே!''

''என்னத்தில் போட்டி?''

''இராஜ்யத்துக்குத்தான்! ஊரிலே எல்லாம் சொல்லிக்கொள்ளுகிறார்கள். 'சக்கரவர்த்தி, பரஞ்சோதியைத் தத்து எடுத்துக் கொண்டு விட்டார்; பரஞ்சோதிக்குத்தான் இராஜ்யத்தைக் கொடுக்கப் போகிறார்! மாமல்லருக்கு இராஜ்யம் இல்லை!' என்று.''

அமரர் கல்கி





''ஆஹா! இது மட்டும் உண்மையாயிருந்தால்...?''

''தங்கச்சி, அப்படி நேர்ந்தால் உனக்கு அதில் மிக்க சந்தோஷம் போலிருக்கிறதே?'' என்றான் கண்ணபிரான்.

''அப்படித்தான், அண்ணா! இந்த இராஜ்யந்தானே எனக்கும் அவருக்கும் குறுக்கே நிற்கிறது? எனக்கு அவரும் அவருக்கு நானும் இருந்தால் போதுமே! இராஜ்யம் என்னத்திற்கு?''

''எல்லாப் பெண்களும் ஒரே மாதிரிதான் போலிருக்கிறது! கமலிகூட இப்படியேதான் சொல்கிறாள்.''

''என்ன சொல்கிறாள்?''

''நீ இப்போது சொன்னது போலத்தான் சொல்கிறாள். 'கண்ணா! உனக்கு

நானும் எனக்கு நீயும் போதாதா? அரண்மனைச் சேவகம் என்னத்திற்கு? வா! எங்கேயாவது கிராமத்துக்குப் போய் நிம்மதியாயிருக்கலாம்' என்கிறாள்."

"அப்படிச் செய்யப் போகிறீர்களா அண்ணா?"

"அப்படிச் செய்வதில் எனக்கும் இஷ்டந்தான். ஆனால், சின்னக் கண்ணன் குறுக்கே நிற்கிறான்."

"அது யார் அண்ணா, சின்னக் கண்ணன்?"

கண்ணன் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு, "கொஞ்சம் மூளையைச் செலுத்தி யோசித்துப் பார் தங்கச்சி!" என்றான்.

சிவகாமி, "என்னத்தை யோசிக்கிறது?" என்றாள்.

"இவ்வளவுதானா தங்கச்சி? இவ்வளவு புத்திசாலியாயிருந்தும் சின்னக் கண்ணன் யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லையே?" என்று கண்ணன் கேட்டுவிட்டு, இன்னும் தாழ்ந்த குரலில், "சின்னக்கண்ணன் கமலியின் வயிற்றில் இருக்கிறான்" என்று கூறிப் புன்னகை புரிந்தபோது, அவன் முகத்தில் அசடு வழிந்தது.

கமலி கர்ப்பமாயிருக்கிறாள் என்பதைச் சிவகாமி தெரிந்துகொண்டு, "அப்படியா அண்ணா! சந்தோஷம்" என்றாள். அவள் உடம்பை அப்போது என்னவோ செய்தது. கமலியை உடனே பார்க்க வேண்டும். அவளைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உள்ளத்தில் உண்டாயிற்று.

கண்ணபிரான், "தங்கச்சி, அந்தச் சந்தோஷத்தை நீ நேரிலேயே வந்து சொல்லிவிட்டால் தேவலை. கமலிக்கு இன்னும் கொஞ்ச காலம் காஞ்சியை விட்டுப் புறப்பட முடியாதாம். தங்கச்சியிடம் சொல்வதற்கு என்னவெல்லாமோ சமாசாரம் மூட்டை கட்டி வைத்திருக்கிறாளாம்!" என்றான்.

"எனக்கும் அக்காவைப் பார்க்க ஆசைதான். அண்ணா! ஆனால் அது எப்படி முடியும்?" என்றாள் சிவகாமி.

"ஆமாம், தங்கச்சி! முடியாதுதான்! அதனால்தான் நான்கூடக் கமலியிடம் சொன்னேன். அவர்களெல்லாம் நம்முடைய ஏழைக் குடிசையில் வந்து தங்கியிருப்பார்களா என்று..."

"அண்ணா! அப்படிச் சொல்ல வேண்டாம். நீங்களும் கமலியும் இருக்கும் இடத்தில் ஏழைமை ஏது...? உங்களுடைய குடிசை எனக்கு அரண்மனையை விட ஆயிரம் மடங்கு மேல்..." என்று சொல்லி வந்தவள், சட்டென்று நிறுத்தினாள். ஏதோ ஓர் எண்ணம் குறுக்கிட்டு அவளைத் தடை செய்ததாகத் தோன்றியது.

"அதற்கென்ன பார்த்துக் கொள்ளலாம். அண்ணா! அப்பாவிடம் சொல்கிறேன்... வேறு ஒன்றும் விஷயமில்லையா?" என்றாள்.

"அப்படியொன்றும் பெரிய விஷயமில்லை. ஒரே ஒரு சின்ன விசேஷம் மட்டும் உண்டு; இன்று காலை நான் ரதத்தை ஓட்டிக் கொண்டு போய் அரண்மனை வாசலில் நிறுத்தியதும், மாமல்லர் என்னைத் தனியாகக் கூப்பிட்டார். 'பிரபு, என்ன விசேஷம்?' என்று கேட்டேன். 'ஒன்றுமில்லை கண்ணா! இராத்திரி தூங்கவில்லை' என்றார். 'அதுதான் முகத்தைப் பார்த்தால் தெரிகிறதே. ஏன் தூங்கவில்லை?' என்றேன். 'புது தளபதியுடன் பேசிக்கொண்டிருந்தேன்' என்றார். 'அவ்வளவுதானா?' என்று கேட்டேன். 'அப்புறம் ஓலை எழுதினேன்' என்றார். 'யாருக்கு?' என்றேன். 'அப்பாவுக்கு' என்று சொன்னார். 'சரி' என்றேன். பிறகு மெல்ல மெல்ல, 'இன்னோர் ஓலையும் எழுதினேன்' என்றார்."

"அண்ணா! ஓலையைக் கொடுங்கள்" என்று சிவகாமி கேட்டபோது, அவள் தொண்டையை அடைத்துக்கொண்டது.

"கொடுக்கிறேன், தங்கச்சி! கொடுக்கிறேன்! ஆனால், ஓலையை வாங்கிக் கொண்டதும் நீ ஓடிப்போய் என்னைத் திண்டாட்டத்தில் விட்டுவிடக் கூடாது..."

"என்ன திண்டாட்டம் அண்ணா?"

"போன தடவை மாமல்லரின் ஓலையை வாங்கிக்கொண்டதும் ஒரே ஓட்டமாய் ஓடிப்போய் விட்டாயல்லவா? அதனால் எனக்கு எவ்வளவு சங்கடமாய்ப் போய்விட்டது தெரியுமா! 'ஓலையை வாங்கிக் கொண்டதும் சிவகாமி என்ன செய்தாள்? அவள் முகம் எப்படி இருந்

தது? கண் எப்படியிருந்தது?' என்றெல்லாம் மாமல்லர் கேட்ட போது நான் விழித்தேன்..!

''போதும் அண்ணா, வேடிக்கை! ஓலையைக் கொடுங்கள்!''

இன்னும் கொஞ்சம் வேணுமென்றே தவக்கம் செய்துவிட்டுக் கடைசியாகக் கண்ணபிரான் ஓலையை எடுத்துக் கொடுத்தான்.

அப்புறம் ஒரு கணநேரங்கூட அங்கே சிவகாமி நிற்கவில்லை. வீட்டின் வலப் பக்கத்தில் சென்ற பாதை வழியாகப் பழைய தாமரைக் குளத்தை நோக்கி விரைந்து சென்றாள்.

எட்டாம் அத்தியாயம்

நாகம் சீறுகிறது!

அரண்யத்தினால் சூழப்பட்ட தாமரைக் குளக்கரையில், மகிழ மரத்தினடியில் போட்டிருந்த மரப் பலகைச் சிங்காதனத்தில் சிவகாமி அமர்ந்து, தன் மார்புக்கச்சில் சேர்த்துச் செருகியிருந்த ஓலையை எடுத்தாள்.

''பொல்லாத ஓலையே! பல்லவ குமாரரின் காதல் என் உள்ளத்தைக் குத்திப் புண் செய்வது போதாதென்று நீயும் என் நெஞ்சைக் குத்துகிறாயா?'' என்று சொல்லிக்கொண்டே, அந்த ஓலையைக் கண்ணிலே ஒற்றிக்கொண்டாள். பிறகு சற்றுத் தயங்கி, சட்டென்று தன் செவ்விதழ்களில் அதை ஒரு தடவை வைத்து எடுத்துவிட்டு, வெறுமையாயிருந்த மேல் ஓலையை அப்புறப்படுத்தினாள். உள் ஏட்டில் முத்துப் போல் பொறித்த அழகிய சின்னஞ் சிறு எழுத்துக்கள் காணப்பட்டன. கண்களில் ஆர்வம் ததும்பச் சிவகாமி படிக்கத் தொடங்கியபோது, ''அக்கா! அக்கா!'' என்று பின்னாலிருந்து வந்த சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டாள். திரும்பிப் பார்த்தால், அந்த மரச் சிங்காதனத்தின் கைப்பிடி மீது ஒரு பச்சைக்கிளி உட்கார்ந்து அவளைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தது!

கிண்கிணி ஒலிப்பது போல் சிவகாமி கலகலவென்று சிரித்துவிட்டு, அந்தக் கிளியைப் பார்த்து, ''சுகப் பிரம்ம முனிவரே, உமக்கு என்ன இங்கே வேலை? இளம் பெண்கள் தனிமையாக இருக்கும் அந்தப்புரத்துக்குள் ரிஷிகள் வரலாமா? அதிலும், பூஜை வேளையில் கரடி புகுந்ததுபோல், ஒரு கன்னிப் பெண் தன் காதலரின் ஓலையைப் படிக்கப் போகும் தருணத்திலா நீர் வந்து சேருவது? போம்! போம்!'' என்று கையை ஓங்கி வீசியபோது, அந்தக் கை வீச்சானது, கன்னத்தை நெருங்கி வரும் காதலனுடைய கரத்தைத் தள்ளும் அபிநயமாகவே தோன்றியது.

அதற்கேற்றாற்போல் அந்தச் சுக மகா முனிவரும், ''மாட்டேன்! மாட்டேன்!'' என்றார்.


சிவகாமி மறுபடியும் சிரித்துவிட்டுக் கூறினாள்: ''வேஷதாரி ரிஷியே! கதைகளிலே வரும் அரசிளங்குமரிகள் எல்லாரும் அந்தப்புரத்தில் உம்மை வைத்துக்கொண்டு எப்படித்தான் இரகசியம் பேசினார்களோ, தெரியவில்லை! இருக்கட்டும், இருக்கட்டும். நான் பல்லவ இராஜ்யத்தின் மகாராணியாகும்போது, உங்களுக்கெல்லாம், அரண்மனையில் இடமில்லாமல் செய்துவிடுகிறேன்..!''

அப்போது அந்த விஷமம் நிறைந்த சுகப்பிரம்மம், ''மாமல்லா! மாமல்லா!'' என்று உச்சஸ்தாயியில் கீச்சுக் குரலில் கத்திற்று.

''ஓஹோ! அப்படியா சேதி? நான் அந்தப்புரத்திலிருந்து உங்களைத் துரத்தியடித்தால், மாமல்லரிடம் சலுகைக்குப் போவோம் என்று சொல்கிறீரா? நடக்காது முனிவரே, நடக்காது! பல்லவ சிங்காதனத்திலே சிவகாமி தேவி அமர்ந்தவுடனே முதல் காரியமாக, அந்த ராஜ்யத்திலே சோம்பித் திரியும் ஆண்டிகள், பிக்ஷுக்கள் காவித் துணி தரித்த சந்நியாசிகள், மண்டை ஓட்டு மாலை அணிந்த காபாலி

கர்கள் இவர்களையெல்லாம் நாட்டை விட்டு ஓட்டி விடப் போகிறாள். யோக்கிய மாக கல்யாணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துகிறவர்களுக்குத்தான் பல்லவ இராஜ்யத்தில் அப்புறம் இடம் இருக்கும், தெரியுமா? நான் இந்த ஓலையைப் படிக்கும்வரையில் உம்முடைய திருவாயை மூடிக் கொண்டு சும்மா இரும்...!''

சும்மா இருக்க முடியாது என்பது போல், சுகர், "ரதி! ரதி!'' என்றார். சிவகாமி திரும்



பிப் பார்த்தாள். அங்கே ரதி துள்ளி ஓடி வந்துகொண்டிருந்தது.

"ரதி! அந்தப்புரத்துக்குத் தகுந்த சகி நீதான். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு வாயைத் திறக்காமல் மௌன மாயிருப்பாய். இந்த ரிஷியோ எதையும் அரையும் குறையுமாய்க் கேட்டுக்கொண்டு நாலு பேர் இருக்கும்போது மானத்தை வாங்கி விடுவார்! இந்த வேஷதாரி முனிவர் இங்கிருந்து தொலைந்து போன பிறகு உனக்கு மாமல்லரின் ஓலையைப் படித்துக் காட்டுகிறேன், ரதி!"

இவ்விதம் கூறி, ரதியின் மோவாய்க் கட்டையைத் தடவிக் கொடுத்து விட்டுச் சிவகாமி மீண்டும் ஓலையைப் பார்த்தாள். கையிலே பணியாரத்தை வைத்துக்கொண்டிருக்கும் குழந்தை, அதைச் சாப்பிட்டால் ஆகிப் போய் விடுமே என்ற பயத்தினால் தயங்குவது போல் சிவகாமியும், ஓலையைப் படிக்கும் இன்பத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டேயிருந்து கடைசியில் படிக்கலானாள். ஓலையில் பிராகிருத பாஷையில் எழுதியிருந்தது வருமாறு:

"பாரத நாட்டில் புகழ் பெற்ற சிற்ப சக்கரவர்த்தியின் செல்வக் குமாரியும், சௌந்தரிய தேவதை அடிபணிந்து போற்றும் சுகுமாரியும், பாரத நாட்டிய சாஸ்திரம் வலம் வந்து தொழுது வணங்கும் கலைவாணியும், மாமல்ல பல்லவனின் இருதய சிம்மாசனத்தில் கொலு வீற்றிருந்து தனியரசு புரியும் மகாராணியும் ஆகிய சிவகாமி தேவிக்கு:

இனிமேல் ஓலை எழுத மாட்டேன். நானே நேரில் வந்து விடுவேன் என்று முன் ஓலையில் எழுதியிருந்தேன். அதற்கு மாறாக இதை நான் எழுதுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

என் ஆருயிரே! முந்தாநாள் இரவு நான் ஒரு கனவு கண்டேன். அதை நினைத்தாலே என் தேகமெல்லாம் சிலிர்க்கிறது. கற்பனைக்கு எட்டாத இன்பம் நிறைந்த அந்த அதிசயக் கனவைக் கேள்:

கனவிலே நான் தூங்கிக்கொண்டிருந்தேன். ஆகாய வெளியில் அந்தரத்தில் காற்றுப் படுக்கையில் மிதந்துகொண்டே தூங்கியதாகத் தோன்றியது. அந்த அதிசயமான சொப்பனத் தூக்கம் எதனாலோ திடீரென்று கலைந்தது. கண்களை விழித்துப் பார்க்க முயன்றேன். ஆனால், ஏற்கெனவே கண்கள் விழித்துத்தானிருந்தன. மேலும் கீழும் நாற்புறமும் ஒரே காடாந்தகாரமாயிருந்தபடியால், என் கண்கள் திறந்திருந்தும், மூடியிருந்தனவோ என்று நான் ஐயப்பட நேர்ந்தது.

உன் கண் இமையில் தீட்டிய மையைக் காட்டிலும் கரியதாய் என்னைச் சுற்றிலும் படர்ந்திருந்த அந்த அதிசயமான இருட்டைப் பற்றி நான் சிந்தித்துக் கொண்டிருக்கையில், எனக்குச் சற்று மேலே வட்ட வடிவமான ஓர் ஒளி தோன்றக் கண்டேன். வர வர அந்த ஒளி வட்டம் அகன்று கொண்டு வந்ததோடு, அதன் ஜோதியும் அதிகமாகி வந்தது. கண்களைக் கூசச் செய்யாமல் குளிர்ந்து விளங்கிய அந்தப் பொன்னிற ஒளி வர வர என்னை நெருங்கி நெருங்கி வந்ததைக் கண்டேன்.

அருகே வந்ததும், அந்த ஒளி வட்டம் உன்னுடைய திவ்யவதனந்தான் என்று தெரிந்தபோது, எனக்குண்டான வியப்பையும் களிப்பையும் எவ்வாறு சொல்வேன்?

சிவகாமி! விரைவிலே உன்னுடைய உருவம் முழுவதுமே தெரிந்தது. எல்லையில்லா அந்தகாரத்தின் நடுவில் உன் பொன் உருவத்தைப் பார்க்கப் பார்க்க, எனக்கு ஒரு விசித்திரமான எண்ணம் உதயமாயிற்று.

உன்னுடைய உருவமானது சாதாரண மனித தேகத்தைப் போல் இரத்தம், சதை, எலும்பு, தோல் இவைகளினால் ஆனதாக எனக்குத் தோன்றவில்லை. நிலாமதியின் இளங் கதிரையும் மல்லிகைப் பூவின் இன்ப மணத்தையும், அன்னப் பட்சியின் இறகிலுள்ள மென்மையையும், செவ்வழி ராகத்தின் இன்னிசையையும் கலந்து உன் தூய திருமேனியைப் பிரமன் படைத்திருக்க வேண்டுமென்று கருதினேன்.

இவ்வாறு நான் உன் மேனி அழகாகிய மதுவை அருந்தி மயங்கி நிற்கையில், நீ என் அருகே நெருங்கி வந்தாய். என் முகத்துக்கு வெகு சமீபத்தில் உனது பொன் முகத்தைக் கண்டேன். காலையில் மலர்ந்த குவளை மலர்களில் பனித்துளி நிற்பது போல் உன் நீண்ட கண்களின் முனையில் இரு கண்ணீர்த்துளிகள் நின்றன. உன்னுடைய மூச்சுக்காற்று என் முகத்திலே பட்டது.

அவ்வளவு அருகில் வந்திருந்த உன்னைத் தழுவி அணைத்துக் கொள்ள வேண்டுமென்று என்னுடைய தேகத்தின் ஒவ்வொர் அணுவும் துடிதுடித்தது. ஆனாலும் நான் அவ்விதம் செய்யவில்லை.

என் உள்ளத்தில் ஒரு சந்தேகம் தோன்றியிருந்தது. உன்னைத் தொட்டேனானால், உன் திருமேனியானது நிலா மதியின் கதிராகவும், மல்லிகையின் மணமாகவும், அன்னப் பட்சியின் மென்மையாகவும், செவ்வழியின் இன்னிசையாகவும் தனித்தனியே பிரிந்து மறைந்து விடுமோ என்ற பயம் ஏற்பட்டிருந்தது.

இந்தப் பயத்தை அறிந்துகொண்டவளைப் போல நீ உன் செவ்விதழ்கள் சிறிது அகல முத்துப் போன்ற பற்களின் நுனி தெரிய குறுநகை புரிந்தாய்! உன் பொன் வதனம் என்னை அமுதபோதையில் ஆழ்த்திக்கொண்டு இன்னும் அருகே நெருங்கிற்று.

ஆ, என்ன சொல்வேன் என் துரதிர்ஷ்டத்தை! அந்தச் சமயத்தில் எங்கேயோ ஒரு நாகப்பாம்பின் சீறல் கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தேன். ஒரு மரக்கிளையில் இரண்டு பட்சிகள் உட்கார்ந்து, ஒன்றின் மூக்கை ஒன்று தொட்டும், 'கலகல'வென்று சப்தித்தும் விளையாடிக்கொண்டிருந்தன. அந்த மரத்தின் அடிக் கிளையிலிருந்து ஒரு நாகப்பாம்பு - கருநிறமும் மஞ்சள் நிறமும் கலந்த உடலுடைய நீண்ட பாம்பு - அந்தப் பட்சிகள் இருந்த கிளையை நோக்கி 'சரசர'வென்று ஏறிக் கொண்டிருந்தது. அந்த நாகத்தின் சீறலைத்தான் நான் கேட்டதாகத் தெரிந்துகொண்டேன். அந்தக்கணத்தில் உன்னைக்கூட மறந்து, என் உடைவாளை அவசரமாய் எடுத்தேன்.

அவ்வளவுதான்; விழித்துக்கொண்டேன்.

என் கண்ணில் வளரும் பெண்ணரசியே! சொப்பனங்களிலும் அவற்றின் பலன்களிலும் நம்பிக்கை இல்லாதவன் தான். ஆனாலும் இந்தக் கனவுக்கு ஏதாவது அர்த்தம் உண்டா என்று அடிக்கடி என்னையறியாமல் எண்ணம் உண்டாகிறது. உனக்கு ஏதேனும் அபாயம் வருமென்பதைக் குறிப்பிடுகிறதோ என்று ஐயுறுகிறேன்.

யுத்தம் நெருங்கி வருகிறபடியால் நீ ஜாக்கிரதையாருக்க வேண்டும்; ஆனால், எவ்விதக் கவலையோ, பயமோ வேண்டாம். என் கையிலே வாள் இருக்கும்வரையில் உனக்கும் உன் தந்தைக்கும் அபாயம் எதுவும் நேராது.

பொழுது விடியப் போகிறது. கீழ் வானம் வெளுக்கிறது. நான் சொல்ல விரும்பிய இன்னொரு செய்தியைச் சுருக்கமாகச் சொல்லி முடித்து விடுகிறேன்.

எனக்கு ஒரு புதிய தோழன் கிடைத்திருக்கிறான். அவன் யார் தெரியுமா? மதயானை மேல் வேல் எறிந்து உன்னையும் உன் தந்தையையும் காப்பாற்றிய வீர வாலிபன்தான். அவனைக் கோட்டைக் காவலுக்காகச் சக்கரவர்த்தி அனுப்பியிருக்கிறார். நேற்றிரவெல்லாம் நானும் அவனும் பேசிக் கொண்டிருந்தோம்; பெரும்பாலும் உன்னைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தோம்.

சக்கரவர்த்தியிடமிருந்து உங்களுக்கு அவன் சேதி கொண்டு வருகிறான். நீங்கள் காஞ்சிக் கோட்டைக்காவது வந்து விட வேண்டும். அல்லது சோழ நாட்டுக்குப் போய் விட வேண்டும் என்று சக்கரவர்த்தி சொல்லியனுப்பியிருக்கிறார். ஆனால் நான் அங்கு வந்து உங்களைப் பார்த்துப் பேசும்வரையில் அதைப் பற்றி ஒரு முடிவும் செய்ய வேண்டாம்.


யுத்தம் நெருங்கி வருகிறதானது ஒரு காரியத்துக்கு ரொம்பவும் நல்லதாயிருக்கிறது. கூடிய சீக்கிரம் எனக்கு விடுதலை கிடைத்துவிடும். கோட்டைக்கு வெளியே போகக்கூடிய நாள் விரைவிலே வரும். அந்த நாள் வந்தவுடன் நான் நேரே அங்கு வந்து உன்னைப் பார்த்துவிட்டு வேறு காரியங்களைக் கவனிப்பேன்.

என் செல்வமே! ஒவ்வொரு சமயம் நினைத்தால் இந்த இராஜ்யம் என்னத்திற்கு, யுத்தம் என்னத்திற்கு என்றெல்லாம் தோன்றுகிறது. இதெல்லாம் சொப்பனமாயிருக்கக் கூடாதா?

திடீரென்று கண் விழித்து எழுந்ததும், நான் சக்கரவர்த்தி குமாரன் இல்லை. உன் தகப்பனாரிடம் சிற்பக்கலை கற்றுக்கொள்ளும் சீடன் என்று ஏற்பட்டால், எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்? அப்போது உனக்கும் எனக்கும் இடையே ஒரு தடையும் இராதல்லவா? இவ்வாறு எட்டு மாத காலமாக உன்னை வந்து பார்க்காமல் இருந்திருப்பேனா?"

ஓலையை ஒரு தடவை முழுதும் படித்த பின்னர், இன்னொரு தடவையும் சிவகாமி படித்தாள்.

பிறகு ரதியைப் பார்த்து, "ரதி, பல்லவ குமாரரிடமிருந்து வந்த ஒவ்வொர் ஓலையையும் உனக்குப் படித்துக் காட்டினேன் அல்லவா? இந்தத் தடவை முடியாது! படித்துக் காட்டினாலும்



அருள்வாக்கு

நீங்களும் சரி, மற்றவர்களும் சரி, எவ்வளவு பேசினாலும் லெக்சரால் கல்ச்சர் (பண்பாடு) வளராது. படிப்பதாலும் வளராது. நமக்கென்று காரியத்தில் பின்னி வைத்திருக்கிற அனுஷ்டானங்களைப் பண்ணினால்தான் சித்த சுத்தி ஏற்பட்டு, நாம் படிப்பதில் ஸாரம் எது என்று புரிந்து கொண்டு அதைக் கிரஹித்துக் கொண்டு கல்ச்சரை வளர்க்க முடியும். பிற தேச விஷயங்களில் எதை எடுத்துக் கொள்வது என்று பரிசீலித்து முடிவு செய்வதற்கு அஸ்திவாரமாக முதலில் நம் சாஸ்திரப்படி வாழ முயற்சி பண்ண வேண்டும்.



நான் சொல்கிறபடி மாறுவது ஒன்றும் பெரிய கஷ்டமில்லை. ஒரே ஓர் அம்சத்தை மட்டும் நாம் பிடிவாதமாக மாற்றிக் கொண்டு விட்டால் இது ஸாத்யம்தான். ''பணம்தான் பிரதானம்'' என்பதே அந்த அம்சம். பணமே குறி என்று நாம் இறங்கின பிற்பாடுதான் ஆசாரங்கள், வித்யா ஞானம் எல்லாமே போய்விட்டன. நம் தேசத்தில் பணம் முக்கியமாய் இருந்ததேயில்லை. லௌகிக வாழ்க்கையை ஆத்ம அபிவிருத்திக்கு உபயோகமாக மட்டும் வைத்துக் கொள்வதுதான் நம்முடைய தேசாசாரம்.

பணப் பேராசை போய்விட்டால் சாஸ்திரோக்தமான ஆசாரங்களோடு வாழ்ந்து எல்லா வித்யைகளையும் சாஸ்திரங்களையும் ஆர்வத்தோடு படித்து, விவேகத்தோடு ஸாரத்தைக் கிரஹித்துக் கொண்டு நாமும் வளர்ந்து, நம் பண்பாட்டையும் வளர்த்து வாழ்விக்க முடியும். இப்படி நம் தேசம் பூர்வத்தில் இருந்தபடி லோகத்துக்கு வழிகாட்டியாக இருப்பதற்கு எல்லோரும் அடக்கத்தோடு பகவானைப் பிரார்த்தனை பண்ணிக்கொண்டு, நம்மாலான பிரயத்தனங்களைப் பண்ணுவோம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

உனக்கு விளங்காது!'' என்றாள்.

பிறகு ஓலையை எடுத்துக்கொண்டு, பின்னால் இருந்த மகிழ மரத்தின் மேல் இரண்டு அடி ஏறினாள். மேலே கிளைகள் முளைத்திருந்த இடத்தில் காணப்பட்ட பொந்தில் கையை விட்டுத் திரும்ப எடுத்தபோது அவளுடைய கையில் ஏழெட்டு ஓலைகள் இருந்தன. அந்த ஓலைகளை ஒவ்வொன்றாய் எண்ணிப் பார்த்துவிட்டுத் தன்னிடமிருந்ததையும் சேர்த்து மறுபடியும் பொந்திற்குள் வைத்துவிட்டுக் கீழே இறங்கினாள்.

''ரதி! வா! போகலாம்; சுகப்பிரம்ம ரிஷியே! வாரும்; வீட்டுக்குப் போகலாம். அப்பா சாப்பிடக் காத்துக் கொண்டிருப்பார். மாமல்லரின் ஓலையைப் படித்துக் காட்டவில்லையென்று என் பேரில் கோபமா? நாளைக்கு வந்து உங்கள் இருவருக்கும் படித்துக் காட்டுகிறேன். நாளைக்கு மட்டுந்தானா? என் வாழ்நாள் உள்ள வரையில் ஒவ்வொரு நாளும் படித்துக் காட்டுவேன். ரதி! குமார சக்கரவர்த்தியைப் பற்றி நீ என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய்? சுக மகாமுனிவரே! மாமல்லர் மகாகவி என்பதைத் தெரிந்து கொள்ளுவீராக. காளிதாசனையும் பாரவியையும் போன்ற பெரிய கவி மாமல்லர். அவருடைய கவிதைக்குப் பாத்திரமான பெண் யார் தெரியுமா? இந்த ஏழைச் சிற்பியின் மகள் சிவகாமிதான்!'' - இவ்விதம் ரதியுடனும் சுக முனிவருடனும் மாறி மாறிப் பேசிக்கொண்டே சிவகாமி வீட்டை நோக்கிச் சென்றாள்.

காட்டு மரங்களுக்குள்ளே சிவகாமி மறைந்ததும், தாமரைக் குளத்தின் அருகில் இருந்த மற்றொரு பெரிய மரத்தின் மறைவிலிருந்து நாகநந்தி அடிகள் வெளிப்பட்டார். அவர் மெல்ல நடந்து வந்து, சிவகாமி ஓலைகளை ஒளித்து வைத்த மரப் பொந்திலிருந்து அவற்றை எடுத்தார். ஒவ்வொன்றாக அவற்றை விரைவாகப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார். அவ்விதம் வாசித்து வந்தபோது அவர் விட்ட பெருமூச்சானது, நாகப்பாம்பின் சீறலைப் போலத் தொனித்தது.

(தொடரும்)

KALKI SHOPPING PAGE

சகுந்தலா
ஜுவல்லர்ஸ்



திருமண
தலைசெட்
நகைகள்,
பரதநாட்டியம்
(கெம்பு செட்)நகைகள்
வாடகைக்கு கிடைக்கும்

நெ. 2,C.P. கோயில் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004.
(கபாலீஸ்வரர் கோயில் அருகில்)
போன்: 4611670

பருக பருக ஆனந்தம்
அதிக ஆனந்தம்
சுத்தமான தஞ்சாவூர்
டிகிரி காப்பிக்கு

ஜீவா காபி

கல்யாணங்களுக்கும்
சுபகாரியங்களுக்கும்
100% பியூர் பில்டர் காபி பவுடர்

தயாரிப்பாளர்கள்:
ஜீவா காபி ஒர்க்ஸ்
28, பி.வி. நாயக்கன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

இலவச டோர் டெலிவரிக்கு தொடர்பு
கொள்ளவும்:(சென்னை) : 8444725, 8442667

டெல்லி, மும்பை, கொல்கத்தா.
E-mail:coffeeps@md3.vsnl.net.in

சுவையில் சிறந்தது

கல்யாணி அப்பளம்

மொத்தமாகவும்
சில்லரையாகவும் கிடைக்கும்.

*

ஏஜெண்டுகள் அல்லது கடைக்காரர்கள் DD/செக்/M.O. அனுப்பி, லாரி சர்வீஸ் மூலம் சரக்குகளை பெற்றுக் கொள்ளலாம். சென்னை மற்றும் சுற்றுப் புறங்களுக்கு நேரிடையாக சப்ளை செய்கிறோம்.

*

மேலும் விபரங்களுக்கு:

கல்யாணி அப்பளம்
24. திருமலை நகர், ஆழ்வார்திருநகர்,
சென்னை - 600 087. தெ. இந்தியா.
Prop: S. கல்யாணி © 4861092

நிலையான ஆரோக்கியம் ! நீடித்த ஆயுள் !!

மூலிகைமணி

February 2002 இதழில்

தமிழில் பேசினால் ஆயுள் நீடிக்கிறது !
உடலியல் சார்ந்த மருத்துவ ஆய்வறிக்கை !

உச்சி முதல் பாதம் வரை - சிறப்புக்கட்டுரை

சர்க்கரை வள்ளிக்கிழங்கின் மருத்துவ பயன்

மது அருந்தினால் Sex Feeling அதிகரிக்குமா ?
(அசத்தல் கேள்வி - பதில் பகுதி)

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.
ஏஜென்சி இல்லாத ஊர்களில் ஏஜென்சிகள் விண்ணப்பிக்கவும்

விலை ரூ.15/-

ஆண்டுசந்தா - ரூ.200/-
சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :

Dr. க.வேங்கடேசன்
B7, ராம்ஸ், 21, இராஜா அண்ணாமலை ரோடு,
புரசைவாக்கம்,
சென்னை-84
☎ : 4331494

கல்கியில்
கிச்சன் க்ளீனிக்
எழுதிய
Dr. வேங்கடேசன்
அவர்களின்
வெளியீடு

● எம்.டி. ரவிகாந்த், காஞ்சிபுரம்

? 'காந்தியை ஒரு பிராமணன் கொன்றான் என்பதற்காக பிராமணர்கள் அனைவரையுமா நாடு கடத்திவிட்டோம்? அப்படியிருக்க, விடுதலைப் புலிகள் ஒரு சிலர் ராஜீவைக் கொன்றனர் என்பதற்காக அவர்களுள் யாரையும் இந்தியாவில் அனுமதிப்பதில்லை என்று கூறுவது சரியில்லை' என்று நெடுமாறன் பேசியிருக்கிறாரே?

! நமது அரசியல்வாதிகள் செய்கிற தந்திரப் பிரசாரங்கள் சரித்திரப் புகழ் பெற்ற கோயபெல்ஸைக்கூட தலைகுனியச் செய்துவிடும். காந்தியைக் கொல்ல ஓர் இயக்கமே திட்டமிட்டுச் சதி செய்யவில்லை. இயக்கம் சார்ந்த தனி நபரின் வெறி அச்செயல். ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு, ராஜீவ் காந்தியைக் கொல்ல திட்டமிட்டுச் சதி

பன்னீர்செல்வம்— ராப்ரி ஒப்பீடும்..?

செய்து, வெள்ளோட்டம் பார்த்து நிறைவேற்றியது. அது பயங்கரவாத இயக்கமாக உருமாறி வெகு காலமாகிவிட்டது. கோட்ஸே பிராமணன் என்று ஜாதி சாயத்தை வேறு புதிதாகப் புகுத்துவது விஷ விதையைத் தூவுவதாகும். மக்கள்தான் ஏமாறாமல் இருக்க வேண்டும்.

● எம்.பிச்சைக்கனி, நெய்வேலி

? 'ராணுவத் தளவாடங்கள் வாங்குவது பார்லிமென்டில் வெளிப்படையாக உடனே தெரிவிக்கப்பட வேண்டும். அதன்மூலம் முறைகேடுகள் நடப்பது தடுக்கப்படும்' என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி கூறியிருப்பது குறித்து...?

! ராணுவ தளவாடங்கள் வாங்குவது குறித்து ரகசியம் காப்பது சந்தர்ப்பத்தைப் பொறுத்து அவசியமாயிருக்கலாம். அதில் transparencyஐ வலியுறுத்த முடியாது. ஆனால் மற்ற விஷயங்களிலேயே transparency இல்லையே! அதற்குப் போராட்டமும் முதலில்.

● எஸ்.அப்துல்லா அஹ்மது, நாகூர்

? பன்னீர்செல்வம்-ராப்ரி தேவி ஒப்பீடும்.

! ராப்ரி வாயுள்ள பிள்ளை! பிரதமர் கலந்து கொண்ட கூட்டத்தில், பீஹார் மத்திய அரசால் புறக்கணிக்கப்படுவது குறித்துப் பிளந்து கட்டியிருக்கிறார். பன்னீர் வாயில்லா பூச்சி. அரசு ஊழியர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தக்கூட அவர் சார்பில் பொன்னையன் பேச வேண்டியிருக்கிறது.

● அய்யாறு வாசுதேவன், சென்னை - 14

? பரிசு பெறும் பெரும்பாலான கேள்விகள் தலைப்பாக இடம் பெறுவதில்லையே? பதிலளிக்கும் நோக்கம் வேறு; பரிசளிக்கும் நோக்கம் வேறு என்று கொள்ளலாமா?

! இல்லை; தலைப்பு வைக்கும் நோக்கம் தான் வேறு.

● பாளை பசும்பொன், மகாராஜ நகர்.

? கூவம் ஆறு முன்பு குளிக்கும் ஆறாக இருந்தது என்று கமல்ஹாசன் கூறியுள்ளாரே?

! தமிழ்சினிமா கூட முன்பெல்லாம் பார்க்கிற மாதிரி இருந்தது!

• மௌனமும்...



● பா. குணா, சேத்துப்பட்டு

? சமீபத்தில் உங்களை நெகிழ வைத்த சம்பவம்?

! சமீபத்தில் காலமான கஞ்சிரா வித்வான் வி.நாகராஜனின் சடலம் இறுதிச் சடங்குக்கு எடுத்துச் செல்லப்படும் முன், வேதகோஷங்களை அடுத்து அவரது சிஷ்யர்கள் சொல்

கட்டுகளைத் தாளம் போட்டபடி உச்சரித்த நிகழ்ச்சி, சிறந்த கலைஞரும் நல்ல மனிதருமான ஒருவருக்கு ஏற்ற அஞ்சலியாக இருந்தது.

● **எஸ்.ஏ. பாலசுப்பிரமணியன், சென்னை - 106**

? மகாத்மா காந்தி உயிருடன் இருந்திருந்தால் ராமர் கோயில் பிரச்னை வந்திருக்குமா?

! வந்திருக்காது; ராமர் உயிரோடு இருந்திருந்தால்கூட நிச்சயமாக வந்திருக்காது.

● **கே.ராஜேந்திரன், மருதாடு**


? நல்ல நேரம் என்பது ஒருவனுக்கு எப்போது வருகிறது?

! உளமாற உழைக்க ஆரம்பித்ததும்.

● **சீனு சந்திரா, சென்னை - 4 ★**

? நடந்து முடிந்த ஒருதின கிரிக்கெட் தொடர் எதைக் காட்டுகிறது?

! 'உள்ளூர்ப் புலி' என்ற பெயராவது இருந்து வந்தது. இந்திய கிரிக்கெட் அணிக்கு அதையும் இழந்துவிடுவோமோ என்ற பயத்தைத்தான்.



• சங்கீத அஞ்சலி!



• காத்திருக்கும் தமிழகம்!



• கூவம் குறை!



• முழக்கமும்!

● **ரஜினி ராம்கி, மயிலாடுதுறை**

? பா.ஜ.க.வுடன் இணைவது என்ற திருநாவுக்கரசின் முடிவு எப்படி...?

! எம்.ஜி.ராமச்சந்திரன் புகழ் பாடியவர் இனி ராம ஜன்ம பூமிக்கு ஜால்ரா அடிக்க வேண்டும்.

● **மல்லிகை மன்னன், மதுரை - 17**

? இந்திரா காந்தியின் துணிச்சல், அண்ணாவின் மதிநுட்பம், காமராஜரின் செயல்திறன், புரட்சித் தலைவரின் மக்கள் செல்வாக்கு, ராஜாஜியின் அரசியல் புலமை இவை அத்தனையும் இன்று புரட்சித் தலைவியிடம் குவிந்து கிடப்பதைக் காண புல்லரிக்குது அல்லவா?

! ஏன் நிறுத்திவிட்டீர்கள்?... காந்தியின் தியாகம், நேருவின் அயலுறவு ஆற்றல், நேதாஜியின் வீரம், பாரதியின் தேசப்பற்று... இதையும் சேர்த்துக் கொள்ளுங்கள். ஆண்டிபட்டி தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படும்.

● **ஏ. ராஜா ரஹ்மான், கம்பம்**

? 'ஒரே உணர்வுள்ளவர்கள்கூடி ஒருவரை ஒருவர் எதிர்த்து களத்தில் மோதிக் கொள்வது இயற்கைதான்' என்று வைகோ கூறியிருப்பது...?

! பலிகடா ஆகப்போவது வேட்பாளர் தானே. தலைவர்கள் எதையும் எப்படியும் பேசலாம்.

● **சுப்புவேலையா சித்திரவேலு, கருப்பம்புலம்**

? வழக்கமாக பிப்ரவரியில் பட்ஜெட் தாக்கல் செய்யும் சட்டசபை இந்த ஆண்டு மார்ச்சில் கூடும் மர்மம் என்ன?


! Elementary my dear Watson! அம்மாவுக்காக காத்திருக்கிறார்கள். இதிலென்ன மர்மத்தைக் கண்டீர்கள்?



• 'விஷ'மப் பிரசாரம்

• வாய்ச்சொல் வீரம்!





• ராமா ராமா

● ஆர்.சுந்தரி, குளித்தலை

? இரவு, பகல் பாராது உழைக்கும் அரசு ஊழியர்கள் அலுவலகத்தில் தூங்குவதாக ஜோக்ஸ் போட்ட வண்ண மிருக்கும் பத்திரிகைகள் மீது வழக்கு போடலாமா?

! டாக்டர்கள், மாமியார்கள், அரசியல்வாதிகள், ஹோட்டலில் மாவாட்டுவோர், காதலர்கள், சுண்டல் விற்போர் எல்லோரையும் சேர்த்துக் கொள்ளுங்கள்... பத்திரிகை விரோத ஆட்சியில் அதற்கொரு தனி நீதிமன்றம்கூட நிறுவக்கூடும்.

● புலவர் கணேசன், பொறையாறு

? நீதிபதிகளையும் அவர்களது செயல்பாடுகளையும் தீர்ப்புகளில் உள்ள குறைகளையும் நடுநிலை ஆதாரங்களோடு பத்திரிகையில் விமர்சிக்கலாம்; அது அவதூறு ஆகாது என்று நீதிபதி சவந்த் கூறியிருப்பது பற்றி...?

! நடுநிலையோடும் ஆதாரங்களோடும் என்ற இரு வார்த்தைகளைப் பலர் அலட்சியப்படுத்துவதுதான் பிரச்னைகளுக்குக் காரணம். ஊகங்களின் அடிப்படையில் எழுதினால் ஆபத்துதான்.

● கீதா, சென்னை - 4 ❐

? பான் மசாலா உடலுக்குக் கெடுதல் என்று அரசு அதன் விற்பனைக்குத் தடை விதித்துள்ளதே? ஆனால் சின்னத்திரையில் பான்மசாலா விளம்பரங்கள் வருகின்றனவே?

! தடை, மாநில அரசின் உத்தரவு; சின்னத்திரை சானல்கள் அகில இந்திய அடிப்படையில் ஒளிபரப்பாகின்றன; மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. அதுதான் முரண்பாடுக்குக் காரணம்.

● எஸ். ராஜமழை, சின்னமனூர்

? கள்ள வோட்டைத் தடுக்க, வோட்டுப் போடும்போது கைவிரலில் இரண்டு முறை மை இடுமாறு தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளதே, அதையும் மீறி கள்ள வோட்டு வராது என்று உறுதியாகச் சொல்ல முடியுமா..?

! வோட்டுப் பட்டியலே கள்ள வோட்டுப் பட்டியலாகிவிட்ட பிறகு, விரலில் இருமுறை என்ன, எட்டு முறை என்ன... எல்லாம் ஒன்றுதான்!

● ஆர்.சுதாகர், செஞ்சிக் கோட்டை

? உண்மையில் மனசாட்சிக்குப் பயப்படுபவன் யார்?

! உ.பி. தேர்தலில் நிற்க வேட்பு மனு தாக்கல் செய்துள்ள நூறு குற்றவாளிகளிடம் கேட்டுப் பாருங்கள்! மனச்சாட்சியாவது மண்ணாங்கட்டியாவது. இந்திய ஜனத் தொகையில் அரையே அரைக்கால் சதவிகிதம் கூடத் தேராது!

● எம்.சிவகுருநாதன், தஞ்சாவூர்

? ஆண்டிபட்டியில் 'ஜெ'வை வீரமணியும் ஆதரிக்கிறார்; இராமகோபாலனும் ஆதரிக்கிறார்..? இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! வாழ்க்கையில் சோறு கண்ட இடம் சொர்க்கம். அரசியலில் செல்வாக்கு கண்ட இடம் சொர்க்கம்!

● எஸ். ரஜினி, ஈரோடு

? 'ஜெயலலிதாவை ஜெயிப்பதே பொதுக்குறிக்கோள். போட்டியிடாதவர்கள் என்னை ஆதரியுங்கள்' என்று புதிய தமிழகம் தலைவர் கிருஷ்ணசாமி கோரிக்கை விடுத்துள்ளாரே?

! அவருடைய கட்சிக்குள்ளேயே அவருக்கு ஆதரவு இல்லையே! பிளவுகள் வெளியேற்றங்களைத்தானே காண்கிறோம். அப்புறம் மற்றக் கட்சிகள் எப்படி ஆதரிக்கும்.

● கே.மூர்த்தி, குட்டலாடம்பட்டி

? தமிழ்நாட்டில் அரசுக்கெதிரான போராட்டங்கள் உப்புசப்பற்றவையாக நடக்கின்றனவே..?

! உப்பு சப்பற்ற பிரச்னைகளுக்குப் போராட்டங்கள் நடத்தினால் உப்புச் சப்பற்றவையாகத்தான் போராட்டங்களும் முடியும்.

❐ ரூ.100 பரிசு பெறுபவர் : கீதா, பிளாக் 9ஏ, சாந்தி அபார்ட்மென்ட்ஸ், 46, ரோசரி சர்ச் சாலை, மயிலை, சென்னை - 4

★ ரூ. 50 பரிசு பெறுபவர் : சீனு சந்திரா, 10, ராக்கியப்பன் முதல் சந்து, மயிலை, சென்னை - 4

கனமான ஹைக்கூ!

✉ காஞ்சி சிறப்பிதழ் அபாரமாக இருந்தாலும் "பாரம் சுமக்கும் பட்டாம்பூச்சிகள்' கட்டுரை மனத்தைக் கனக்கச் செய்து, சிறப்பிதழ் படித்த மகிழ்ச்சிக் குளத்தில் சிறு கல்லைப் போட்டாற் போன்று சலனப்படுத்திவிட்டது. கட்டுரையின் தலைப்பே ஒரு கனமான ஹைக்கூ!

அயன்புரம், த. சத்தியநாராயணன்

✉ நான் தி.மு.க. அனுதாபிதான். ஆனால் தமிழக வாக்காளர்கள் அறுதிப்பெரும்பான்மையுடன் தனியாக ஆட்சி அமைக்க வாக்களித்துள்ளார்கள். எனவே அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்க அனுமதிப்பதே ஜனநாயகம். கட்சித் தலைவி ஆட்சியில் அமர்வதற்கான தடைகள் நீங்கி விட்டன. அவர் ஆட்சிப் பொறுப்பேற்று மீண்டும் தவறுகள் செய்து ஐந்தாண்டுகள் கழித்து தேர்தலில் நின்றால் மறுபடியும் மக்கள் அவரை வெளியேற்றத் தயங்க மாட்டார்கள். அவர் ஆட்சியில் அமர வழிவிடுவதே ஜனநாயகப் பண்பு ஆகும். அவரை எதிர்த்துப் போட்டி வேட்பாளர் நிறுத்துவது ஜனநாயகத்தின் கழுத்தை முறிப்பதற்கு ஒப்பாகும்.

சென்னை - 116, ச. இராசன்



✉ சென்ற தேர்தலில் அ.தி.மு.க. ஜெயிக்க உதவிய த.மா.கா., காங்., கம்யூனிஸ்ட் ஆகியன இந்தத் தேர்தலில் தி.மு.கவை ஆதரிக்காவிட்டாலும், அ.தி.மு.கவை எதிர்க்கவாவது செய்திருக்கலாம். அவ்வாறு செய்யாமல் விட்டது, அக்கட்சிகளின் கோழைத் தனத்தைக் காட்டுகிறது என்ற கருத்து அருமை, உண்மை!

சொக்கலிங்க நகர், பி. பொன் இலக்கியா

✉ விடுதலைப்புலிகள் நமது இனம்தான் என்று கூறும் வாசகர் (பேரூர் க. சரவணன்) ராஜீவ் காந்தியும், அவருடன் 'படுகொலை' செய்யப்பட்ட பல போலீஸ்காரர்களும் நமது இனம்தான் என்பதை ஏன் மறந்தார் என்பது புரியவில்லை. தவறு செய்தவர்கள் அண்ணனாக இருந்தாலும், தம்பியாக இருந்தாலும், பாட்டனாராக இருந்தாலும் அவர்களைத் தண்டிப்பதுதான் முறை என்று நாம் சிறுவயது முதலே கற்கும் புராணம் (மகாபாரதம்) தெளிவாகக் கூறுகிறதே.

காஞ்சி, எம்.டி. ரவிகாந்த்

✉ ஏக்நாத் எழுதிய "கருக்குப் பை" சிறுகதை கருத்து நயமும் கலை நயமும் கொண்டது. "அங்ஙன இங்ஙன எங்கயுமில்லை எதிரி; முடங்கிக் கிடக்கான் கருக்குப்பையல!" எனும் சொற்கள், நமது கிராம மக்களின் நடைமுறை வாழ்வை மட்டுமின்றி, ஒட்டுமொத்த இந்திய மக்களின் அவல வாழ்வையும் மறைமுகமாக உணர்த்துவதாகவே, எனக்குத் தோன்றுகிறது!

திருநெல்வேலி, தி.க.சி.

✉ "அண்ணாவுக்கு அறிஞர் பட்டம் கொடுத்தவர்" செய்தி படித்தேன். 1946ஆம் ஆண்டின் பிற்பகுதியில், "கே.ஆர். ராமசாமியின் கிருஷ்ண நாடக சபா" என்று அழைக்கப்பட்ட நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர். நாடகக் கம்பெனி, அண்ணாவின் 'ஓர் இரவு' நாடகத்தை தொடர்ந்து 300 நாட்கள், தஞ்சை ராமனாதன் செட்டியார் ஹாலில் நடத்தியது. அதன் 25ம் நாளன்று தலைமை வகித்த பாரதிதாசன் அவர்கள் நாடகத்தைப் பாராட்டிப் பேசுகிற போதுதான் முதன் முதலில் 'அறிஞர் அண்ணாதுரை' என்று குறிப்பிட்டார்கள். அதற்கு அடுத்த நாளிலிருந்து எல்லா விளம்பரங்களிலும் 'கதை, வசனம் சி.என். அண்ணாதுரை எம்.ஏ.' என்று போடப்பட்டது. பிறகு தான் எல்லோரும் அறிஞர் அண்ணா என்றே அவரை அழைக்கத் தொடங்கினார்கள்.

இராம. வீரப்பன்.
தலைவர்:
எம்.ஜி.ஆர். கழகம்.
சென்னை.

வட்ட மேஜை

அரசியல் விஷயங்களை மட்டுமே சின்னத் திரையில் 'மூன்றாம் பார்வை' பார்த்து வரும் ரபி பெர்னார்ட், இங்கே நான்காம் பார்வையாகக் காதலைப் பார்க்கிறார்.

நான்காம் பார்வை!

ராஜீவ்காந்தி, தாம் காதலித்த இத்தாலியப் பெண்ணான சோனியாவை, தம்முடைய தாய் இந்திராகாந்திக்கு அறிமுகப்படுத்தியபோது, அவர், "ஒரு நாட்டின் பிரதம மந்திரியின் மகனைக் காதலிக்கிறோமே! இது நிறைவேறுமா? என்ற பயம் உனக்கு இல்லையா?" என்று கேட்டாராம்.

அதற்கு சோனியா, "இல்லை... அந்த அளவுக்கு எங்களுடைய காதல் எனக்கு அசாத்தியமான தைரியத்தைக் கொடுத்திருக்கிறது" என்று பதில் சொன்னாராம். ஒரு புத்தகத்தில் நான் படித்த சம்பவம் இது. சோனியா காந்தி சொன்னது ஆழமான அர்த்தம் கொண்டது. காதல் என்பது காதலர்களுக்கு அசாத்தியமான துணிச்சலைத் தருகிற ஒரு சமாசாரம்!

அதனால்தான் இந்த உலகமே எதிர்த்து நின்றாலும், காதலர்கள், வாழ்க்கைக் கரம் பற்றுகிறார்கள்.

இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

ஆனால், இன்றைக்கும், நம் சமுதாயத்தில் காதல் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுகிற ஒரு விஷயம் கிடையாது. பாரதிதாசன் சொன்னதுபோல, காதலை, சினிமாவில், கதைகளில், கவிதைகளில் பேச்சிலே நாம் ரசிக்கிறோம்; பாராட்டி, ஆதரிக்கிறோம். ஆனால் நம் வீட்டுக் காதல் என்றால், கொதித்து எழுகிறோம். இதற்கு நம் சமூகத்தில், காதல் என்பது பார்க்கப் படுகிற கோணம் கலாசாரத்தின் பால்பட்டது என்பதுதான்!

காதல் என்பது, பாரதிராஜா படத்து பிராமணப் பையன் கார்த்திக், கிருஸ்தவப் பெண் ராதாபோல, உணர்வுகளின் உந்துதலால், மத அடையாளங்களைத் துறந்து, சுற்றம், நட்பை விட்டு அகன்று, ஓடிப் போவது இல்லை. பாரதிராஜாக்களுக்கு வேண்டுமானால், அவர்கள் ஓடுவதைக் காட்டிவிட்டு, கையோடு, காதல் பற்றி கவிதை நயத்துடன் ஏதாவது சொல்லி, 'வணக்கம்' போட்டவுடன், பணி முடிவடைந்து விடுகிறது. அப்புறம் அவர்களுக்கு என்னென்ன பிரச்னைகள் வந்தன? அவற்றை எப்படி எதிர்கொண்டார்கள் என்பது பற்றி எல்லாம் சினிமாக்காரர்களுக்கு கவலையில்லாமல் போகலாம். ஆனால், அதன்பின் நிஜக் காதலர்களின் கதி என்ன? அதை யோசிப்பதுதானே யதார்த்தம்!

ஆக, காதல் என்பது திரையிலோ, எழுத்திலோ சித்திரிக்கப்படுவதுபோல, வயது காரணமாக இருபாலரிடையே ஏற்படும் உடல் சம்பந்தப்பட்ட ரசாயன மாற்றம் கிடையாது. அது உணர்வு சம்பந்தப்பட்ட ஒரு விஷயம். நமது இலக்கியங்கள், பண்டைக்காலம் தொட்டே காதல் பற்றி ஏராளமாக பேசியுள்ளன என்றாலும்கூட,

இம்மியும்



- நீ
  இம்மியும் சலிக்காத
  ரம்மியம்!
- ஒரு ஆப்பிளின்
  காம்பைப் போல
  சற்றே வளைந்த நாசி!
- ஆயிரம்
  அலங்கார வளைவுகள்
  செய்யாததை
  உன் ஒரே ஒரு
  புருவத்தின் வளைவு
  செய்து விடுகிறது.
- சரி! சொல்!
  நீ எத்தனையாவது
  வானவில்!

நமது சமுதாயமும், கலாசாரமும் திருமணம் சார்ந்தே அமைந்துள்ளன.

இங்கே, ஆயிரம் பொய் சொல்லி, ஒரு கல்யாணத்தைப் பண்ணலாம். அதைச் சமுதாயம் அங்கீகரிக்கும். ஆனால் மேற்கத்திய நாடுகளில் நிலைமை தலைகீழ். தன்னைப் பற்றிய உண்மையை மறைத்து, ஒருவன், ஒருத்தியைக் காதலித்து, கல்யாணம் செய்து கொண்டாலும்கூட, மறைக்கப்பட்ட உண்மை, வெளிச்சத்துக்கு வந்தால், அதைக் காரணம் காட்டியே அங்கே விவாகரத்து வாங்கிவிட முடியும். காரணம், அங்கே திருமணங்களை, சம்பந்தப்பட்ட தனி மனிதர்களான ஆணும், பெண்ணும்தான் தீர்மானிக்கிறார்கள். பெற்றோர்கள் பார்த்து முடித்து வைப்பதில்லை. 'இருவருக்கும் ஒருவரை ஒருவர் பிடித்திருக்கிறது; நாம் இருவரும் எவ்வளவு காலம் ஒன்றாக இருக்க முடியுமோ அவ்வளவு காலம் ஒன்றாக வாழ்வோம்! இனி தொடருவதற்கு வழியில்லை' என்றால் பிரிந்து விடுவோம்' என்று எழுதப்படாத நிபந்தனையின் பேரில்தான் திருமணம் நடக்கிறது; அல்லது முடிவுக்கு வருகிறது.

அங்கே திருமணங்கள் நடப்பதற்கும் சரி, முறிவதற்கும் சரி, இதுதான் காரணம்! உடற் கவர்ச்சிக்கு அப்பாற்பட்டு, மனப் பக்குவம் அடைந்த ஆணும், பெண்ணும், தங்கள் சமூக, பொருளாதார, பண்பாட்டு, கலாசார ரீதியில் உள்ள வித்தியாசங்களைப் புரிந்துகொண்டு, தங்கள் திருமணத்துக்கு இந்த விஷயங்களால் ஏற்படக்கூடிய பிரச்னைகளை உணர்ந்து, அவற்றை எதிர்கொள்ளத் தேவையான துணிவும் பக்குவமும் இருக்குமானால், அந்த ஆணும், பெண்ணும் காதலிக்கலாம்.

மற்றவர்கள் காதல் என்று சொல்லிக் கொண்டு ஈடுபடும் செயலுக்கு நான் பச்சைக்கொடி காட்ட மாட்டேன்.

பக்குவப்பட்ட காதலர்களுக்கு (மட்டுமே) ஜே!


...ப்பு: மௌலி



சலிக்காத ரம்மியம்!

- தோள்களில்
  சாய்ந்து கொள்!
  ஒரு வயலின்போல் உன்னை
  வாசிக்க ஆசை!

- நீ முகம்பார்க்கும்
  கண்ணாடியில்
  அடிக்கடி முகம்
  பார்த்தால்
  நான்கூட அழகாகி விடுவேன்



- உன் வீட்டு
  ஜன்னல் கம்பிகளுக்கு
  தங்க முலாம் பூச
  ஏற்பாடா?
  அதில் கன்னம்
  தேய்க்கிறாயே!

- பா. விஜய்


திமிங்கலமா? கொசுவா?

சிவசேனைக்குள்ளேயே சுசமுச, பி.ஜே.பியினரிடையே மனக் கசப்பு, இரண்டு கட்சிக்குமிடையே இழுபறி.. இதெல்லாம் பழைய கதை. காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் (என்.சி.பி.) நடுவே ஏற்பட்டிருக்கும் பிளவுதான் அரசியல் மசாலாவில் லேட்டஸ்ட் "தூற்றுதல் ஸ்பெஷல்."

"பொடோவையும் (தீவிரவாதத் தடுப்புச் சட்டம்), சிமியையும் (இஸ்லாமிய மாணவ இயக்கம்) எதிர்ப்பதாக இருவரும்தான் முடிவெடுத்தோம். தேர்தல் நெருங்க நெருங்க, மைனாரிட்டிகளின்பால் காங்கிரஸின் நெருக்கம் கூடி வருகிறதா? உடனே என்.சி.பி.காரர்கள் தங்களிஷ்டத்துக்கு முடிவெடுத்ததாக ரீல் சுற்றுகிறார்கள் காங்கிரஸார்" என்று சகன் புஜ்பல் குதிக்க, முதல்வர் விலாஸ் ராவ் தேஷ்முக்கோ "அரசின் எந்தத் திட்டம் வெற்றி பெற்றாலும் அது தங்களால்தான் என்று மார்தட்டுவார்கள். கொஞ்சம் சறுக்கிவிட்டால் அது எங்களால்தான் என்று குற்றம் சாட்டுவதே என்.சி.பி.காரர்களுக்கு வழக்கமாகி விட்டது" என்று மேடைக்கு மேடை குமுறி வருகிறார்.

ஹூம்.. மொத்தத்தில் இவர்கள் அடித்தால் திமிங்கிலம், அவர்கள் அடித்தால் கொசு!

• மும்பையில் லாலு... மகனுடன்



மும்பை மசாலா

கொசுவை நம்பி யாராவது தேர்தலில் இறங்குவார்களோ? இறங்கியிருக்கிறாரே, ஸாந்தா குரூஸில் பி.ஜே.பி. டிக்கட்டில் நிற்கும் ஆஷிஷ் ஷீலார்! தம் தொகுதியிலுள்ள கொசுக்களை ஒட்டு மொத்தமாக அழித்து, சிக்குன்குனியா, மலேரியா, டைபாய்டு, காலரா போன்ற பயங்கரங்களிலிருந்து காப்பதே இவரது பிரதான வாக்குறுதி. மும்பை முழுவதையுமே கொசுக்களின் பிடியிலிருந்து விடுவிக்க, ரூ.100 கோடியில், திட்டம் வேறு வைத்திருக்கிறார்! இவர் வெற்றிபெற்றால் மும்பைக்கே கொசுக்களிடமிருந்து விடுதலை... விடுதலை... விடுதலை!

விடுதலை என்று நாம் நினைப்பதெல்லாம் விடுதலையுமல்ல. தளை என்று நாம் நினைப்பவையெல்லாம் தளைகளுமல்ல. பாருங்களேன், ஒரு சமூக சேவை இயக்கம்

• பண்டிட் ஜஸ்ராஜ்



மெனக்கெட்டு 89 இளம் பெண்களை கோர்வாடியிலுள்ள (சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து) மீட்டு வந்தது. அவர்களை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஆஜர்படுத்தியபோது ஏற்பட்ட ரகளையைக் கண்டு நீதிபதியே அரண்டுவிட்டார். அவர்மீதே அந்தப் பெண்கள் பணத்தை எல்லாம் வீசி, அவதூறாகப் பேசி, மீண்டும் தங்களைத் தங்கள் தொழிலுக்கே அனுப்புமாறு கலாட்டா செய்தனர். அவர்களை ரிமாண்ட் ஹோமில் அடைத்தபோது, அங்கும் ஆக்ரோஷமாகப் போராடித் தங்களை விடுவித்துக் கொண்டு, பழைய இடத்துக்கே திரும்பிவிட்டனர். இப்போதுதான் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதாகக் கூறுகின்றனர். 'சுதந்திரத்துக்கு இப்படி ஒரு அனர்த்தமான அர்த்தமா?'

அர்த்தம் தெரியாமல் எதையாவது உளறிவிட்டு மாட்டிக் கொள்ளக் கூடாது என்பது முகமது அன்சாரி விஷயத்தில் சரியாகத்தானிருக்கிறது. பாவம்.. பதினைந்து இரவுகளாக, பாடுபட்டு பிவண்டியில் ஒரு சுரங்கப் பாதை அமைத்து, சரிகா ஜுவல்லர்ஸ் என்ற கடையைக் குறி வைத்து, கடைசியில் இரண்டரை லட்சம் பெருமானமுள்ள நகைகளைத் திருடுவதில் வெற்றியும் பெற்று விட்டான். அதை ஒரு பையில் அடைத்துக் கொண்டு, சொந்த ஊருக்கு ரயிலேறியபோதுதான், ஒரு ரயில்வே போலீஸ்காரர், சும்மாவேனும் "பையில என்ன?" என்று அதட்டியிருக்கிறார். இவன் உடனே, "காளா சாபூன்" (கருப்பு சோப்) என்றிருக்கிறான். வடக்கத்தியர்கள் துணிக்குப் போடும் விலை மலிவான சோப்பை, 'காளா சாபூன்' என்பது வழக்கம். ஆனால் மும்பையின் அண்டர்வர்ல்ட் அகராதியில், அதற்கு ஆர்.டி.எக்ஸ். வெடி மருந்து என்றல்லவா அர்த்தம்! இது தெரியாமல் அவன் உளற, அடுத்த கணமே கையில் விலங்கேறிவிட்டது! மருந்தை எதிர்பார்த்த காவல் துறைக்கு, கிடைத்ததோ விருந்து!

விருந்தினராக வந்தவர்தான். இருந்தாலும் வந்த இடத்தில் ஒரு ஆர்.டி.எக்ஸ் வீசி எறியாமல் இருக்க முடியுமா நம் லாலு பிரசாத்ஜியால்? தம் எட்டாவது மகன் தருணுடன், ஷீர்டி சென்று சாயிபாபாவையும், சேங்கணாப்பூர் சென்று சனீஸ்வர பகவானையும் கும்பிட்டு, அங்கிருந்த கொழு மொழு எருமைகளால் கவரப்பட்டு (கி.. கவரவில்லைங்க), பின்னர் நண்பர் சரத் பவாரின் அழைப்பிற்கிணங்கி வாங்கடே ஸ்டேடியத்தில் கிரிக்கெட் மாட்ச் பார்க்க வந்திருந்தார். "இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் மாட்ச் ஒன்றை எங்கள் பீஹாரில் நடத்துங்கள்; நான் பூரண பாதுகாப்புத் தருகிறேன்" என்று மார்தட்டியிருக்கிறார். தாக்கரே காதில் விழுந்திருக்குமா இந்த சப்தம்?

சப்தத்தைத் தடுக்கும் சட்டம் ஒன்று, சில



• பீம்சென் ஜோஷி

ஹிந்துஸ்தானி பாடல் கலைஞர்களின் சித்தத்தையே கலக்கிவிட்டது! இரவு பத்து மணிக்கு மேல் லவுட் ஸ்பீக்கருக்கு இங்கே தடைவிதித்து விட்டார்களா... பண்டிட் ஜஸ்ராஜ், பீம்சென் ஜோஷி போன்ற கலைஞர்கள், 'விடிய விடியப் பாடும் போதுதான் கச்சேரி எடுபடும். இந்தத் தடையை நீக்க வேண்டும்" என்று பிரதமர் வரையில் சென்று முறையிட்டுள்ளனர். 'இது முறையா?' என்கிறது காவல் துறை!

— ஜெயஸ்ரீ ராஜ்

ராஜம் முரளி

கட்டிவராது ஸார்! வெந்தயக்கீரையின் குண நலன்களைச் சுருக்கமாக எழுதுவதற்கே முழுசாக நாற்பது பக்க நோட்டு தேவைப்படுகின்ற நிலையில், இரண்டே பக்கம் தரப்பட்டிருப்பது 'கட்டி வராது'னு சொல்ல வந்தேன். அது மட்டுமில்லை, வெந்தயக்கீரையை அடிக்கடி உபயோகிச்சா உடம்பில் கட்டி வராது என்பதும் நிஜம்தான். ஏன்னா, வெந்தயம் அவ்வளவு குளிர்ச்சி!



கால்ஷியம், இரும்புச் சத்து, வைட்டமின் ஏ போன்றவை அபரிமிதமாக இருப்பதால், வெந்தயக் கீரையை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். மல்டி வைட்டமின் மாத்திரைக்குச் செலவாகும் காசு மிச்சமாகும். உடலும் உரமாகும்!



உள்சூடு, வயிற்றுப் பொருமல், வயிற்றுப் போக்கு, ஜுரம், பித்தம், வாய்வு என பல பிரச்னைகள் நாலு கால் பாய்ச்சலில் ஓட, மிகவும் நம்பகமானது, மிக மலிவானது வெந்தயம் மட்டுமே!

ஒரு கட்டு இளம் வெந்தயக்கீரையை ஆய்ந்து, பொடியாக நறுக்கி, ஒரு டீஸ்பூன் வெண்ணெயில் வதக்கிச் சாப்பிட, பித்த மயக்கம் தீரும். நல்ல பசி எடுக்கும். இரவில் படுக்கப் போகுமுன், அரை டம்ளர் இளமோரில், ஒரு டீஸ்பூன் வெந்தயத்தை ஊறவிடுங்கள். மறுநாள் வெறும் வயிற்றில் இதைச் சாப்பிட்டு வர, நீரிழிவு நோய் குணமாகும். இரத்த அழுத்தம் கட்டுப்படும்.

இட்லி, தோசை, அடைக்கு ஒரு டேபிள் ஸ்பூன் வெந்தயத்தை ஊற வைத்துச் சேர்த்து அரைக்கவும். இதனால் டபுள் லாபம்! உடலுக்குக் குளிர்ச்சி, சத்து அதிகரிக்கும் என்பதோடு, நல்ல சுவையும் கூட!

கிராமப்புறங்களில் இளம் தாய்மார்களுக்குக் கஞ்சி காய்ச்சும் போது புழுங்கலரிசி நொய்யோடு, அரை டீஸ்பூன் வெந்தயத்தையும் (விதை) சேர்த்துக் காய்ச்சுவார்கள். இதனால் தாய்ப்பால் பெருகும். குழந்தைக்கு வாய்வுத் தொல்லையும் இருக்காது. வெந்தயக் களி, பஞ்சாபி மக்களின் பிரதான உணவு. கால் கிலோ கோதுமை நொய், ஒரு ஸ்பூன் கசகசா, பத்து பாதாம் பருப்பு, ஒரு டேபிள் ஸ்பூன் வெந்தயம் போன்றவற்றை மாவாகத் திரித்துக் கொள்வார்கள். ஒரு வாணலியில் பாலை ஊற்றி அது



கொதித்ததும் சர்க்கரை, நெய்விட்டு, கிளறி, வெந்தய மாவைக் கொட்டி, களி போல கிளறிச் சாப்பிடு வார்கள். இதனால் உடல் வலிமை கிடைக்கும். ஆண்மை பெருகும். பஞ் சாபிக்காரர்கள் வாட்டசாட் டமாக, உடல் உறுதியோடு இருப்பதற்கு, 'நன்றி: வெந்த யம்' என்று டைட்டில் கார்டு போடலாம்.

வெந்தயத்தை ஊற வைத்து, அம்மியில் வைத்து விழுது போல அரைத்துக் கொண்டு, வாணலியிலிட்டு இலே சாகப் புரட்டி, சூடு செய்யவும். வெதுவெதுப்பாக இருக்கும் போதே, நாள்பட்ட வீக்கங்கள் மீது பூச, வீக்கமும், வலியும் குறையும்.

சீமை அத்திப் பழத்துடன், ஊற வைத்த வெந்தயத்தை அரைத்து, கட்டிகள் மீது பூச, விரைவில் பழுத்து உடையும். தீப்புண்கள் கூட விரைவில் ஆறும்.

வெந்தயக் கீரையை நெய்யில் புரட்டிச் சாப்பிட, தொண்டை ரணம் ஆறும். மேடைப் பேச்சாளர்கள், பாட கர்கள் போன்ற குரலாளர்கள், வெந்தயக் கீரையை உணவில் சேர்த்துக் கொண்டால், 'தொண்டையில் கிச்கிச்' இருக்காது. வெறும் வாணலியில், நூறு கிராம் வெந்தயத்தைப் போட்டு, சிவக்க வறுத்து, பொடி செய்து கொள்ளவும். அந்தப் பொடி யைத் தேனில் குழைத்துச் சாப்பிட மலச்சிக்கல், 'சலாம்' சொல்லி விடைபெறும். சிறுநீர் பெருகும். மேனி வனப்பு அதிகரிக்கும்.



வெந்தயக் கீரையை, பாசிப்பருப்பில் வேக வைத்து, பூண்டு வதக்கிச் சாப்பிட்டுப் பாருங்கள். சொறி, சிரங்கு போன்ற எந்த பிராண்ட் சருமப் பிரச்னை ஆனாலும் சட்டென்று விலகும். வெந்தயக்கீரையை இடித்துப் பிழிந் தெடுத்த சாறு கால் லிட்டர் என்றால், அதே அளவு நல் லெண்ணெயை எடுத்துக் கலந்து, காய்ச்சவும். புகைந்து வந்ததும், ஒரு டீஸ்பூன் வால் மிளகு, நான்கு பிஞ்சுக் கடுக்காய்களை ஒன்றிரண்டாகத் தட்டிப் போட்டு, இறக்கி, வடிகட்டவும். இந்த தைலத்தைத் தினமும் தலைக் குத் தடவி வந்தால் பொடுகு தீரும். இளநரை மறைந்து, கரிய கூந்தல் மினுப்பு காட்டும்.

உடலில் சருமப் பிரச்னை, வெந்தயச் சாறோடு, சம அளவு ஆமணக்கு எண்ணெய், நல்லெண்ணெய் கலந்து மேனியில் பூசிக் குளிக்க, நாற்பதே நாளில் சருமம் ஆரோக்கியமாக மிளிரும். மாசுமருவில்லாத மேனி கிடைக்கும்.

பெண்களுக்கு, குதிகாலில் பித்தவெடிப்பு இருந்தால், அதைப் பட்டைக் கொலுசு மாட்டி மறைப்பானேன். மேற் கூறிய எண்ணெயைத் தடவி வந்தாலே சொர சொரப்பு மறைந்து, புறா இறகு அழகு குடி கொள்ளும். என்ன நம்பமுடியலையா? பந்தயம் கட்டுங்க... வெந்தயம் ஜெயிக்கும்!

படங்கள்: ஸ்ரீஹரி

பந்தயம் கட்டுங்க; வெந்தயம் ஜெயிக்கும்!

வினோத்

காதல் என்ற சொல்லைத் தலைப்பிலே கொண்டு எத்தனை படங்கள் வெளியாயின் என்ன? அந்த மூன்றெழுத்தின் வலிமையை முழுமையாக வெளிப்படுத்த பாரதிராஜா மாதிரி யாருமில்லை. அவருடைய ஆரம்ப காலப் படங்களின் பாடல் காட்சிகளைச் சேர்ந்தாற்போல் கே.டீவி.யில் பார்த்தபோது, அந்த அரசன் அதே இளமைத் திமிரோடு ஆட்சிக்குத் திரும்ப மாட்டாரா? என்ற ஏக்கம்



உண்டாயிற்று - 'நினைவோ ஒரு பறவை, அது விரிக்கும் தன் சிறகை' என்று ஸ்ரீதேவியின் முகத்தோடு முகம் புதைத்துக் கமல் பாடுவதும்; முகமும் காதும் மட்டும் வெளியே தெரிய, பூக்குவியலுக்குள் ராதாவும் கார்த்திக்கும் புகுந்து படுத்திருப்பதும்; ரேவதியைத் துரத்தித் துரத்திப் பாண்டியன் மண் வாசனையை நுகர்வதும் - இவ்வளவுக்கும் பின்னால் துள்ளலும் துயரமும் இழையோடுகிற இசைஞானியின் சங்கீத ஜாலங்களும் -


இந்த அழகுகள் என்றைக்கும் அழியாது. The heart-breaking beauty will remain when there is no heart to break for it.



அயோத்தி பிரச்னையை மையமாக்கி, பீட்டர் அல்போன்ஸையும் விசுவ இந்து பரிஷத்காரர் ஒருவரையும் மோதவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் (சன்) வீரபாண்டியன். நடுநடுவே அவரும் ஓரம் சாராமல் இல்லை - பீட்டர் பக்கமாக.

உ.பி.யில் தேர்தல் வரும் சமயம் பார்த்து ஏன் கோயில் விஷயத்தைக் கையில் எடுக்க வேண்டும் என்ற பீட்டர் அல்போன்ஸின் வாதத்தில் வலு இருந்தது. ராக்கெட் நிலையம் நிறுவியபோது அங்கிருந்த ஒரு சர்ச் குறித்துச் சம்பந்தப்பட்டவர்களின் சம்மதத்தை முதலில் பெற்றதாக உதாரணங்கள் கூறினார்.

பரிஷத்காரர் முதலில் ஏதேதோ சமாதானம் சொல்லிவிட்டு, இறுதியாக, 'ஐயா, ராமர் பிறந்த இந்தியாவில் ராமருக்குக் கோவில் கட்ட விடமாட்டேன் என்கிறார்களே என்று ஏற்கெனவே



நாங்கள் ரொம்ப நொந்து போயிருக்கிறோம். நீங்கள் வேறே அரசியல் இரசியல் என்றெல்லாம் பேசி எங்கள் மனசைப் புண்படுத்தாதீர்கள்' என்றார்.

பீட்டர் அல்போன்ஸ் பெருந்தன்மையானவர். அதற்கு மேலும் வறுப்பது நியாயமல்ல என்று அத்துடன் விட்டுவிட்டார். Why waste

our elocution on impossible solution என்று ஓர் அறிவாளி சொன்னது அவருக்கு ஞாபகம் வந்தது போலும்.

மென்னெழுத்தில் அவர் எழுதியிருக்கும்!

ஒரு பக்கம் ஹரிகதா காலட்சேபம். இன்னொரு பக்கம் நாட்டிய நிகழ்ச்சிகளில் பாட்டு. இரண்டு துறைகளிலும் திறமையுடன் திகழ்கிறார் கிரிஜா ராமஸ்வாமி. There is no substitute for talent.

'அரிகிரி அசெம்ப்ளி'யில் (ஜெயா) கணீர் கணீரென்று பாடியதோடு பளிச் பளிச்சென்று பதிலும் கொடுத்தார். ஒரு நடன நிகழ்ச்சியின் போது தலைக்கு மேலிருந்த பெரிய விளக்கு அறுந்து விழுந்து மயிரிழையில் தாம் தப்பியதாக அவர் சொன்னவுடன் அரிகிரிக்காரர் குறுக்கிட்டு 'அதன் பிறகு ஹெல்மெட் போட்டுக் கொண்டுதான் மேடையில் உட்கார்ந்தீர்களா?' என்றார். கிரிஜா ராமஸ்வாமியின் உடனடி பதில், 'இல்லை. தலைக்குமேலே அபாயமானது எதுவும் தொங்கவில்லை என்பதை முதலிலேயே பார்த்து நிச்சயப்படுத்திக் கொண்டு பிறகுதான் உட்காருகிறேன்!'



• திருவையாறில்...

தில்லானாவொன்றை அசுர வேகத்தில் அருமையாகப் பாடினார் இவர். 'இதைக் காட்டிலும் ரொம்ப வேகமாய் ஒரு திருப்புகழை என் கதாகாலட்சேபத்தின் முடிவில் பாடுவது வழக்கம்' என்றவர், உதாரணத்துக்காக, காரைக்கால் அம்மையார் சரித்திரத்தை விஸ்தாரமாகச் சொல்லத் தொடங்கினார். அது ஓவர் விஸ்தாரமாகப் போய்விடவே, அந்தக் குறிப்பிட்ட திருப்புகழுக்கு நேரம் கிடைக்காமல் போய்விட்டது.

பகவானின் கிருபையோ அல்லது அந்த இடத்தில் மட்டும் பந்தலைப் பலமாகப் போட்டிருந்தார்களோ தெரியவில்லை. திருவையாறு ஆராதனையில் பஞ்சரத்னக் கிருதிகளைப் பாடிய முக்கியஸ்தர்களின் மேலே மட்டும் மழை சொட்டவுமில்லை, கொட்டவுமில்லை. ஆனால் வெளியே பக்தர்களும் ரசிகர்களும் தலைக்கு மேலே மழை பொழிய, காலுக்கடியில் தண்ணீர் ஓட, முற்றும் நனைந்தபடி நின்றவாறே தாங்களும் கீர்த்தனைகளைச் சேர்ந்து பாடியது மெய்சிலிர்க்க வைத்த காட்சி. A day etched in our memory for a long time to come.

பிப்ரவரி மாதத்தில் மழை பெய்யும் என்று நிர்வாகிகள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் தான். இருந்தாலும் அந்தத் திறந்த வெளியில் நிரந்தரமான, பிரம்மாண்டமான, அழகான மன்றம் அமைப்பது கஷ்டமல்ல. மூப்பனார் காலத்தில் முடித்திருக்க வேண்டிய பணி. வாசன் காலத்திலாவது வரட்டுமே?

ஆராதனை நிகழ்ச்சியைப் படமெடுத்த பொதிகை காமெரா குழுவுக்குத் தனியே விழா எடுத்துப் பாராட்டினாலும் தகும். இவ்வளவு கோணங்களில், இத்தனை குளோசப்களில் இதற்கு முன் திருவையாறு உற்சவத்தை யாரும் எடுத்தது கிடையாது.

ஸ்ரீ நகரில் பயங்கரவாதியை வீடு வீடாய்த் தேடுகிறார்கள். சத்தியமங்கலத்தில் வீரப்பனைக் காடு காடாய்த் தேடுகிறார்கள். வண்டலூரில் புலியை (சிங்கத்தை? சிறுத்தையை? வதந்தியை?) புதர் புதராய்த் தேடுகிறார்கள்.

இந்தத் தேடல் நடந்து கொண்டிருக்கும் வரையில்தான் சுவாரஸ்யம்; நிச்சயமின்மைதான் பரபரப்பு. சர்ச்சில் சொன்னது போல, without perpetual uncertainty the drama of human life would be destroyed. ஆனால் எந்தத் தேடலும் ஒரு நாள் முடிவுக்கு வந்துதான் ஆக வேண்டும். எது முதலில் என்று பார்ப்போம். விடை விரைவிலே தெரிந்துவிடும். ●

மாடர்ன் ஆர்ட் கண்ணகி

பாஸு



''தலைவர் பழமொழியை புதுமையா, காலத்திற்கு ஏற்ப, பேசறதுல கில்லாடி.''

''ஏன்? என்ன சொன்னார்?''

'' 'நேத்திக்கு வெச்ச சிலையை இடிக்க முந்தா நாளே மூE லாரி புறப்பட்டதாம்'னு சொல்றாரே!''



''வெறும் பாறாங்கல்லுதாம்ப்பா! எவனோ 'இது மாடர்ன் ஆர்ட் கண்ணகி சிலை'ன்னு புரளியைக் கிளப்பிவிட, மியூசியத்துல கொண்டு வந்து வெச்சுட்டாங்க!''

''தலைவர் சிலைக்குப் பக்கத்துலயே ஒரு டிராஃபிக் கான்ஸ்டபிள் சிலையும் இருக்கே, எதுக்கு?''

''அப்பவாவது லாரி வந்து இடிக்காதுன்ற நம்பிக்கைலதான்!''



''அதுவா? வாஸ்து சாஸ்திரப்படி எல்லா ஸ்டம்புகளையும் ஒரே பக்கமா வெச்சு ஆடறதுதான் நல்லதுன்னு ஜோசியர் சொல்லியிருக்காராம்!''





புக் பேங்க்

கற்றது கடலளவு - து. கணேசன்

கப்பலும் கப்பல் சார்ந்த உலகமும்தான் இந்தப் புத்தகம். 'மெரைன் என்ஜினீயராக, கப்பலில் தாம் சந்தித்த அனுபவங்களை விவரித்துள்ளார் ஆசிரியர். கப்பல் குறித்த விஷயங்களோடு இவ்வளவு விவரமாக வேறு ஏதும் நூல் வந்திருக்கிறதா? கப்பலையும் கடலையும் அறிந்து கொள்ள இப்புத்தகம் உதவும்.

மீடியா வேவ்ஸ், 6, ராயல் டச் அபார்ட்மென்ட்ஸ், 61, கங்கா நகர், 4வது குறுக்குத் தெரு, சென்னை - 24. விலை ரூ.60/-



வேலு நாச்சியார் - கே. ஜீவபாரதி

ஆயுதமேந்தி வெள்ளையரை எதிர்த்துப் போராடிய முதல் தமிழ்ப் பெண் வேலு நாச்சியார். இவரைப் பற்றிய முழுமையான நூலை ஜீவ பாரதி தந்திருக்கிறார். போராடி, இழந்த நாட்டை மீட்டு, ராணியாக முடி சூட்டிக் கொண்டதோடு (முதல் பகுதி) முடிகிறது இந்நூல். ஒவ்வொரு அத்தியாயத்தின் ஆரம்பத்திலும் ஆசிரியரின் புகைப்படம் ஏன்?

- வைரம் வெளியீடு, 30, முதலியாண்டான் தோட்டம், காமராஜர் சாலை, எல்டாம்ஸ் ரோடு, சென்னை-18.விலை ரூ.75/-



சோமலெ - நிர்மலா மோகன்

பயண இலக்கிய துறையில் அழுத்தமான முத்திரை பதித்தவர் தமிழறிஞர் சோமலெ. எழுத்துத் துறையிலும் பதிப்புத் துறையிலும் தம்மை நிலைநிறுத்திக் கொண்டவர். இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் சாகித்ய அகாதமி இவரைப் பற்றிய வரலாறை வெளியிட்டிருக்கிறது.

- சாகித்ய அகாதமி, சி.ஐ.டி. வளாகம், டி.டி.டி.ஐ. அஞ்சல், தரமணி, சென்னை - 113. விலை ரூ.25/-



சேவைக்கு ஒரு சகோதரி - மோனிகா ஃபெல்டன் - அநுத்தமா.

விவரம் தெரியாத வயதிலேயே விதவையானவர் சகோதரி சுப்புலட்சுமி. ஆனாலும் தொடர்ந்து படித்து சிறந்த ஆசிரியையான அவர், விதவைகள் முழுமையாக வாழ்ந்து மற்றவர்களைக் கைத்தூக்கி விடலாம் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டிய முதல் பெண். தம்மோடு சில பெண்களைத் தங்க வைத்து, குடும்பம் போல வாழ்ந்து காட்டியவர்.

மோனிகா ஃபெல்டன் எழுதிய இவரின் வாழ்க்கை வரலாறு அநுத்தமாவின் மொழி பெயர்ப்பில் கல்கியில் தொடராக வெளிவந்தது.

அல்லயன்ஸ் கம்பெனி, 244, ராம கிருஷ்ணா மடம் சாலை, தபால் பெட்டி எண் 617, சென்னை - 4. விலை ரூ.100/-



யாதுமாகி நின்றாள் - சுப்ரஜா

பதினான்கு சிறுகதைகளடங்கிய தொகுதி. ஒவ்வொரு கதையும் இயல்பாக இருக்கிறது.

திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 17 விலை ரூ.35/-.

- கார்க்கி




• யக்ஞேஸ்வரன்

தேன்கூடு

ஜின் காக்டு என்பவர் பிரபல எழுத்தாளர். அவரிடம் ஒரு நண்பர், "நீங்கள் அதிர்ஷ்டத்தை நம்புகிறீர்களா? என்று கேட்டார். ஜின் காக்டு சொன்னார், " நிச்சயமாக நம்புகிறேன். உங்களுக்குப் பிடிக்காதவர்களின் வெற்றிக்கு அதிர்ஷ்டத்தைத் தவிர வேறு என்ன காரணத்தை உங்களால் கூற முடியும்?"

– பா. குணா







பாரதம் பாடிய வில்லிபுத்தூரார் தம்முடன் எப்போதும் வளைத் தடி ஒன்று வைத்திருப்பாராம். யாரேனும் புலவர்கள் தப்புத் தப்பாகப் பாட்டுப் பாடினால் அவ்வளவுதான். வில்லிபுத்தூராரின் வளைத்தடி புலவர்களின் காதுகளைப் பதம் பார்த்து விடுமாம்.

ஆனால் ஒருவரிடம் மட்டும் அவர் அப்படிச் செய்ய முடியவில்லை. தாம் பாடிய கந்தர் அனுபூதிக்கு விடை கேட்டார் ஒரு பக்தர். பதில் அளிக்க முடியாமல் திணறிய வில்லி, தமது காதைத் தாமே அரிந்து எடுக்க முன் வந்தார். ஆனால் அந்த பக்தரோ "உமது காதுகள் எமது கொடையாக இருக்கட்டும்" என்று பெருந்தன்மையாகக் கூறி அவரை விட்டு விட்டார். யார் இந்த பக்தர்? அவர்தான் அருணகிரிநாதர்!

– ஆர். ஆர். பூபதி

40,000 கிலோ கிராம் உணவு!

- புதிதாகப் பிறந்த குழந்தையின் உடலில் மொத்தம் 350 எலும்புகள் இருக்கும். நன்கு வளர்ந்தபின் இந்த எண்ணிக்கை 206 ஆக குறைந்து விடும்.
- ஒரு மில்லியன் ரத்த சிவப்பு அணுக்கள், ஒரு வினாடியில் பிறக்கின்றன. ஆனால் அதிக பட்சமாக 120 நாட்கள் மட்டுமே வாழ்கின்றன.
- சராசரியாக ஒரு மனிதன் தன் வாழ்நாளில் 40000 கிலோகிராம் உணவைச் சாப்பிடுகிறான்....
- நமது உடம்பில் 1,00,000 மீட்டர்

நீளத்துக்கு ரத்த குழாய்கள் உள்ளன.

● 4,20,000 கியூபிக் மீட்டர் காற்றை ஒரு மனிதன் தன் வாழ்நாளில் சராசரியாக மூச்சாக விடுகிறான்.

● புது குழந்தை 16 மணி நேரம் தூங்குகிறது. மனிதனுக்கு 60 வயதாகும் போது அவனுடைய தூக்கம் 7 மணி நேரமாகக் குறைந்து விடுகிறது.

நன்றி : ஸயன்ஸ் ரிப்போர்ட்டர்

– இரா. திலீப்

குறட்டை ஒலி

பிரிட்டனில் தம்பதிகளின் மண உறவுகளில், குறட்டை விடுவதனால் விரிசல்கள் ஏற்படுகின்றன. நூற்றுக்குப்

“உமது காது எமது கொடை!”

பத்து குறட்டையர்களை மனைவியர் விவாகரத்து செய்து விடுகிறார்கள். எண்பது சதவீதம் தம்பதியினர் ஒரே படுக்கையறையில் தூங்குவதில்லை. குறட்டை ஒலி எப்படியிருக்கிறது என்பதை பாதிக்கப்பட்டவர்கள் இப்படியெல்லாம் விமர்சிக்கிறார்கள்:

பிரசவ வலி கண்ட காண்டாமிருகத்தின் பொறுக்க முடியாத வலி ஒலி.

எக்ஸ்பிரஸ் ரயில் போகும் போது உண்டாகும் சப்தம்.

பல ரம்பங்கள் ஒரு சேர மரங்களை அறுக்கும்போது உண்டாகும் ஒலி!

'பிரிட்டன் ஆன்லைன்'லிருந்து:

– என். பங்கஜம்

அறுபத்தைந்து வயது யக்னேஸ்வரன் இன்னும் படித்துக் கொண்டிருக்கிறார். இதுவரை 25 டிகிரிகளும் 13 டிப்ளமாக்களும் வாங்கியிருக்கிறார். இப்போது யக்னேஸ்வரன் படித்துக் கொண்டிருப்பவை:

• தமிழில் எம்ஃபில் பட்டத்துக்கு

• குழந்தை பராமரிப்பு கல்வியில் எம்.ஏ.

• கூட்டுறவு மானேஜ்மென்ட்டில் எம்.காம்.

• இந்திராகாந்தி பல்கலைக் கழகத்தில் எம்.பி.ஏ. படிப்பில் 19 பேப்பர்கள் முடித்திருக்கிறார்!

யக்னேஸ்வரன் தினமும் காலையில் மூன்றரை மணிக்கு விழித்துக் கொள்கிறார். நான்கு மணி முதல் ஆறு மணி வரை படிப்பு. பின்பு உலாவல்



• அருணகிரியார்

போகிறார். ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். இப்போது பெங்களூரில் உள்ள பத்து கம்பெனிகளில் டைரக்டராக இருக்கிறார்.

அந்தக் காலத்தில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்து இவர் பெற்ற பி.காம் பட்டம்தான் இவர் கல்லூரிக்குப் போய் படித்து வாங்கியது! மீதியெல்லாம் பிரைவேட்டாக படித்து வாங்கியவைதான். எந்தப் பரீட்சையிலும் 67 சதவீதத்துக்குக் குறைந்து வாங்கியதில்லை!

– அனிதா ராமச்சந்திரன்

கடிதம்

ரிஷபன்

நள்ளிரவில் விழித்துக் கொண்டு கடிதம் எழுதுகிறவனைப் பார்த்திருக்கிறீர்களா? குறைந்த பட்சம் சந்தித்தது உண்டா? இருக்க முடியாது. மனிதன் ஆறறிவு படைத்த பிராணி. அன்பிற்கும் பாசத்திற்கும் சுலபமாய் வசப்படுகிற பிராணி.

எதிர் அறையில் விளக்கெரிந்து கொண்டிருந்தது. ஹாஸ்டல் விதிப்படி இந்நேரம் விளக்கெரிந்தால் தவறு. வார்டன் தூங்கிப் போயிருந்தால் கூட அவர் கவனத்திற்குப் போய்விடும். நாளை, முதல் வேலையாக தண்டிப்புத் தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டு வருவார். ஆனாலும் விழித்திருந்தான். சாட்சியாய்ப் பாடப் புத்தகம். நடந்தே இராத பக்கம் பிரிந்து கிடந்தது. விழித்துக் கொண்டு வந்து வார்டன் பார்த்தாலும் இந்தக் கோடை இரவில் சிலிர்த்துப் போகக் கூடும். 'அட்வான்ஸ்டு' சப்ஜெக்டில் இத்தனை அட்வான்ஸாய்ப் படிக்கிறவனைப் பெருமிதமாய்ப் பார்த்து ஸ்பெஷல் ம. கூடப் போட்டுத் தரலாம். பிற மாணவர்களுக்கு முன்னுதாரணம் காட்டலாம்.

கலாவை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த நள்ளிரவிலும் அந்த ஆராய்ச்சிதான். விரிவாக ஒரு கடிதம் எழுதி அதன் மூலமாவது அவளைப் புரிந்து கொள்ளக் கூடும் என்று நினைத்தான்.

மேஜையின் ஒரு புறம் எழுதிக் குவித்த நோட்டுகள். மூன்று செமஸ்டர்களில் நடத்தப்பட்ட வெவ்வேறு பாடங்கள். வகுப்பில் எழுதியது போக அறைக்கு வந்தும் எழுதிப் பார்த்தவை. சரளமாய் கை வைத்த மாத்திரத்தில் அருவி போல கொட்டிய எழுத்துக்கள். ஆனால் கடிதம் மட்டும் நினைத்தபடி எழுத முடியவில்லை. பேனா இறந்தே கிடந்தது. எழுத எடுத்து வைத்த பேப்பரில் எந்தச் சுவடுமின்றி அவன் மனது போல வெறித்திருந்தது.

'பேச வேணாம்.'

'என்ன.'

"பேச வேணாம்.'

ஓர் ஆள் மட்டுமே நிற்கிற அளவு மிகச்சிறிதான டெலிபோன் கூண்டுக்குள் வெளியே காவலாய் அமர்ந்திருக்கிற பூத் கிழவரைத் தவிர வேறு ஆளரவமற்ற இடத்தில் ரிசீவரில் கேட்கிற குரலுக்கு என்ன பதில் தரலாம்?

கலா மிரட்டிப் பேசியதில்லை இதுவரை. குரலில் சிநேகம் அப்பியிருக்கும். சில நேரம் வசதியான கூண்டு கிட்டாத தருணங்களில் நடைபாதை, இறந்த டெலிபோன்களில் பேச்சின் வார்த்தைகள் துல்லியமாய்க் கேட்காமல், இன்னொரு தரம் விசாரித்தால் கூட பொறுமை இழக்காமல் சொல்லுகிறவள். இப்போதும் மிரட்டவில்லை. ஆனால் குரலில் எத்தனைச் சுலபமாய் தொற்றிக் கொண்டு விட்ட அன்னியம். சிநேகமற்றுப் போன மாதிரி. எதிர்வீட்டுப் பெண்மணி வந்து கதவைத் திறந்து அவசர ஃபோனில் பதில் சொன்ன மாதிரி. 'பேச வேணாம்.'

சாத்தியமா? என்ற யோசனையிலேயே நேரம் ஓடியது. பதில் தரவேண்டும் என்கிற அவசரத்தில் படபடப்பு கூடியது. வார்த்தைகள் வசப்படாத திணறலில் உடம்பு நடுங்கியது.

'என்ன திடீர்னு?'

'வச்சிரட்டுமா.'

காத்திராமல் வைத்து விட்டாள். புத்திக்குப் பிறகுதான் புரிந்தது. அவசரமாய் இன்னொரு தரம் டயல் செய்தான். எங்கோ மணி அடித்துக் கொண்டிருந்தது. அழுகிற குழந்தையைப் போல எடுத்து ஆறுதல் படுத்த எவரும் முன்வராத நிலையில்.

கிழவரின் கவனம் வேறெங்கோபோல கூண்டுக்குள் இருப்பவன் மீது படர்ந்ததைப் புரிந்து கொள்ள முடிந்தது. எத்தனை பேரைப் பார்த்திருப்பார். அவர் நோக்கம் எல்லாம் சிவப்பில் ஒளிர்கிற மீட்டர் ரீடிங் அதிகபட்ச தொகையைக் காட்ட வேண்டும். பேசப் பேச அவர் வாழ்க்கையில் சந்தோஷம் கூடும். பேசு...ஏன் பேசுவதை நிறுத்தி விட்டாய்?- பேசு. மானசீக ஜபம்தான் அவருடையது.

இன்னொரு தரம் முயற்சி செய்யலாமா? என்று யோசித்து மனந்தளர்ந்து வெளியில் வந்தான்.

'ஒரு ரூபாய் இருபத்தாறு பைசா.'

இத்தனை நாட்களில் மிகக் குறைவான பில். கலா இல்லாத நேரங்களில் அவள் அப்பாவுடன் கூட இரண்டொரு வார்த்தைகள் பேசிய



பிறகுதான் ஃபோனை வைத்திருக்கிறான். ஏழெட்டு ரூபாய் பில் வரும்வரை.

ஒண்ணரை ரூபாய் மனிதர்களும் பூக் கிழவருக்கு வேண்டியிருக்கிறது. லைனே கிடைக்காமல் போகிறவனைவிட இவன் மேல்.

மூன்று கிலோ மீட்டர் தூரத்தை நடந்தே வந்தான். மனசுக்குள் வழி நெடுக பேசிக் கொண்டு. எந்த மீட்டரும் அளவெடுக்காத தொலைபேசியில். சகாவின் விசாரணைக்கு அரை மனதாய்ப் பதில். பயிற்று அறைக்குள் முடங்கி சகா திரும்புவதற்குள் தூங்கிப் போய் நள்ளிரவில் திடுமென்று விழித்துக் கடிதம் - ஒரு வார்த்தையும் எழுதப்படாமல்.

இப்போதே கிளம்பி ஊருக்குப் போய் விடலாமா? வாட்ச்மேன் அறியாமல் சுவர் ஏறிக் குதித்தாவது. தெளிவற்ற ஆலோசனை களை மனசு வழங்கியது. இன்னொரு தரம் ஃபோன் செய்து.. இந்த நடுநிசியிலா..? அத் தனை பேரும் ஆழ்ந்த உறக்கத்தில். அமைதி யைக் கலைத்து டெலிபோன் மணி. வித்யாவை

அனுப்பி கலாவுடன் பேசச் சொல்லலாமா? என்னவென்று சொல்வது? எப்படிப் புரிந்து கொள்வாள்?

கலாவின் சுபாவத்திற்கு மூன்றாம் மனிதரின் தலையீடு நிச்சயம் எதிர்மறை விளைவைத்தானே தரும். கலாவுக்குப் பிடிக்காது. பிடிக்கும் என்ற பட்டியல் கைவசம் இருந்தது. இத்தனை கால பழக்கத்தில் சேகரித்தது. கலாவுடன் பேசும், பேசாத நேரங்களில் கண் எதிரே பட்டியல் விரிந்து கிடக்கும். புதுப்புது விஷயங்களை அதில் சேர்த்தும், ஏற்கெனவே தவறாய்ச் சேர்த்த விஷயங்களை நீக்கியும், சரி செய்தும் அவனின் ஒரு பகுதி கவனம் செல வழியும்.

'பேசறப்ப முழுசா கவனிக்க மாட்டீங்களா?'

'கவனிக்கிறேனே. நேத்து திடீர்னு மழை பெருசாக் கொட்டினது. வீட்டு வாசல்ல படிக்கட்டு மேல தண்ணி வந்தது. மழைன்னா உனக்கு ரொம்பப் பிடிக்கும். அப்புறம் பார்த்தா ஒரு செடி மழை வேகம் தாங்காம சரிஞ்சு கிடந்தது... நீ தவிச்சுப் போனது.'

முந்தைய நிமிடம் வரை அவள் பேசியதை ரீப்ளே செய்ததும் அவன் மறுபடியும் தன் கருத்தை வலியுறுத்தியதும்.

'நீங்க என்னதான் சமாளிச்சாலும் உங்க முழு கவனம் என் பேச்சுல இல்லை. அதுதான் நிஜம்.'

நிஜம்தான். பேச்சில் இல்லை. உன்மீதுதான். ஆனால் சொல்ல முடியாது. சொல்லத் தோன்றவில்லை. சில விஷயங்களை ஆழ்மனத்தில் பத்திரப்படுத்தத் தோன்றுகிறது. வெகு சிநேகமான மனிதரிடம் கூடப் பகிராமல். சொல்லக் கூடாது என்றில்லை. சொல்லத் தோன்றாமல் இன்னொரு பயமும். வெளிப்படுத்திய மறுநிமிடம் அது தன் சுவாரசியத்தை இழந்து விடுகிறது. மனசுக்குள் புதைந்து கிடக்கிறவரை அதன் வீர்யம் குறைவதில்லை. சொல்வது மட்டுமில்லை. நினைப்பதில் கூட. எந்த ஒரு ஆழ்மனது விஷயத்தையும் பூர்ணமாய் மனசுக்குள் கூட விரித்துப் பார்க்க அனுமதி இல்லை. இலேசாய் ஏதேனும் ஒரு பக்கம் பார்த்துப் பிற பகுதிகளை அனுமானித்து சந்தோஷப்படலாம். மனசுக்குள் எடுத்து முழுசாய்ப் பார்த்தால் கூடப் போச்சு.

இந்த விளையாட்டை கலாவுடன் இருக்கிற, இல்லாத நேரங்களில் எல்லாம் விளையாடுகிறான். அதனால்தான் இப்படி மாட்டிக் கொள்ள நேர்கிறது. அவளுக்கு எதுவும் விளையாட்டில்லை. நூறு சதவீதத் தீவிரம். எதுவானாலும். நேசிப்பைச் சொல்வதானாலும். 'பேசாதே' என்று கட்டளையிட்டாலும்...

எழுந்து விளக்கை அணைத்துவிட்டான். இரவு முழுக்க விழித்திருந்தாலும் ஒருவரி கூட எழுதப் போவதில்லை. என்ன எழுதுவது என்ற தீர்மானமற்று பேனாவைத் திறந்தால் இப்படித்தான். ஏற்கெனவே அச்சிட்ட பாடப்பகுதி போல எழுத அத்தனைச் சுலபமில்லை. தூக்கமும் தடங்கல் செய்யப் போகிறது. ஹாஸ்டல் எதிரே பூத் திறக்க எட்டு மணி ஆகும். அவனுக்கு முன்பே காத்திருக்கிற பிற மாணவர்கள், ஆசிரியர்கள். ஏன் சில சமயம் வார்டன் கூட.

விளக்கு அணைத்துப் படுத்த மறு நிமிடம் தடங்கலே இல்லாமல் ஓர் அற்புதமான கடிதம் மனசில் ஓட ஆரம்பித்தது. 'எழுந்திருக்காதே' என்று யாரோ அன்பாய் எச்சரித்தார்கள். 'கடிதம் முழுவதும் கேள்' வார்த்தைகளில் முழுவதுமாய் அவன் மனத்தைச் சொல்லி... கலாவுக்கு அவன் எழுத நினைத்த கடிதத்தைவிட உசத்தியாய்... நேர்த்தியாய்... சரளமாய்... மனத்தின் பக்கங்கள் சரசரவென விரிந்து... குண்டு குண்டாய்க் கையெழுத்தில்... இதுநாள் வரை யாருமே எழுதியிராத கடிதம். கலாவை முன்னிறுத்தி பேசிக் கொண்டு போன தொனியில்.

காலை பத்து மணிக்கு பூத்தின் கதவு மூடிக் கொண்டு, எதிர்முனையில் கலாவின் குரலுக்காக அவன் காத்திருந்த நேரம்... நள்ளிரவில் எழுதிய கடிதம் ஒரு வார்த்தை கூட நினைவில் இல்லை.

ஆனால் எதிர்முனையில் மணி அடிப்பது நின்று குரல் கேட்டது. பிரியமாய்... இனிமையாய்... முறித்துப் போடாத விதமாய்... எழுதப்படாத கடிதம் அதற்கான நபரிடம் சேர்ந்து தன் வினையை நிகழ்த்தி விட்டதைப் போல.

"என்ன ஸ்ரீ?"

சுருக்கமாய் அவன் பெயரை அவளுக்கேயான சுவாதீனத்தில் சொன்னபோது, நேற்று ஏன் அப்படிப் பேசினாள்? என்று கேட்கத் தோன்றவில்லை அவனுக்கு. ○



''உலகின் மிகச்சிறந்த மற்றும் மிக அழகான பொருள்களைக் காண முடியாது. தொட்டுப்பார்க்கவும் இயலாது. அவற்றை இதயத்தினால் தான் உணரமுடியும்.''

— ஹெலன் கெல்லர்

"காகம், ஒன்று இடது பக்கமாகத் தலைசாய்த்துப் பார்க்கும். இல்லையென்றால், வலதுபக்கமாகத் தலைசாய்த்துப் பார்க்கும். நேராகப் பார்க்கத் தெரியாத காகம் போல இல்லாமல், நேரான நேர்மையான கண்ணோட்டத்தில் சான்றோர்கள் இருநூறு பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களைப்பற்றி எழுதியிருக்கிறார் முக்தா சீனிவாசன்" என்று பாராட்டினார் ஸ்ரீ ஜெயேந்திரர்.

இடம் : மியூஸிக் அகாடமி மினி ஹால். நிகழ்ச்சி : 'முக்தாவின், 'இணையற்ற சாதனையாளர்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா. புத்தகத்தினை ஸ்ரீ ஜெயேந்திரர் வெளியிட, முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டவர் கமல்ஹாசன். தலைமை : த.மா.கா. தலைவரான ஜி.கே.வாசன்.

புத்தகத்தைத் திறனாய்வு செய்து பேசினார் தமிழருவி மணியன். குற்றால அருவியில் கொட்டும் நீர் போன்ற நடை. புத்தகத்தில் கண்ட ஓரிரு குறைகளையும் விமர்சனப் பார்வையில் சுட்டிக் காட்ட அவர் தவறவில்லை.

மணியன் சுட்டிக்காட்டிய தவறுகளை ஏற்று, "நான் எழுதியிருப்பதுதான் சரி என்று வாதம் புரிய விரும்பவில்லை. எனக்குக் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு நான் எழுதியுள்ளேன். தவறு இருப்பின் திருத்திக் கொள்கிறேன்" என்று தம் ஏற்புரையில் குறிப்பிட்டது முக்தாவின் மெச்



பொன்னியின் செல்வன்?

சூரிடிக்கு அடையாளம்.

நடிகை லட்சுமி சொன்ன விஷயம்.

"நான் ஒரு தடவை, முக்தாவுடன் ஷூட்டிங்கில் பேசிக் கொண்டிருந்தபோது, ஆர்ட் பிலிம் பற்றியெல்லாம் பேசிவிட்டு, "சார்! சினிமாவில் இருக்கிற நீங்கள் ஏதாவது சாதிக்க வேண்டாமா? என்று கேட்டேன். 'உன்னை வைத்து எடுக்கிற இந்தப் படத்தை முடித்து ரிலீஸ் பண்ணினாலே பெரிய சாதனைதான்' என்றார் நகைச்சுவையாக. இன்று இருநூறு சாதனையாளர்கள் பற்றி சிறந்த முறையில் புத்தகம் எழுதியுள்ள முக்தா சீனிவாசனை இருநூற்று ஒன்றாவது சாதனையாளர் என்றால் மிகையில்லை."

நிகழ்ச்சியில் கமல்ஹாசனுக்குக் கொடுக்கப்பட்ட பட்ட ங்களில் சில, நவரச திலகம், கலைச் செம்மல். ஜி.கே.வாசனுக்குத் தரப்பட்ட ஒரு பட்டம், 'பொன்னியின் செல்வன்!'

முக்தா எழுதியுள்ள இருபத்தியேழாவது புத்தகம் இது. எல்லா புத்தகங்களையும் வானதி பதிப்பகம்தான் வெளியிட்டுள்ளது. இணையற்ற சாதனையாளர்கள் புத்தகத்தின் இரண்டு பாகங்கள் இந்த நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டன. மூன்றாவது பாகம் எழுத ஆரம்பித்துவிட்டார் முக்தா.

இந்த சாதனையாளர்கள் பட்டியலில் வாரியாரும் இருக்கிறார். பெரியாரும் இருக்கிறார். எம்.ஆர்.ராதாவும் இருக்கிறார். ரமண மகரிஷியும் இருக்கிறார். இடம் பெற்றுள்ளவர்களில் ஒருவரும் இப்போது உயிருடனில்லை. ஆனால், ஒரு இடத்திலும், 'மரணமடைந்தார்' என்ற வார்த்தை இடம் பெறவில்லை. அதற்குப் பதிலாக, உலக நீக்கம் ஏற்றார். இந்த மண்ணின் பிணைப்பைத் துறந்தார் போன்ற வார்த்தைகளே பயன்படுத்தப்பட்டுள்ளன.

'ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று சாதனையாக அமையும்' என்ற பீட்டர் அல்போன்ஸ், 'தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி அமைந்தால் அது ஜி.கே.வாசனின் சாதனை' என்று குறிப்பிட்ட போது, ஒரே கைத்தட்டல்தான்!

தொகுப்பு : **எஸ்.சந்திரமௌலி**

படங்கள் : **சௌரா**

நாமக்கல், திருச்செங்கோடு மற்றும் ஈரோடு மாவட்டத்தின் சில பகுதிகள் வானம் பார்த்து விவசாயம் செய்யும் பூமி. தொடர்ந்து இரண்டு, மூன்று வருடங்கள் மழை பொய்த்துப் போகும்போது, விவசாயிகள் படும் அவதி சொல்லிமாளாது. அந்த நிலையில் குடும்பம், குடும்பமாக, பஞ்சம் பிழைக்க பெங்களூர், மைசூர் என்று போய் விடுவார்கள் விவசாயிகள். ஆனால் 1970களின் துவக்கத்தில் கொஞ்சம் வசதிமிக்க விவசாயிகள் மாற்றுத் தொழிலாக வீரிய இனக்கோழி பண்ணைகளைத் துவக்கினார்கள். அதன் மூலம் நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது.





கொல்லைப்புறத்தில் மேய வேண்டிய கோழிகளை ஒரே இடத்தில் அடைத்து வளர்ப்பது சாத்தியமா? முடியுமா? என்று சிலருக்கு வேடிக்கையாகவும், பயமாகவும் இருந்தது. கோழிப் பண்ணைத் தொழில் தென்பட்ட காலத்தில் மொடக்குறிச்சிக்கு அருகில் இருந்த சாமிநாதபுரம் பகுதியைச் சேர்ந்த ஓர் இளைஞருக்கு மட்டும் அந்தத் தொழில் மிகவும் பிரகாசமாகத் தெரிந்தது.



கோழித் தீவனம் தயாரிக்கும் பெரிய நிறுவனங்களின் விற்பனையாளராக ஏஜென்ஸி எடுத்தார் அவர். அந்தக் கால கட்டத்தில் கோழிப் பண்ணையாளர்கள் பல சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. முக்கியமாக, மார்க்கெட்டிங் சவாலாக இருந்தது. பக்கத்திலுள்ள டவுன்களான ஈரோடு மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களுக்கு முட்டைகளை எடுத்துச் செல்லப் போக்குவரத்துப் பிரச்னை ஏற்படவே சரக்கு தேங்கியது. அது தவிர கோழிகளுக்குத் தடுப்பூசி, நோய்க்கு மருந்து என்று கண்காணிக்க மருத்துவர்களை அழைத்து வருவதிலும் சிரமம். முட்டை அழுகும் பொருளானதால் நஷ்டம்.



பண்ணையாளர்களின் இந்தப் பிரச்னை



பிரமிக்க வைக்கிறார்

பிழைக்கத் தெரியாத மனிதர்?

களைக் கண்ட அந்த இளைஞர், உற்பத்தியான முட்டைகளை உடனடியாக நாமக்கல், ஈரோடு மார்க்கெட்டுகளுக்குத் தம் சொந்த வேன்கள் மூலம் கொண்டு வர வசதி செய்து கொடுத்தார். கால்நடை மருத்துவர்களுக்கும் ஏற்பாடு செய்தார். வங்கிகளைத் தொடர்பு கொண்டு விவசாயிகளுக்குக் கடன் வாங்கிக் கொடுத்து மேலும் புதிய கோழிப் பண்ணைகள் உருவாக உதவி புரிந்தார்.

கோழித் தீவனங்களைக் கொடுத்து அதன் மதிப்புக்கு முட்டைகளைப் பெற்றுக் கொண்டார் அந்த இளைஞர். முட்டைகளை மார்க்கெட்டிங் செய்வது கைதேர்ந்த கலையாயிற்று அவருக்கு. பண்ணையாளர்களுக்கு இது மிகப் பெரிய உதவியாகத் தெரிந்தது. மார்க்கெட்டிங் பிரச்னை தீர்ந்ததால் உற்பத்தியைப் பெருக்கத் துவங்கினார்கள். இளைஞரும் அதே வேகத்தோடு முட்டைகளை மார்க்கெட்டிங் செய்து தம் நிதி நிலையை உயர்த்திக் கொண்டார். பத்து வருடங்களில், சொந்தமாகவே. கோழித் தீவனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் துவங்கிவிட்டார் அவர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

தமது கடின உழைப்பு, வியாபார யுக்தி மூலம் உச்சாணிக் கொம்பில் நிறுவனத்தைக் கொண்டு வைத்திருக்கும் அந்த மனிதர் எஸ்.கே.எம். மயிலானந்தன்.

ஈரோட்டிலிருந்து சுமார் பத்து கி.மீ. தொலைவில் மொடக்குறிச்சிக்குப் பக்கத்தில் உள்ள சாமிநாதபுரம்தான் மயிலானந்தன் பிறந்த ஊர். அப்பா கிருஷ்ணசாமி கவுண்டர். ஒரே பையன். சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்களில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 19 பேர் சிறை சென்ற தியாகிகளாக உருவானார்கள். கிராமத்தில் வீட்டுக்கு வீடு சர்க்கா போட்டு கதர் நூல் நெய்வார்கள். அந்த நூலை காதி நிலையத்தில் போட்டு காசும், பஞ்சும் வாங்கி வருவதில் சிறுவனுக்கு ஏக சந்தோஷம். அவன் பள்ளியிறுதி வகுப்பு படிக்கும்போது, தமிழ்நாடெங்கும் இந்தி எதிர்ப்பு 'தீ' பள்ளிகளையும், கல்லூரிகளையும் பற்றிக் கொண்டது. மயிலானந்தன் ஆர்வமுடன் கலந்து கொண்டு ஊர்வலம், கூட்டம் என்று பங்கு கொண்டான். சில இடங்களில் துப்பாக்கிச் சூடும் நடந்தது. அப்பா கிருஷ்ணசாமி கவுண்டர் பயந்து போனார். 'இவனைக் கல்லூரியில் படிக்க வைத்தால், அங்கு, போராட்டம் எதிலாவது கலந்து கொண்டு பிரச்னையில் மாட்டிக் கொண்டால் என்ன ஆவது? மகனுக்கு எதாவது ஆகிவிட்டால்...'

என்று பயந்து "தம்பி, நீ எஸ்எஸ்எல்சி., பாஸ் செய்தது போதும், படிப்பை நிறுத்தி விடு. வியாபாரத் துறையில் இறங்கிவிடு" என்று மொடக்குறிச்சியில் சிறிய கடையைத் துவக்கிக் கொடுத்தார் கிருஷ்ணசாமி கவுண்டர்.

ஸ்டேஷனரி, மளிகை சாமான்கள் விற்பனையுடன், உரம், பூச்சி மருந்து வகைகள் ஆகியவற்றையும் ஏஜென்ஸி எடுத்து விற்கத் துவங்கினார் மயிலானந்தன். அந்த சிறு வியாபாரத்திலும், நாணயத்தைக் கைவிடாமல் புதுமைகளைப் புகுத்தினார். உரமூட்டைகளை வண்டியில் எடுத்துச் சென்று சொந்த செலவில் விவசாயிகளுக்குக் கொடுப்பது. அதிக அளவில் வாங்குபவர்களுக்குச் சலுகை என்ற பல வழிமுறைகளைக் கையாண்டார். நான்கைந்து வருடங்களில் பணம் தாராளமாகவே புரளத் துவங்கியது. அந்தக் கால கட்டத்தில்தான் நாமக்கல் வட்டாரத்தில் கோழிப்பண்ணைகள் உருவாகத் துவங்கின. மாறிவரும் சூழலை ஆதாரமாக்கிக் கொண்டு கோழித் தீவன விற்பனை, பின்னர் உற்பத்தி என்று சக்கைபோடு போட்டதைத்தான் முதல் பாராவில் பார்த்தோம்.



• கோழிப்பண்ணை

மயிலானந்தனைச் சிறு வயதிலிருந்தே மிகவும் கவர்ந்தவர் சுவாமி விவேகானந்தர். "சமுதாயத்தில் யாரும் தாழ்ந்தவர்கள் அல்ல, அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களே. ஒடுங்கியவர்கள் அல்ல. ஒடுக்கப்பட்டவர்களே, சேரிக்குப் போய் அங்கிருக்கும் பெரியவர்களுக்கும், சிறுவர்களுக்கும் சேவை செய்" என்று அவரது சிந்தனை மயிலானந்தனுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. சாமிநாதபுரம் ஊரை ஒட்டியிருந்த சேரிப் பகுதி மிகவும் சுகாதாரமற்ற முறையில் இருந்தது. தெரு முழுக்க சாக்கடைகள். நோயால் வாட்டப்படும் நோஞ்சான் குழந்தைகள். முதல் வேலையாக அதை ஒழுங்கு செய்யும் பணியில் இறங்கினார். "எதற்கெடுத்தாலும், அரசாங்கத்தைக் குறை கூறிக் கொண்டிருக்காமல், உன்னால் முடிந்ததை முதலில் செய்ய வேண்டும்" என்று சுவாமி தயானந்த சரஸ்வதி சொன்னது மயிலானந்தனுக்கு ஏற்கெனவே மனத்தில் பதிந்து விட்ட ஒன்று. கழிப்பறைகள் கட்டும் திட்டம் அரசின் வேலைத் திட்டத்தில் இருப்பதை அறிந்து, தாமும் இணைந்து சேரி வீடுகளுக்குக் கழிப்பறைகள் கட்ட ஏற்பாடு செய்தார். அடுத்து சேரிவாசிகளுக்கு 135 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. சாலைகள் போடப்பட்டு, நன்கு பராமரிக்கப்பட்டன. மருத்துவ வசதி செய்து தரப்பட்டது. சேரி ஊரானது.

சேரிப் பகுதியில் ஆண்களும், பெண்களும் காலையில் வயல் வேலைக்குப் போய் விடுவார்கள். ஆனால் வீட்டிலிருக்கும் முதியவர்களுக்குச் சாப்பிட எதுவும் செய்து வைக்காமல் போய் விடுவார்கள். வேலைக்குச் சென்றவர்கள் இரவில் வந்து சமையல் செய்து போட்டால்தான் முதியவர்களுக்குச் சாப்பாடு. இந்த நிலை மயிலானந்தனை உருக்கிவிட்டது. அந்த முதியவர்களிடம் நன்றாக இருந்த வரையில் உழைப்பைப் பெற்றுக் கொண்டு பயன்பெற்ற குடும்பம், வயதானபின் ஒதுக்கி, விடுவதில் என்ன நியாயம் இருக்கிறது? என்று சிந்திக்கத் துவங்கினார். விளைவு! இன்று எஸ்.கே.எம். அறக்கட்டளை மூலம் நடத்தப்பட்டு வரும் சேவை மையத்தில் உழைக்க உடல் சக்தியற்ற 225 குடும்பங்களைச் சேர்ந்த முதியவர்களுக்கு மூன்று வேளை உணவும், உடை மற்றும் அனைத்து வசதிகளும் செய்து தரப்படுகின்றன. சாமிநாதபுரத்தில் தினமும் கல்யாணம்தான். நவீன சமையலறை, பளிச்சிடும் சாப்பாட்டு ஹால் என்று அசத்துகிறார்கள். ஹால் முழுதும் மயிலானந்தனை வாழ்த்தும் நெஞ்சங்கள். இது தவிர 110 குழந்தைகளுக்குத் தினசரி மாலையில் சத்துமிக்க சிற்றுண்டி கொடுக்கப்பட்டு மாலை நேர பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகிறன. அன்னை கஸ்தூரி பாய் பெண்கள் முன்னேற்றச்

சங்கம் என்று உருவாக்கி, அதன் மூலம் மளிகைக்கடை, நியாய விலைக் கடை ஆகியவற்றையும் ஆரம்பித்து பெண்களுக்கு வருமானம் ஈட்ட வழி செய்திருக்கிறது எஸ்.கே.எம். சேவை மையம். ஈரோடு மாவட்டத்திலுள்ள 12 ஆரம்ப பள்ளிகளில் பணிபுரியும் 2500 ஏழை பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச பாட, நோட்டுப் புத்தகங்களையும் வழங்கி வருகிறது இந்த மையம். இப்படிப்பட்ட பணிகள் ஒரு நீண்ட பட்டியலாக இருக்கின்றன.

ஆழியாரில் மடம் வைத்து ஆன்மிகப் பணியாற்றிவரும் சுவாமி வேதாத்திரி மகரிஷியின் தொடர்பு மயிலானந்தனுக்கு ஏற்பட்டது அவரது வாழ்வில் ஒரு பெரிய திருப்பு முனை. சுவாமிஜியின் கோஷமான "வாழ்க வளமுடன்" என்பதுதான் மயிலானந்தனின் இன்றைய மூச்சு. ஆண்டாண்டு காலமாக வழிமுறையில் இருந்து வரும் சித்த மருத்துவம் மனித குலத்திற்கு உலக அளவில் பயன்பட வேண்டுமென்பது மகரிஷியின் விருப்பம். அவரால் துவக்கப்பட்ட உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைவராக இருக்கும் மயிலானந்தன், 1987ல் சிறிய அளவில் ஈரோட்டில் சித்த மருத்துவ மனையைத் துவக்கினார். அந்த விதை இன்று ஆலமரமாக மாறி சாமிநாதபுரத்தில் சித்த மருந்துகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை என்று வியாபித்து இருக்கிறது. சித்தர்கள் சொல்லிவிட்டுப் போன அதே வழியில் நவீன வசதிகளைக் கொண்டு, ஆனால் பாரம்பரியமான முறையில் 216 சித்த மருந்துகள் அங்கு தயாரிக்கப்படுகின்றன. சலுகை விலையில் சித்த மருந்துகள் விற்கப்பட்டாலும், உயர்ந்த தரத்தில் மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.



காதலி புது பழமொழி!

வெங்கட், புகைப்படக்காரர்

காதல் வந்தா காசு போகும்!

ஈரோடு வட்டாரத்தில் சிலர் மயிலானந்தனை "பிழைக்கத் தெரியாத மனிதர்" என்று சொல்வதுண்டு. ஏன் தெரியுமா? 199496 வருடங்களில் ஒழுங்காக கணக்கை ஒப்படைத்து தனிநபர் வருமானப் பிரிவில் தமிழகத்திலேயே அதிக அளவு வருமான வரி செலுத்தி 'சிறந்த வரி கட்டுபவர்' என்ற விருதை வாங்கியதால்தான்! 1977ல் துவங்கி தமது சாதனைகளுக்காக, வருடம் ஒரு விருதை அரசிடமும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் வாங்கிக் கொண்டிருக்கிறார். அவர் பங்கு கொண்டிருக்கும் எந்த அமைப்புகளுக்கும், சமூகப் பணிகளுக்கும் வெளியாரிடம் நன்கொடை சல்லி காசு வாங்குவதில்லை. அவரது நிறுவனங்களில் கிடைக்கும் லாபம்தான் அந்த வகையில் செலவாகிறது.

"சமுதாயத்திலிருந்து உழைப்பை எடுத்துக் கொண்டுதான் நாம் நமது தொழிலை அபிவிருத்தி செய்கிறோம். அந்த உழைப்புக்குக் நாம் சம்பளம் கொடுத்தால்கூட, நாம் சமுதாயத்துக்குச் செலுத்த வேண்டிய பாக்கி நிறையவே இருக்கிறது. என் சமூகப் பணிகளுக்கான அடிப்படை இதுவே'' என்கிறார் மயிலானந்தன். தம்முடைய தொழில்களுக்கு வாரிசுகளாக, இரு மகன்கள் இருக்க, பெரும்பாலான நேரத்தை சமூக, ஆன்மிகப் பணிகளுக்குச் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்.

கடந்து வந்த பாதையைப் பற்றி என்ன நினைக்கிறார் மயிலானந்தன்? ''எந்தத் தொழிலிலும் போட்டி கண்டிப்பாகத் தேவை. ஆனால் நேர்மை, உண்மை ஆகியவற்றை எந்த கட்டத்திலும் கைவிடக் கூடாது. ஏற்ற இறக்கம் வரத்தான் செய்யும். என் தொழிலில் பன்னாட்டு நிறுவனங்களுடன் நான் போட்டி போட வேண்டிய சூழ்நிலை. ஆனால் எனக்கென்று தனி மார்க்கெட்டை உருவாக்க என்னால் முடிந்ததே ஆயிரம் ஊழியர்கள் எஸ்.கே.எம். குழுமத்தில் இன்று பணியாற்றுகிறார்கள் என்றால் அது உழைப்பு, நேர்மை என்ற சிமெண்ட் + மணல் சேர்த்துக் கட்டப்பட்டதால்தான்'' என்று சொல்லி ரிலாக்ஸாகிறார் மயிலானந்தன்.

எதிர்கால லட்சியம்தான் என்ன?

"வாழ்க வளமுடன் என்று நாமும் வாழ வேண்டும். மற்றவர்களும் வளமாக வாழ உதவி செய்ய வேண்டும்."

- ப்ரியன்

படங்கள் : ராஜன்

காஞ்சனா தாமோதரன்

அம்மா, அப்பா, விது.

அம்மா. அழகி திறமைசாலி. கலைத் திறனும் ரசனையும் உள்ளவள். திறமையால், பண்பால் யாரையும் ஈர்க்கக் கூடியவள். விதுவின் சிநேகிதிகளின், ஆசிரியைகளின் மதிப்பைப் பெற்றவள். அவள்போல் தான் இல்லையே என்று விதுவை ஏங்கச் செய்தவள். தேவதை.

அம்மா, வாழ்க்கைத்துணை என்று சமூக ஒப்பந்தம் செய்துகொண்ட அப்பாவிடம், அதற்கேற்ற உண்மையை எதிர்பார்த்து ஏமாந்தவள். அதற்கு ஈடுகட்டவோ என்னவோ, விதுவின் மேல் அதீத எதிர்பார்ப்புகளை வைத்து அழுத்தியவள். அறையின் எதிர்ப் பக்கத்திலிருந்து கண்களை உருட்டுவதிலிருந்து, விதுவின் வேலையைப் பிடுங்கித் தானே முடிப்பது வரை, வார்த்தைகள் இல்லாமலேயே குழந்தை விதுவைச் சிறு புழுவாக உணரச் செய்தவள். அவளிடமிருந்து குழந்தை விது விலகிப் போகக் காரணமாக இருந்தவள். சூனியக்காரி.

அம்மா: தேவதை. அம்மா: சூனியக்காரி. தேவதையிடம் நெருங்க ஆசை. சூனியக்காரியை விட்டு ஓட ஆசை. இரண்டுக்கும் நடுப்பட்ட மௌனமான இழுபறிதான் நடைமுறையில் இளம் விதுவுக்குச் சாத்தியமானது.

அப்பா. அம்மாவுக்கு நல்ல கணவனாய்த் தெரிந்தவர். அம்மா சொன்னதை இன்னும் நம்ப முடியவில்லை. அப்பாவா? விது 'கிண்டர்கார்ட்டனு'க்குப் போன முதல்நாள், அவளை விட்டுப் போக மனமில்லாமல், வகுப்பறை சன்னல் வழியாக இரண்டு சாக்கலேட்டுகளை நீட்டியபடி, கண்ணில் நீர் துளித்து நின்ற அப்பா. அந்த அப்பாவா?

அம்மா. அப்பா, விது. மௌனத் தொலைக் காட்சியில் ஒரு குடும்ப நாடகம்.

எல்லாமாய்ச் சேர்ந்து, சிறு வயதிலேயே அவள் மனம் வறண்டு போனதோ, சிறு வயதில் அரவணைப்பு இல்லாதவர்கள் எல்லாருமா அவளைப் போல் மனவறட்சியும், தனிமையும் உள்ளவர்களாய் மாறிப் போகிறார்கள்?

"நீ எதையும் அளவுக்கு அதிகமாக அலசுகிறாய், விது." ரஞ்சி சொல்வது ஞாபகம் வந்தது. சரி, வேண்டாம். அம்மா வாசிக்கக் கொடுத்திருந்த புத்தகத்தைப் புரட்டினாள். மலையாளக் கவிதாயினி கமலாதாஸின் ஆங்கில மொழி பெயர்ப்புப் புத்தகம். சில வரிகள் கண்ணில் பதிந்தன:



"அர்த்தமுள்ள ஒரே உண்மை...
இந்த அன்பு அனைத்தும்
என்னுடையது...
பிறர்க்கு வழங்க."

"இந்த அன்பு அனைத்தும் என்னுடையது... பிறர்க்கு வழங்க.' அன்பும் காதலும் அவனிடம் போதிய அளவு இல்லையோ... ரமேஷுக்கும் குழந்தைகளுக்கும் வழங்க.

20

அவன் சிறுமியாய் இருக்கும்போது, அவளுக்கு வழங்கப் போதிய அன்பு அவள் அப்பா அம்மாவிடமும் நிச்சயம் இருக்கவில்லை; இருந்ததாய் அவளுக்குப் புரியவில்லை.

'கடவுளே, நானும் என் அம்மா அப்பா மாதிரி ஆகி விடக்கூடாது.' ஆன்மாவின் ஆழங்களில் ஒரு மெல்லிய முனகல்.

விது புத்தகத்தை மடி

இக்கரையில்



மேல் கவிழ்த்துப் போட்டு, அசையாமல் இருந்தாள். சிறிது நேரம் கழித்து, உட்கார்ந்திருந்த தோட்டத்து ஊஞ்சலை மெல்ல ஆட்டினாள். கழுத்தைச் சுற்றிய துப்பட்டா முதுகுப் புறத்தில் மிதந்து அலைவதை உணர முடிந்தது. தோட்டத்தில் இப்போதே வசந்த காலக் காற்று. சிவப்பும், மஞ்சளுமாய்க் குவிர்ந்த தீப்பொறி பூத்திருக்கும் குல்மோஹர், அமல்த்தாஸ் மரங்கள்.

திருமணமான புதிதில், ரமேஷுடன் அமெரிக்க பண்ணை வீட்டில் இருந்தது ஞாபகத்துக்கு வந்தது. இங்கே குல்மோஹர், அமல்த்தாஸ்... அங்கே டூலிப்ஸ், பாப்பி மலர்கள் - அதே இளவசந்தம். இலேசாக பனி விழும் காற்று! காதல் சொக்குப்பொடி போட்டிருந்த நாட்கள். சாம்பிராணி புகைக்குள் கலைந்துவிடும் தேவதை போல, தன்னைப் பொத்திப் பொத்தி காதலித்த ரமேஷின் ஆசை முகம் நினைவுக்கு வந்தது.

மனம் கொஞ்சம் இலேசாகி யிருந்தது. தெளிவாய் நினைத்துப் பார்க்க முடிந்தது. அருணா, அம்பிகாவிடம்கூட ஒரு மலர்ச்சி. பாட்டி, ராம்சந்த், சக்குபாய்— வீட்டுக்குள்ளேயே விளையாடவும், கதை சொல்

லவும் ஒரு கூட்டம். இன்னும் கூட்டம் வேண்டு மென்றால், போவதற்கு இன்னும் நிறைய இடங் கள். குழந்தைகளிடம் ஒரு விடுதலை உணர்வு.

அருணா இன்னும் அவனிடம் ஒழுங் காகப் பேசுவதில்லை. பேச ஆரம்பிப்பாள். பிறகு, ஏதோ நினைவுக்கு வந்தவளாய் நிறுத்தி விடுவாள். ஆனாலும், முகத்தில் ஓர் உயிர்ப்பு.

புகுந்த நாடு தொலைவில் நிழலாய் மங்கி விட்டிருந்தது. தொலைக்காட்சிச் செய்தி களைப் பார்க்கும்போது, 'அங்கேதான் நாம் வாழ்கிறோம்' என்று சிறு அதிர்வு. குழந்தை களை ரமேஷ் தொலைபேசியில் கூப்பிடும் போதும், மின் அஞ்சல் அனுப்பும்போதும் தான் அந்த நாட்டின் நிழலுக்குக் கொஞ்சம் உயிர் வரும். இங்கு வந்த பின் அவள் ரமே ஷிடம் பேசவில்லை. பேச வேண்டுமென்று ரமேஷ் கேட்கவில்லை.

பக்கத்தில் கிடந்த 'கார்ட்லெஸ்' தொலை பேசி கூப்பிட்டது.

''ஹாய், விது! எப்படி இருக்கே?''

''ஹாய் ரமேஷ்! அருணாவும் அம்பிகாவும் அம்மாவோட வெளியே போயிருக் காங்க. அங்கே இப்போ ராத்திரி பன்னிரண்டு மணி இருக் குமே! இன்னும்...'' 'தூங்கவில் லையா?' என்று வந்ததை வெட்டினாள். ''...இன்னும் குளிரும் பனியுமா?''

''இந்த வருஷம் அவசர வசந் தம்.''

''இங்கே கூடத்தான். குல்மோஹரும் அமல்த்தாஸும் அப்படிப் பூத்துக் குலுங்குது...''

''தெரியும்...''

''எப்படித் தெரி...'' நிமிர்ந்து பார்த் தாள்.

''ஹல்லோ விது...'' செல்ஃபோனை அணைத்துவிட்டு நேரிலேயே சொன்னான் ரமேஷ்!

''நம்ம ஊர் ரோஜா குட்டியூண்டு இருந் தாலும், அதுக்குத் தனி மணம், இல்லை, ரமேஷ்?'' ரமேஷ் மௌனமாய் ஆமோதித் தான். தோட்டத்தைச் சுற்றி நடக்கும்போது எதிர்ப்பட்ட சக்குபாய் இருவரையும் வினோ தமாய்ப் பார்த்தாள். தேநீர் கொண்டு வருவ தாகச் சொல்லி விட்டு அவசரமாக நகர்ந் தாள்.

நாய்க்குட்டி, யு.எஸ். பொருளாதாரம், அவன் வேலை எல்லாவற்றையும் பற்றிக் குசலம் விசாரித்தாயிற்று. இனி என்ன பேசு வது. சங்கடமான மௌனம். ''ரமேஷ்...'' 'விது...'' ஒரே நேரத்தில் இருவரும் பேசத் தொடங்கவும் சிரிப்பு. இறுக்கம் கொஞ்சம் தளர்ந்தது.

''நீயே சொல்லு, விது.''

''என்னை வழியனுப்ப நீங்க ஏர்போர்ட் டுக்கு வரலை.'' இதுதானா வாயில் வர வேண் டும். சரியான அசட்டுத்தனம். ''அருணாவும் அம்பிகாவும் உங்களைத் தேடினாங்க.'' அவசரமாக இதைச் சேர்த்துக்கொண்டாள்.

''திடீர்னு என்ன இந்தப் பக்கம், ரமேஷ்?'' தேடி வர மாட்டானா என்று அவள் நினைத் ததும், அவன் வந்ததில் அவளுக்கு ஆச்சரி யமே இல்லாததும் அவனுக்குத் தெரிய அவசியமில்லை.



ரமேஷின் முகத்தில் சிறு புன்னகை. ''நான் வரு வேன்னு நீ எதிர்பார்க்கலியா, விது?''

அவள் சிரித்தாள். ''பதில் தெரிஞ்ச கேள்விகள், ரமேஷ்.''

''பதில் புரியாத கேள்வி ஒண்ணு கேட் கட்டுமா? ஏன் இந்த டிவோர்ஸ், விது?''

விது மௌனமாய் இருந்தாள். இவனிடம் எல்லாவற்றையும் சொல்லி விடலாமா? அதில் அப்பா அம்மா அந்தரங்கமும் சேர்ந் திருக்கிறதே. வேண்டாம்.

''ரமேஷ், அது ஒரு குழப்பமான கதை. டிவோர்ஸுக்கான காரணங்கள்ளே உங்க பங்கு ரொம்ப ரொம்பச் சின்னது. போதுமா? உங்க மனசாட்சிக்குத் திருப்திதானா?''

''விது, நான் என் மனசாட்சியைச் சமா தானப்படுத்துறதுக்காக இங்கே வரலை.''

''ரமேஷ், பிரச்னையோட ஆணிவேர் என் சின்ன வயசில்... என் அப்பா - அம்மா பத் தினது. பேச வேண்டாமே.''

''சரி, விது.''

''நெருங்கணும்னு ஆசை. கிட்டே வந்ததும் விலகணும், விலக்கணும்னு வேகம். எனக்கு

வெளியே உள்ள உலகம் முழுக்க அந்நியம்... இத்தனை வருஷமா, நீங்ககூட ஒரு தரம் கேட்டீங்களே, 'உன்னைத் தவிர வேற எதையாவது நினைக்க முடியுமா'ன்னு. உண்மைதான்... என் உளறல் புரியுதா, ரமேஷ்?''

''புரியுது விது. சொல்லு.''

''சின்ன வயசிலேர்ந்து எனக்குள்ளே குமுறிக்கிட்டே இருந்த கசப்பும் கோபமும்... பழகாத யு.எஸ். லைஃப் ஸ்டைலும்... வேலைகள் பாழாகி... உங்க மேல் பாய்ஞ்சு... குழந்தைகள் நசுங்கி... நீங்க ஆளே மாறிப்போய்... கடைசியில், நான் தள்ளிப் போறதுதான நம்ம எல்லாருக்கும் நல்லதுன்னு பட்டது, ரமேஷ்.''

''தியாகமா?''

''யதார்த்தம்.''

மௌனம்.

''என்.ஐ.ஐ.டி 'ஃபைனல் இயர்'லே, எங்க 'மார்டி க்ரா' கலாசார விழாவுக்கு வந்திருந்தியே, விது. ஜே.என்.யூ. தரப்பா பட்டிமன்றத்திலே என்ன பேசினே அப்போ? 'எல்லா உறவுகளுக்கும் அடிப்படையே நட்புதான்'னு...''

''நான் ஒரு சராசரிப் போலிப் பேச்சாளர், ரமேஷ். அப்போ எனக்கு ஒரு ஃப்ரெண்ட் கூடக் கிடையாது; அப்பா, அம்மாகிட்டே பேச்சுவார்த்தையே கிடையாது...''

ரமேஷ் அவள் கண்ணுக்குள் உற்றுப் பார்த்தான். குரல் கனிந்தது. ''நம்ம அருணாவைப் பார்க்கும்போது, நீ சின்ன வயசிலே எப்படி இருந்திருப்பேன்னு எனக்குக் கொஞ்சம் புரியுது, விது. இப்படியே இருக்கிறது ஆரோக்கியமானது இல்லை. எங்கிட்டே பேச இஷ்டம் இல்லைன்னா, ஒரு நல்ல 'கௌன்சலர்'கிட்டே பேசறியா? மனசுக்கு நிம்மதியா இருக்கும்...''

''பேசலாம். இங்கே வந்தப்பறம், அம்மாகிட்டே பேசினப்புறம் கொஞ்சம் தெளிவு, ரமேஷ். இத்தனை வருஷமா ஆமை மாதிரி எனக்குள்ளேயே முடங்கிப் போய்...''

''இனியாவது ஆமை ஓட்டுக்கு வெளியே வர இஷ்டமா, விது?''

இவ்வளவு நேரமாய் உள்ளுக்குள் குறுகுறுத்துக் கொண்டிருந்த கேள்வியைக் கேட்டாள். ''ரமேஷ், அம்மா உங்களுக்கு எழுதினாளா?''

''ஈ-மெயில். 'நிதானமாப் பேசி எடுத்த முடிவா அல்லது உணர்ச்சி வசத்திலேயா'ன்னு கேட்டு.''

''ஹ்ம்ம்... அம்மா மட்டும்தானா? கூட்டணியா?''

''டாக்டர் ரமேஷ், உங்க அந்தரங்க விஷயத்தில் தலையிடறதுக்கு மன்னிக்கணும்'னு தொடங்கி ரஞ்சி ரொம்ப நேரம் பேசினாங்க. குழந்தைகள் பத்தி ராஜி...''

''இவங்க இல்லேன்னா, நீங்களாவே என்னைப் பார்க்க டெல்லிக்கு வந்திருக்க மாட்டீங்க?''

''இவ்வளவு சீக்கிரமா வந்திருக்க மாட்டேன்.''

தோட்டத்தை முழு வட்டம் அடித்தாயிற்று. மீண்டும் ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டாள்.

'விது, கசப்பும் வெறுப்பும் அடிபட்ட 'ஈகோ'வுமா நான் காலத்தைக் கழிக்கலாம். அல்லது வாழ்க்கையைப் புதுசாத் திரும்பவும் தொடங்கலாம். அந்தப் புது வாழ்க்கையிலே



''காதல் என்பது ஒரு கீதம். பாதி தேவதையும் பாதி பறவையுமான உருவம் அது. அற்புதத்துக்கு அற்புதம், கொழுந்துவிட்டெரியும் விருப்பம் - அதுதான் காதல்''
- கவிஞர் ராபர்ட் ப்ரவுனிங்

யும் நீயே துணையா இருப்பியா... இந்தக் கேள்வியை நினைச்சுத்தான் நான் இங்கே வந்தது.''

''பல வருஷங்களா எனக்குள்ளே இருந்த குழப்பங்கள், ரமேஷ்; அதெல்லாம் மறைகிற வரைக்கும், என்னாலே எப்படி நல்ல துணையா இருக்க முடியும், சொல்லுங்க.''

''விது, நான் தெய்வப் பிறவி ஒண்ணைத் துணையாக் கேக்கலை. எனக்குச் சமமான அறிவும் அன்பும் உள்ள பொண்ணைத்தான்...''

அவனுக்குச் சமமான அன்பு அவளிடம் இருக்கிறதா? 'இந்த அன்பு அனைத்தும் என்னுடையது... பிறர்க்கு வழங்க' என்று அவளால் உலகளவு கைகளைப் பரத்திச் சொல்ல முடியுமா. முடியும்... புதிதாய் அவளுள் துளிர்த்திருந்த தன்னம்பிக்கை சொல்லிற்று. விரக்தியும், பாவ மன்னிப்பும், குற்ற உணர்ச்சியும், சுய பரிதாபமும், வலியின் வடுக்களும் காலப் போக்கில் தேய்ந்து போகும்; உண்மை அன்பு தன்னைத் தானே அடையாளம் கண்டு அணைத்துக் கொள்ளும். நம்பிக்கை.

குவித்த கைகளுள் பொதிந்த குல்மோஹரும் அமல்த்தாஸும் இளவசந்தமுமாய் அவளருகே வந்து உட்கார்ந்தான் ரமேஷ்.

''ஃப்ரெண்ட்ஸ்?''

''ஃப்ரெண்ட்ஸ்.''

(தொடரும்)



புன்னகை தேசம்

அசட்டுத் துணிச்சல் என்பார்களே அது ஆர்.பி.சௌத்ரிக்கு அதிகம் போலும். பின்னே! பத்து வருடங்களுக்கு முன்பு இவர் எடுத்த 'புது வசந்தம்' படத்தைச் சின்னச் சின்ன மாற்றங்களோடு இவரே திரும்பவும் தயாரித்து 'சாதனை' படைத்திருக்கிறார்.

இசைத் துறையில் வெற்றிக் கொடி நாட்டுவது என்ற வெறியோடு சென்னை வரும் இளைஞர்கள் ஒரே வீட்டில் தங்குவது புது வசந்தம் என்றால், புன்னகை தேசத்து மன்னர்கள் ஒரே ஊரிலிருந்து வந்து, ஒரு வேளை சாப்பாட்டுக்கே அல்லாடுகிறார்கள். இவர்களின் இலட்சியத்தை நிறைவேற்ற உயிரைக் கொடுக்காத குறையாக உழைக்கிறார் இன்னொரு ஊர் நண்பன் தருண். இவர் பிளாஸ்கில் தேநீர் விற்று, கௌரவமாக சுயதொழில் மூலம் வருவாய் ஈட்டுவதை 'எச்சில் கிளாஸ் கழுவுவதாக' படம் முடிகிறவரை சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். தேநீர் விற்பது கேவலமா டைரக்டர் ஸார்?

'நண்பனின் உழைப்பில் வாழ்ந்து கொண்டு காதலிப்பதாவது' என எண்ணி, நான் காதலிக்கட்டுமா என்று நண்பன் தருணிடம் அம்சவர்த்தன் அனுமதி கேட்பது, இயக்குனர் ஷாஜஹான் தேறிவிடுவார் என்பதற்கு உணர்வுபூர்வ உதாரணக் காட்சி.

பாவம் எஸ்.ஏ.ராஜ்குமார்! இதேபோன்ற கதையம்சம் கொண்ட எத்தனை படங்களுக்குத்தான் இசையமைப்பார்? எட்டாம் வகுப்பு மாணவன் காப்பியடித்து எழுதிய 'பசுமாடு' கட்டுரை மாதிரி பேந்தப் பேந்த விழிக்கிறது இவரது இசை.

நாம் எதிர்பார்த்தது போலவே சௌத்ரி பிராண்ட், ஹைதர் அலி காலத்து க்ளைமாக்ஸ் மூலம் முதுகு சொறிந்து விடுகிறார்கள். ஷாஜஹானின் வசனம் படத்தை நகர்த்துகிறது என்றால், தருண், குணால், தாமு, அம்சவர்த்தன், சினேகா, ப்ரீதா இளமைக் கூட்டணியின் துள்ளல் நடிப்பு படத்தைக் காப்பாற்றுகிறது. மற்றபடி சௌத்ரியின் ரசனையை நோவதா? தமிழ் ரசனையைச் நோவதா? என்று குழம்பிப் போய் வெளியே வந்த நமக்கு, ஒரு விஷயம் மட்டும் தெளிவாகப் புலப்பட்டது. தமிழ் சினிமா கதைப்பஞ்சத்தின் கசப்பான உதாரணம் புன்னகை தேசம்!

- விஷ்வல்தாசன்

● ஜஸ்ட் பாஸ்



காதலாவது...

காதலை மனந்திறந்து பேசினால், 'காதலாவது கத்தரிக்காயாவது' என்கிறார்கள். மூடி மறைத்தால் 'கத்தரிக்காய் முற்றினால் கடைத்தெருவுக்கு வராமலா போய்விடும்?' என்கிறார்கள்!

அப்படி கத்தரிக்காய்க்கும் காதலுக்கும் என்னதான் சம்பந்தம் என்று விசாரித்தால் ஒரு சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. சரி, காதல் போகட்டும். கத்தரிக்காய் பற்றியாவது தெரிந்து கொள்வோம் என்று விசாரித்ததில் கிடைத்த தகவல்கள்:

ஸைவமோ அசைவமோ யாராக இருந்தாலும் அவர்களின் உணவில் கத்தரிக்காய் நிச்சயம் உண்டு. 'தினமும் கத்தரிக்காயா?' என அலுத்துக் கொள்ளும் அளவுக்கு அது சமையலில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொள்கிறது. வீட்டை விட்டு ஹோட்டல் போனாலும் அங்கு கத்தரிகாய் ஏதாவது ஒரு பதார்த்தத்தில் எட்டிப் பார்த்துப் பல்லை இளிக்கிறது.

'சொலானம் மெலாஞ்சனா' தெரியுமா? அதுதான் கத்தரிக்காயின் தாவரவியல் பெயர். தமிழ்நாட்டு மண் வாகு கத்தரி விதைக்கு ரொம்ப பிடித்த மாம். தென் மாநிலங்களில் அதிகம் விளையும் காய்கறிகளில் முக்கிய இடம் கத்தரிக்காய்க்குத்தான்.

'அண்ணா மலை' என்பதும் கத்தரிக்காய் வகைகளில் ஒன்று. கருநீல உருண்டை, கருநீல நீளம், வரிகத்தரி, வெள்ளையன் என்பவை அதன் மற்ற வகைகளில் முக்கியமானவை.

கத்தரியில் இளம் பிஞ்சு. அதிலும் கருநீலமான குட்டைக் கத்தரிக்காய்களே டேஸ்ட் பார்டி. அதில் மருத்துவ குணமும் இருக்கிறது.

கத்தரிக்காயில், சுண்ணாம்பு சத்து, பாஸ்பரஸ், இரும்பு, மெக்னீசியம், சோடியம், பொட்டாசியம், தாமிரம், கந்தகம், குளோரின், ஆக்சாலிக், ஆசிட், கரோட்டின்...யப்பா இவ்ளோ சத்துக்கள் உள்ளன!

கத்தரிக்காய், வெப்பத்தை அதிகரிக்கச் செய்கிறது. பசியைத் தூண்டு கிறது. ரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது. இதயத்தை வலுப்படுத்துகிறது. சிறுநீர் கழிக்கும்போது கடுப்பு இருந்தால், கத்தரி அதைக் கண்டித்துக் கட்டுப்படுத்துகிறது.

வாதநோய், மார்புச் சளி, கொழுப்பைக் கரைக்கிற குணம், காலராவைக் கட்டுப்படுத்தும் திறன் ஆகிய மருத்துவ குணங்களும், கத்தரி தன் வசம் வைத்திருக்கிறது என்கிறார்கள்.

— சுந்தரமூர்த்தி

...கத்தரிக்காயாவது!










நடக்குமென்பார்;

அக்னிசர்மா பக்கம்

மேஷம் : தலைவாழை விருந்து முடித்து டபுள் ஜரிகை பீடா போட்ட தெம்பும் உற்சாகமும் கிடைக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் நிறைவேற்றிட 11-ல் உலவும் சூரியன் உதவுவார். அரசியல்வாதிகள் முன்னணிக்கு உயருவார்கள். இட்லிக்குக் கெட்டிச் சட்னிபோல முக்கியஸ்தர்கள் பக்கபலமாக இருந்து உதவுவார்கள். ஸ்பெகுலேஷன் துறைகள் அதிக அனுகூலம் தராது. வியாபாரிகள் அகலக்கால் வைக்கக் கூடாது. வீண் சண்டை, சச்சரவுக்கு இடம் தரக் கூடாது. பெண்கள் எண்ணம் நிறைவேறும்.

ரிஷபம் : சனி, ராகு, கேது ஆகியோரது சஞ்சாரம் அனுகூலமில்லை என்பதால், மாதக் கடைசியில் மனைவி தரும் சர்க்கரையில்லாத காப்பி போல கசக்கும். குரு பலம் துணை நிற்கும் என்பதால், சமாளித்து விடுவீர்கள். வெளிநாட்டுத் தொடர்பு பலன் தராது. வார இறுதியில் துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தயிரில் ஊறிய வடைக்கு, காராபூந்தி ஒத்தடம் தருவதுபோல, உங்களுக்கும் நல்லவர்கள் நலம் புரிய முன் வருவார்கள். பெண்கள் மனம், ஃபிரிஜ்ஜில் வைத்த ஃபலூடா போல குளிரும். சிலருக்குத் திடீர் அதிர்ஷ்டங்கள் வரும்.

மிதுனம் : அரை கிளாஸ் டீயை, ஆறடிக்கு உயர்த்தி, ஆற்றி ஆற்றியே முழு கிளாஸாக நுரைக்க வைக்கும் டீக்கடைக்காரரின் திறமை, உங்கள் காரியங்களிலும் பளிச்சிடும். கூட்டுத் தொழில் புரிபவர்கள் நலம் காண்பார்கள். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்பால் அனுகூலமிருக்காது. வழக்கு, போட்டிப் பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். வீடு, மனை, வாகனம் விஷயங்களில் ஓரளவு எதிர்பார்க்கலாம். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் திக்குமுக்காட வைக்கும். சுக்ரனை, குரு பார்ப்பதால், நல்ல விஷயங்கள் நாடி வரும்.



கடகம் : இலேசாய் தித்திக்கும் உடுப்பி ஓட்டல் சாம்பார் போல, இந்த வாரம் உங்களுக்கு! சனி கேது ஆகியோரது சஞ்சாரம் அனுகூலமாக இருப்பதால், உங்கள் திறமைக்குரிய பலன் நிச்சயம். ஆனால் உடன்பிறந்தவர்களில் அதிக அனுகூலமில்லை. விவசாயிகளுக்கு நல்ல முன்னேற்றம். தொழிலாளிகள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். கணவன்-மனைவி உறவு 'கிராக்-ஜாக்' பிஸ்கெட் மாதிரி ஃபிப்டி ஃபிப்டி! கூட்டுத் தொழில் புரிபவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். 9ல் செவ்வாய் என்பதால் அதிக சங்கடம் இராது. தெய்வப் பிரார்த்தனை நலம் தரும்.

சிம்மம் : பாப்கார்ன் மெஷினில் இட்ட சோளப் பொரிபோல, உங்கள் குடும்பத்திலும் பட... பட... என பொரியும் சப்தம் கேட்கும். குறிப்பாக உடன் பிறந்தவர்களுடன் சின்ன கருத்து வேறுபாடு நிகழலாம். பொங்கி வரும் பாலை, தண்ணீர் தெளித்து அடக்குவது போல, பக்குவமாகக் கையாளுங்கள். நிர்வாகம், மருத்துவம், அரசு விவகாரங்களில் உள்ளவர்களுக்கு, சூரியன், குரு சஞ்சாரத்தால் உற்சாகமான சூழ்நிலை உருவாகும். பண நடமாட்டம் திருப்தியாக இருக்கும். ஸ்பெஷல் ரோஸ்ட் போன்ற பொன்னிற பொருட்களால் ஆதாயம் வரும்.

கன்னி : சூரியன், ராகு கிரகங்களுக்கு தாங்க்ஸ் சொல்லுங்க. நமுத்துப் போன அப்பளம் போல இருந்த வாழ்வு, இனி பொருட்காட்சிகளில் விற்கும் மெகா சைஸ் அப்பளம் போல மொறு மொறுப்பாகும். முகவசீகரம், ஆற்றல் அதிகரிக்கும். அரசு பணியாளர்கள் உயருவார்கள். பெண்களுக்கு மாமூலான பலன்கள் தடைபாடது. குடும்பத்தில் அமைதி நிலவும். 10ல் குரு என்பதால் பொருளாதார இனங்களில் எச்சரிக்கை தேவை. வார பிற்பகுதியில் ஸ்பெஷல் அல்வா கிடைக்கலாம். உஷார்!

துலாம் : 'நேற்று மிஞ்சிய வடைதான் இன்றைய வடைகறி. நேற்றைய உழைப்புதான் இன்றைய அதிர்ஷ்டம். இதை நீங்கள் உணர்ந்திருப்பதால், இனி தடையேதும் இல்லை.

சாமர்த்தியமாக காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். புதிய சொத்துக்கள் சேரும். சுக்ர பலம் மிகுந்திருப்பதால், கலைத் துறைக்காரர்கள் சந்தோஷம் காண்பார்கள். ஒரு டம்ளர் தண்ணீர் கிடைக்காதா என்று தவிச்ச வாய்க்கு, ஜில்லென்று பாதாம்பால் கிடைத்தது போல, அதிர்ஷ்டமும் ஆதாயமும் குவியும். விருந்து, உபசாரம் தடபுடல்! திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான சூழ்நிலை உருவாகும். வாழ்க்கை வசதிகள் பெருகும். 3ல் கேது என்பதால், மகான் தரிசனம் கிடைக்கும்.

விருச்சிகம் : போண்டாவிலிருக்கும் மிளகைக் கடித்தால் ருசி. ஆனால் காரம் தெரியமலிருக்க, தேங்காய்ப் பல்லுடன் சேர்த்துக் கடிக்கணும். இந்த டெக்னிக் இந்தவாரம் உங்களுக்கு ரொம்ப அவசியம். முக்கிய கிரக சஞ்சாரங்கள் எதுவும் அனுகூலமாக இல்லை. கிரக வழிபாடு, தெய்வ பிரார்த்தனை, தான தருமம் என செய்து பாலன்ஸ் செய்யுங்க. கணவன்-மனைவி உறவு நிலை அல்ஸர் பேஷண்ட் டயட் போல உப்பு சப்பில்லாமல் இருக்கும். யாரிடமும் வீண் வார்த்தை, வம்பு வேண்டாம். கொடுக்கல் - வாங்கல் விஷயத்தில் எச்சரிக்கை தேவை. எந்தப் பிரச்னையையும் சுலபமாகச் சமாளித்து விடுவீர்கள். கவலை வேண்டாம்.

தனுசு : இடியாப்பச் சிக்கலைவிட சிரமமாயிருந்த உங்கள் வாழ்க்கை இனி, ஸ்பெஷல் ஜாங்கிரி போல இனிக்கப் போகிறது. எல்லாம் ராசிநாதன் குருவும், அவர் உட்கார்ந்திருக்கும் 7ம் இடமும் செய்யும் அற்புதம்தான். நெய்க்கு தொன்னையா, தொன்னைக்கு நெய்யா என்ற பேச்சே வேணாம்! அத்தனையும் சர்க்கரைப் பொங்கல். எதிர்ப்புகள் குறையும். எதிரிகள் விலகிப் போவார்கள். நினைத்த காரியம் ஜெயிக்கும். கணவன்-மனைவி உறவு நிலை சிறுவாணி தண்ணீர் போல இனிக்கும். 4ல் செவ்வாய், 7ல் ராகு என்பதால் அலைச்சல் கூடலாம். உஷார்.

சுதா சேஷையனுக்கு (மகரம்) வெற்றி வாய்ப்புகள் குவியப் போகுதாம்.


மகரம் : ஒரு படி கடலை தின்றாலும், கடைசி வேர்க்கடலை, சொத்தையாகப் போகும் அனுபவம் யாருக்குத்தான் இல்லை. 3ல் செவ்வாய் - 6ல் ராகு உலவுவதால், வார முற்பகுதி எல்லாம் ஜமாய்க்கப் போறீங்க. வீர, தீர, பராக்கிரமம் வெளிப்படும். காவல், இராணுவம், சட்டம் போன்ற துறைக்காரர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் குவியும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். பெண்கள் நிலை உயரும். ஆடை ஆபரணங்கள் சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வார பிற்பகுதியில் கிரக சஞ்சாரம் தோசையைத் திருப்பி போட்டது போல் மாறுவதால், நல்லதும் அல்லாததுமான பலன்கள் ஏற்படும்.

கும்பம் : எல்லாருக்கும் தயிர் சாதம் பிரசாதமாக கிடைத்துக் கொண்டிருக்க, நாம் கை நீட்டும்போது, கடச்கட வெண்பொங்கல் கிடைத்தால் அகமகிழாதா என்ன? இந்த வாரம் அப்படித்தான் இருக்கப் போகிறது. குரு பார்வையால் சுப பலன்கள் ஏற்படும். ஸ்பெகுலேஷன் லாபம் கொண்டு வரும். திருமணம் கூடி வரும். வெளிநாட்டுத் தொடர்பால் அனுகூலம். மக்களால் மகிழ்ச்சி. கணவன்-மனைவி உறவு ஜீராவும் - ஜாமூனுமாக இனிக்கும். விஞ்ஞானம், ரசாயனம், மருத்துவத் துறைக்காரர்கள் ஏற்றம் பெறுவார்கள். வாழ்க்கைத் துணையால் செலவுகள் ஏற்படும். உஷார்.

மீனம் : கொட்டைப்பாக்கு, கொழுந்து வெத்தலை வாசனை சுண்ணாம்பு. தாம்பூலம் சிறக்க நல்ல காம்பினேஷன். 3, 10, 11-ம் இடத்தில் உலவும் கிரகங்கள் வாழ்க்கை சிறக்க நல்ல காம்பினேஷன். சமுதாய நலப்பணிகள், பொது நலப் பணிகளில் ஈடுபடும் ஆர்வமும் அதிகரிக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் காணும். வாழ்க்கைத் துணையால் நன்மைகள் கிடைக்கும். தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும் அனுகூலமான போக்கு. இரும்பு, எஃகு, தோல், எண்ணெய் வகைகள் லாபம் கொண்டு வரும். 4ல் உச்ச கிரக சஞ்சாரம், உடல் நலத்தைக் கெடுப்பார். இஞ்சி மொரப்பா கைவசம் இருக்கட்டும்.

பிப்ரவரி 13 முதல் 19 வரை

நடக்கும்!








குருஜி ஏ.எஸ். ராகவன்

'வாரியார் சுவாமிகளும் வயலூரும் போல' என்று உவமை சொல்லும் உரிமை எடுத்துக் கொண்டோமானால், அந்த உவமைக்குப் பொருந்திவரக் கூடிய இன்னொரு தொண்டர் – திருத்தல ஜோடியும் இருக்கிறது:

தொண்டர் : சிதம்பர சுவாமிகள்

திருத்தலம் : திருப்போரூர்.

சென்னை – மாமல்லபுரம் சாலையில் 42வது கி.மீயில் உள்ள திருப்போரூர்தான்!

மிகப் பழைமை வாய்ந்த இக்கோயில் மண்ணோடு மண்ணாகப் புதைந்துபோன காலகட்டத்தில் அதனைக் கண்டெடுத்து புதுப்பித்தவர் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்.

சிதம்பர சுவாமிகள் மதுரையைச் சேர்ந்த (பதினேழாம் நூற்றாண்டு) புலவர்க்குடிமகன். செல்வாக்கு படைத்த ஒரு நகரத்தார் குடும்பத்துக் குழந்தைகளுக்கு இவர் தமிழ்ப் பாடம் கற்றுக் கொடுத்து வந்தார். அவ்வாறு வகுப்பு நடத்திவந்த ஒரு சமயம், முருகப் பெருமான் திடீரென்று இவர் முன் காட்சி தந்தாராம். அதன் பிறகு சிதம்பர சுவாமிகள் சைவ ஆகம முறைப்படி இருபத்தோரு தீட்சைகள் பெற்றாராம்.

முருகன் காட்சி தரும் வரையில் மீனாட்சி அம்மையின் அத்யந்த பக்தராக இருந்திருக்கிறார் சுவாமிகள். தோகை மயில் மீது முருகன் தோன்றி மறையவும், சுவாமிகள் அங்கயற்கண்ணியிடமே சென்று சரணடைந்திருக்கிறார். தவமிருந்து அவள் மீது கலிவெண்பாவும் இயற்றியிருக்கிறார். அன்னை மீனாட்சி அவர் அன்புக் கிறங்கி வடக்கே போரூரில் புதைந்து கிடந்த குமரனைக் கண்டெடுத்து கோவிலமைக்கு மாறு குறிப்பு உணர்த்தியிருக்கிறாள்.

அன்னையைத் துதித்து, மகனால் ஆட்கொள்ளப்பட்ட சிதம்பர சுவாமிகள் திருப்போரூர் வந்த கதை இதுதான். அங்கே பனங்காட்டில், ஒரு மரத்தடியில் புற்றுமூடிப்போய்க் கிடந்த சுயம்பு மூர்த்தியாக முருகன் அகப்பட்டிருக்கிறான். அங்கேயே, உடனே ஒரு சிறு குடில் அமைத்து அவனை வழிபட்டு வந்தார் சுவாமிகள். முருகப் பெருமானே ஒரு நாள் கனவில் தோன்றி முன்னர் அவ்விடத்தில் இருந்த கோயிலின் அளவையும் அமைப்பையும் சுவாமிகளுக்குத் தெரிவித்து, அதே அமைப்பில் மீண்டுமொரு கோயில் கட்டப் பணித்திருக்கிறார்.

அன்று முதல் சுவாமிகள், முருகனுக்குக் கோயில் கட்டும் பணியில் இறங்கினார். செல்வந்தர்களிடம் நிதி சேகரித்தார். தாமும் பக்தர்களுக்குத் திருநீறு அளித்து வைத்தியம் செய்து பொருள் சேர்த்தார். அற்புதமாக அவர் எழுப்பிய கோயில்தான் இன்று காணப்படுகிற அமைப்பு. அதில் கர்ப்ப கிருஹம் முழுவதும் சுவாமிகளின் தனிப்பட்ட திருப்பணி என்கிறார்கள்.

புதுப்பித்துக் கட்டிய கோயிலாயினும் அதன் புராதனத்துக்குச் சான்றாக பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மனின் பட்டப் பெயர்களான 'அத்யந்த காமன்', 'அதிரண சண்டன்' என்பவை ஒரு தூணில் காணப்படுகின்றன.

திருப்போரூர் என்ற பெயருக்குப் பொருத்தமான காரணம் விளங்குகிறது. அசுர சேனையை எதிர்த்துப் போர் புரிந்த முருகன், மூன்று இடங்களில் அவர்களை எதிர்த்தான்.

நீரிலே (கடலில்) போர் செய்த

தேவன்



இடம் திருச்செந்தூர்.

நிலத்திலே போர் புரிந்தது திருப்பரங்குன்றத்தில்.

விண்ணிலே சண்டையிட்ட இடம் திருப்போரூர்.

இம்மூன்று தலங்களிலும் முறையே மாயை, கர்மம், ஆணவம் ஆகிய மூன்றும் அடங்கியதாக நம்பிக்கை.

போர் புரிந்த ஊர் போரூர் – இதர பெயர்களிலும் இந்த அடையாளம் இருக்கிறது – போரி, போரி மாநகர், யுத்தபுரி, சமரபுரி, சமரப்பதி (சமர்–போர்).அருணகிரிநாதர் திருப்புகழில் சிறப்புச் சேர்த்து 'சமரமாபுரி' என்று குறிப்பிடுகிறார்!

'திமிர மாமன மாமட' என்று தொடங்கும் திருப்புகழ் 'சமரமாபுரி மேவிய பெருமாளே' என்று முடிகிறது!

சமர் அடையாளங்கள் எதுவுமின்றி இன்று திருப்போரூர் அமைதியாகத்தானிருக்கிறது. இரண்டு திருச்சுற்றுகளையுடைய கோயில். கர்ப்ப கிருஹத்தில் முருகப் பெருமான் சுயம்பு மூர்த்தியாக வள்ளி தெய்வானையுடன் காட்சி தருகிறார். மூலவர் திருவடியில் ஒரு சிறு பீடத்தில், ஜபமாலையும் கமண்டலமும் அபய-வரத ஹஸ்தங்களுமாக இன்னொரு முருகன் இருக்கிறான். இவனும் இருபுறமும் தேவியருடன்

காணப்படுகிறான். சிதம்பர சுவாமிகள். இந்தச் சிறிய மூர்த்தியை அபிஷேக வழிபாட்டிற்காக அமைத்தார் என்கிறார்கள். மூலவருக்குப் புனுகுச் சட்டம் மட்டும் சாத்தப்படுகிறது. மேலே கவசமும் ஆபரணங்களும் அணிவித்திருக்கிறார்கள்.

'சகல லோகமு மாசறு சகல வேதமு
மேதொழு
சமர மாபுரி மேவிய பெருமாளே'

என்று அனைத்து வேதங்களும் தொழுவதாக அருணகிரிநாதர் பாடும் சமரபுரி தேவனைத் தொழுது நிற்கிறோம்.



• கந்தசுவாமி திருக்கோயில் கோபுரமும் உத்சவமூர்த்தியும்

ஆணவம் அடக்கும் இத் திருத்தலம் 'யான், எனது' என்ற சுயநல சிந்தனைகளைப் போக்கி 'நாம், நமது' என்ற பேரன்பில் நம்மை ஆழ்த்தும்படி பிரார்த்திக்கிறோம்.

சிதம்பர சுவாமிகள் இந்தக் கோயிலில் யந்த்ர ஸ்தாபனமும் செய்வித்திருக்கிறார். விநாயகர், சுப்ரமண்யர், வள்ளி _ தேவசேனை, சிவபெருமான், உமை, சண்டிகேச்வரர், அஷ்டதிக் பாலகர், பைரவர் ஆகியோருக்கு உரித்தான மந்திர எழுத்துக்கள் அமைக்கப்பட்ட யந்த்ரம்.

தினந்தோறும் இந்த யந்த்ரத்துக்கும் பூஜை நடைபெறுகிறது. கந்த சஷ்டியின்போது ஆறு நாட்கள் விசேஷ அபிஷேகமும் யந்த்ரமாலா பூஜையும் செய்கிறார்கள்.

கருவறையையொட்டியுள்ள திருச்சுற்றில் விநாயகர், தண்டாயுதபாணி, பிரும்ம சாஸ்தா, விஷ்ணு துர்கை, அகஸ்தியர், வீரபத்திரர், வீரவாகுத் தேவர் என்று முருகனோடு தொடர்புள்ள தெய்வ வடிவங்கள் அனேகம் இருக்கின்றன. மேற்குப் பக்கத்தில் அதி அற்புதமான பஞ்சலோக விக்ரஹங்கள் காணக்கிடைக்கின்றன. சோமாஸ்கந்தர், அஸ்திர தேவர், பிரும்மா, விஷ்ணு என்று பார்த்துக் கொண்டே வருகிறோம். அனைத்தையும் பின்தள்ளி முந்தி நிற்கிறது ஓர் அரிய வடிவம்:

மானும் மழுவும் ஏந்திய சிவபெருமான் மற்ற இரு கரங்களையும் பவ்யமாக இணைத்து வாய்பொத்தி வினயத்துடன் நோக்க, அவர் மடியில் அமர்ந்து முகம் நோக்கிப் பிரணவப் பொருளை உபதேசிக்கிறான் முருகன்! தமிழ்நாட்டில் தகப்பன் சாமியை இந்த உருவத்தில் வேறெங்கும் காண முடியாது.

இத்தலத்தில் காணப்படும் முத்துக் குமார சுவாமியும் அரிய தோற்றமுடையவர். சம்ஹார மூர்த்தியாக மயில் மீது கால் ஊன்றி, கையில் வில் ஏந்தி நிற்கிறார்!

வெளிப் பிராகாரத்தில் ஆட்டு வாகனத்தில் முருகன் அமர்ந்திருக்கிற மற்றொரு அரிய கோலம் காணக் கிடைக்கிறது. அகத்தியருக்கு உபதேசம், வள்ளி கல்யாணம், அக்னி ஜாத சுப்ரமண்யர் போன்ற பிற சிற்ப சிறப்புகளைத் தூண்களில் பார்த்து ரசிக்கலாம்.

வெளிப் பிராகாரத்தில் வள்ளி, தெய்வானை இருவருக்கும் தனித்தனி சன்னதிகள் இருக்கின்றன.

திருப்போரூர் சந்நிதிமுறை அமைத்த சிதம்பரம் சுவாமிகளின் படமும் வெளிச் சுற்றில் இருக்கிறது. 726 பாடல்கள் கொண்டது 'திருப்போரூர் சந்நிதிமுறை'. இத்தலத்தைப் போற்றும் திருப்போரூர் புராணம், கலம்பகம், அலங்கார பஞ்சகம் முதலிய தெய்வீக நூல்களும் உண்டு.

அருணகிரிநாதரின் நான்கு திருப்புகழ் பாக்கள் இருக்கின்றன.

செருக்கா லே மிகுந்த கடற்சூர் மான
வென்ற
திறற்சேர் வேல்கை கொண்ட
முருகோனே
இணைக்கோர் காவல் கொண்ட
குறத்தேன் மாதுபங்க
திருப்போ ரூர் அமர்ந்த பெருமாளே



• சிதம்பர சுவாமிகள்

என்று செருக்கை – ஆணவத்தை அடக்கிய வரலாறைப் பின்னிப் பாடுகிறார்.

சிதம்பரம் சுவாமிகளோ,

நோயுற்ற டராமல் நொந்து மனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பாவியேன் காலத்தை
ஓர்நொடிக்குள் நீக்கியெனை ஒண்போரூரையா நின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து

என்று அனாயாச மரணம் அருள போரூர்ப் பிரானை வேண்டுகிறார்.

இதே புலவர், பக்தர், சமரபுரிதேவோ! என்று வியந்து பாடிய தாலாட்டைக் கேட்டபடி நாம் திருப்போரூரிலிருந்து விடை பெறுவோமே!...:

நீலமயில் வாகனனோ
நெட்டிலைவே லாயுதனோ
கோலம்நிறை கோழிக்
கொடிபடைத்த சேவகனோ!

செஞ்சதங்கை கொஞ்ச
சிறுகிண் கிணியாடக்
கஞ்சமலர்த் தாளுமையாள்
கண்களிக்க வந்தானோ!

சமரபுரித் தேவோ
தணிகைமலைத் தேனோ!
அமரும் பழனிமலைக்(கு)
ஆன மணிவிளக்கோ!

(அடுத்த வாரம் : குமரக்கோட்டம்)

காதல் சமையல்!

மாஜிபு

"**க**த்திரிக்காயாலயே ஆன க்ளோஸ் பண்ண முடிவு பண்ணிட்டியா மீனா?'' சாப்பிட்டுக் கொண்டிருந்த சேகர் எரிந்து விழுந்தான். மீனா பதில் பேசாமல் முழித்தது அவன் எரிச்சலைக் கூட்டியது.

'விடிஞ்சா கத்திரிக்காய் கூட்டு, கத்திரிக்காய் கொத்சு, கத்திரிக்காய் துவையல், பிட்ல, ஸ்டப்ஃடுப்பா இதிலேயிருந்து விடிவே யில்லையா?''

" வீணா கத்தாதிங்க. கத்திரிக்காயோ வாழைக்காயோ உங்க தம்பி வாங்கி வைக்கிற காய்களைச் சமைக்கிறேன்."

சேகர், மீனா வேலைக்குச் செல்லும் சுமாரான இளம் தம்பதி. கணவன் மனைவி பிரியாத கூட்டுக் குடும்பம். தொட்டுக் கொள்ள சாம் (எ) சாம்பசிவம். கல்லூரி போய் வரும் சேகரின் தம்பி. சாம், பாரதியின் காலை எழுந்தவுடன் படிப்பின் எதிரி. ஈவினிங் காலேஜ் மாணவன். எனவே மளிகை, காய்கறி, காஸ், இதர பர்ச்சேஸ் அவன் பொறுப்பு.



''தினம் ஏன் கத்திரிக்காயா வாங்கித் தொலைக்கிறான். சொல்லிப் பாத்தியா?''

''நாலஞ்சு மாசமா இந்த வியாதி. சொல்ற அடுத்த நாள் பேருக்காக அது பெங்களூர் கத்திரிக்காயா மாறும்.''

சாமுக்குச் சின்ன வயசிலிருந்தே கத்திரிக்காய் பிடிக்காது. சமைத்தால் வழவழன்னு மீன் மாதிரி இருக்கிறதா ஒரு பிரமை, பயம். சுத்த மேனகா காந்தி. எப்படி எதுக்கு இந்தத் திடீர் பிருகக் காதல்? துப்புத் துலக்க முடிவெடுத்த சேகர், வயசு பையன் 'ஒரு வேளை அதோட பாவாடையில மயங்கிட்டிருப்பானோ' என்ற சந்தேகத்துடன் கிளம்பினான்.

ஆபிசில் அரை மணி நேர பர்மிஷன் போதுமாக இருந்தது சேகருக்கு. சாம் கத்திரிக்காய் வாங்கும் கடையைத் தெரிந்து கொண்டான். தேங்காய் மண்டி, வெங்காய மண்டி என பார்த்திருந்த சேகர் கத்திரிக்காய் மண்டி பார்ப்பது இதுவே முதன் முறை. பிரமித்துப் போனான். நிச்சயமாக உலகின் எட்டாவது அதிசயத்திற்குத் தகுதி பெறும் இந்தக் கத்திரிக்காய் சூப்பர் மார்க்கெட் எனப்பட்டது அவனுக்கு.

''என்ன சார் பாக்கிற? தோசா

இங்னு ஒரு தோசை ஓட்டல் தொறந்தப்புறந் தானே அம்பது வகை தோசை பெருமை தெரிஞ்சுக்கினோம். அதுபோல இந்த கடை கத்திரிக்காய்ப் பெருமை பேசும் சார்..' என்றார் மீசைக்கார முதலாளி.

குண்டு கத்திரிக்காய், நீட்டு கத்திரிக்காய், கறுப்பு, வெள்ளை, ஆத்தூர், மீஞ்சூர், வரி கத்திரிக்காய், கண்டங் கத்திரி, பெங்களூர் கத்திரி, இம்போர்டட் கத்திரிகள் என கத்திரிக்காய் உலகமாய்த் திகழ்ந்தது. பிரமிப் பிலிருந்து மீண்ட சேகர், "இதுக்காக மட்டும் தினம் கத்திரிக்காய் வாங்க மாட்டானே சாம்" என்று யோசிக்க ஆரம்பித்தபோது அந்த 'பனிச்' குறுக்கிட்டது.

"நைனா இந்தா காபி!" என்று எங்கிருந்தோ தேவதை போல் திடீரெனக் கடைக்குள் குதித்தது "பனிச்". அப்படிபோடு அரிவாளை! ஒரு கணம் அசந்தே போனான் சேகர். டன் கணக்கில் கத்திரிக்காய் வாங்க இது போது மான காரணம் என்று வீடு திரும்பினான்.

"**டே** சாம் உண்மையைச் சொல்லு."

'நிஜம்மாண்ணா கத்தரிக்காயில ஏ, பி, சி, டி, ஈ, ... வைட்டமின் எல்லாம் இருக்கு..'

"உஷ்! பிரிஞ்சால் கடைல லவ் ஆல்ன்னு ஒரு குட்டி உட்கார்ந்திருக்கு!"

"அண்ணா! நீயும் பாத்துட்டியா?"

"பதறாத. நான் போட்டிக்கு வரமாட்டேன்."

"கத்திரிக்காய் டயட்டுக்குக் காரணம் அவதான்."

"லவ்வா?"

"ம். ஒன் சைட்.."

"ஒன் சைடா? எந்த சைடு?"

"நான்தான். அவ இன்னும் முடிவெடுக்கல..."

"அடப்பாவி! இதுகூட படிப்பு மாதிரியா?"

"இல்லண்ணா, என் ஃபிரண்டே ஒருத்தன் மோதறான்..!"

"மோதறானா? என்ன பாஷைடா?"

"காதலும் காலேஜ் சீட், வேலை மாதிரி ஆயிடுச்சா... அதான்."

"சரி. ஏதோ கவர்னர் பொண்ணு, சாராய பாக்டரி முதலாளி பொண்ணுன்னு காதலிக் காம இருந்தியே."

"மீசை ரொம்ப நல்லவர்! அதோட அப்பா.."

"உன்னைக் கண் கலங்காம வாழ் நாள் பூரா பார்த்துப்பாரா?"

"நிச்சயமா, ஒரே பொண்ணு, நல்லா படிக்குது. கடை அதுக்குத்தானே...!"

"நீயாவது என்னைப்போல தொழிலாளியா போராடாம முதலாளியா இரு.."

"அண்ணா இன்னும் நான் ஒன் சைடு.."

"என்னடா தொல்லை இது? காதலிச்சு தொலைக்க சொல்லுடா அவளை."

"வர்ற காதலர் தினத்தில முடிவு சொல்ற தாச் சொல்லியிருக்கா."

"நீயா அவனான்னா?"

"ம்..!"

வேலன்டைன் தினத்தன்று சேகருக்கு தான் அதிக டென்ஷன். சாம் விவகாரம் என்னாகுமென்ற பதபதைப்பு. தான் கலபமாக பஸ்ஸில் காதலித்து ஜெயித்தது போல் இவனும் தேற வேண்டுமென்ற ஆதங்கம். வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தான். சாமிற்கும் இவன் தவிப்பு தெரிந்திருந்தது போலும்.

"அண்ணா நான் பாசாயிட்டேன்!" என்று ஓடி வந்து அணைத்துக் கொண்டான். கால் கிலோல ஜெயிச்சிட்டேண்ணா!"

சேகர் புரியாமல் விழித்தான்.

"கால் கிலோ வித்திட்டதில என்னைத் தோர்ந்தெடுத்திட்டாண்ணா.."

"இதென்னடா புதிர்?"

"நாங்க ரெண்டு பேரும் எல்லா விஷயத் திலேயும் ஏறக்குறைய ஒரே மாதிரி சொங்கியா தான் இருக்கோமாம். அதனால எந்த அளவு லவ் வைச்சு முடிவு பண்றதுன்னு புரியாம திகைச்சா."

"அப்புறம்?"

"கடைசில இதுவரைக்கும் அதிக கத்திரிக் காய் வாங்கியவரே என்னவர்னு சொன்னா. சூப்பர் மார்க்கெட் கம்ப்யூட்டர்ல கணக்குப் பார்த்தா.."

"பார்த்தா?"

"அவன் 248 கிலோ, நான் 248.25 கிலோ."

"கிரேட்! அப்புறம்?"

"ராக்கி அவனுக்கு; பாக்கி எனக்கு."

"பாக்கியா?"

"பாக்கி அவதான். பாக்கியம். அவ பேரு."

"கங்கிராட்ஸ். காதல் கால் கிலோ கத்திரிக்காய்!"

●

இனியவளே...



வேறு யாருமல்ல... வின்ஸ்டன் சர்ச்சில்தான். தன் மனைவி சென்னையி லிருந்து எழுதிய கடிதத் திற்கு எழுதிய பதில்தான் முதல் பக்கம் நீங்கள் படித்தது. மனைவிக்கு காதல் கடிதமா? என்று கேட்காதீர்கள். ஏன் எழுத கூடாது?

(பிற பத்திரிகைகளில் வெளியான சில கடிதங்கள் - சற்றே சுருக்கமாக)

மறைந்த பூலான்தேவியின் கணவர் உமேத் சிங், தம் மனைவி டெல்லியில் வசித்த அரசுக் கட்டடத்தை நினைவகமாக மாற்ற வேண்டும் என்றும், அங்கு அவரது சிலையை வைக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். தனக்கென்று எந்த சிறப்பும் இல்லாத ஒருவர் கோடிக்கணக்கான மதிப்புள்ள அரசு சொத்தைக் கபளீகரம் செய்ய நினைப்பதைப் பார்த்தால் அதிர்ச்சியாக இருக்கிறது. இப்படி கூறிக்கொண்டு தம் மனைவிக்காக அளிக்கப்பட்ட வீட்டை அவர் இறந்த பின்னும் காலி செய்யாமல் இருக்கிறார். இதுபோன்ற நபர்களை அரசு சீக்கிரமே காலி செய்ய வைக்க வேண்டும். ஏற்கெனவே நினைவகங்கள் என்ற பெயரில் கோடிக்கணக்கான மதிப்புள்ள அரசு நிலங்கள் தாரை வார்க்கப்பட்டுவிட்டன. போதும்!

(டைம்ஸ் ஆஃப் இந்தியா - எல்.ஆர். சபர்வால், புதுடெல்லி)

மேற்கு வங்காள மாநில மகளிர் குழு (ஜென் - செலக்ட் என்ற பெயரில் நமக்கு விருப்பப்பட்டக் குழந்தையைப் பெற்றுக் கொள்ளும் டெக்னிக் தொடர்பான) விளம்பரத்தைக் கவனித்து மாநில முதல்வருக்கும், சுகாதாரத் துறை அமைச்சருக்கும் கடிதங்கள் அனுப்பியுள்ளது. சட்டத்துக்குப் புறம்பாக இப்படியொரு விளம்பரத்தை வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறது.

ஆண் குழந்தைக்குத்தான் சிறப்பிடம் எனும் நிலையில் உள்ள நம் நாட்டில் இது போன்ற விவகாரங்களை அனுமதிக்கக்கூடாது. இது ஒரு சட்டமீறலும்கூட. கருவில் உள்ள குழந்தை ஆணா? பெண்ணா? என்று அறியும் சோதனைக்கெதிரான சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோதே, பெண்கள் இயக்கம் அதிலுள்ள எல்லா ஓட்டைகளும் அடைக்கப்பட வேண்டும் என்று கோரின. மருத்துவ உலகைச் சேர்ந்த சக்திமிகுந்த சிலர் அரசை அணுகி சில சட்டத்திருத்தங்கள் நடைபெறவிடாமல் தடுத்துவிட்டனர். ஏற்கெனவே ஆண் - பெண் விகிதத்தில் பெண்ணின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. இந்த நிலையில் மகளிர் இயக்கங்கள் உட்பட அத்தனைச் சமூக இயக்கக் குழுக்களும் ஒன்றிணைந்து ஆண் குழந்தைக்கு மட்டும் ஆதரவு தரும் எல்லா டெக்னிக்குகளுக்கு எதிராகவும் ஒன்று சேர வேண்டும்.

(ப்ரண்ட்லைன் - பேராசிரியர் ஜஸோதரா பக்ஜி, கொல்கத்தா)

தமிழகத்தில் மின் கட்டண உயர்வு நடுத்தர மக்களைப் பாடாய்ப் படுத்திக் கொண்டிருக்கிறது. மீட்டர் இடமாற்றத்திற்கான கட்டணம், டெவலப்மெண்ட் கட்டணம், ஃப்யூஸ் கால் சார்ஜ் என்று எல்லாக் கட்டணங்களும் வானுயரத்துக்கு உயர்ந்துவிட்டன.

அடுத்து, கூடுதல் செக்யூரிடி வைப்புத் தொகை. இது மின் இலாகாவுக்குப் பணம் சுரக்கும் காமதேனுவாக இருக்கிறது. இந்தக் கட்டணமும் வரைமுறையின்றி அபரிமிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. முதன்முறையாக மின் இணைப்பு கொடுக்கும்போதே உடன்பட்ட தொகை செலுத்தப்பட்ட பிறகே இணைப்பைத்

நிலைமை?



தருகின்றனர். இதை மறுபடியும் பின்னாளில் உயர்த்திக் கேட்பது நியாயமே இல்லை. ஏற்கெனவே குறிப்பிட்ட டெபாஸிட் கட்டி காஸ், டெலிஃபோன் இணைப்புகளைப் பெற்றவர்கள், பிற்காலத்தில் டெபாஸிட் கட்டணம் உயரும்போது மீண்டும் பணம் செலுத்துவதில்லை. புதிய இணைப்பு பெறுவோர்க்கு மட்டுமே டெபாஸிட் கட்டண உயர்வு பொருந்தும். அதேமுறை மீட்டர் இணைப்புக்கும் கொண்டு வரப்பட வேண்டும்.

மேலும் மின்சாரத்துறை, உபயோகிப்பாளர்களுக்கு செய்யும் சேவைகளுக்கு அதற்காக கட்டணமின்றி உபரியாக டெவலப்மென்ட் சார்ஜ் என்ற ஒரு கட்டணமும் வசூலிக்கின்றனர். இது யாருடைய டெவலப்மென்ட்க்கு என்பதுதான் தெரியவில்லை.

மின்சார துறையினர் முடித்துக் கொடுக்கும் இம்மியளவு பணிக்குக்கூட 'சம்திங்' அழ வேண்டியுள்ளது. இன்றைய காலகட்டத்தில் அத்தியாவசிய தேவையாகிவிட்ட மின்சாரம் இப்போதெல்லாம் தொட கூட வேண்டாம், நினைத்தால்கூட சாமான்யர்களுக்கு 'ஷாக்' அடிக்கிறது.

(காலைக்கதிர் - வி. ராமசாமி,
புதுக்கோட்டை)

வக்ப் வாரியத்தின் தலைமைப் பதவியை ஒரு பெண் வகிப்பது ஷரியத் சட்டத்துக்கெதிரானது என்று தமிழ்நாட்டிலுள்ள சில முஸ்லிம்கள் கூறுகின்றனர். இஸ்லாமிய அறிஞர்கள் அப்படி ஒருபோதும் சொல்ல மாட்டார்கள். காரணம் வக்ப் வாரியங்கள் அந்நாளில் இருந்ததில்லை. சுதந்தர இந்தியாவில் தொடங்கப்பட்ட அமைப்புகள் அவை. ஒரு இஸ்லாமிய அரசின் படைப்பு இல்லை இவை.

தவிர இதுபோன்ற விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவது சகஜமே. குவைத்தில் பெண்கள் தேர்தலில் வாக்களிக்க முடியாது. ஷரியத் சட்டம் அதற்கெதிரானது என்கிறார்கள். ஆனால் பாகிஸ்தான், எகிப்து, மலேசியா ஆகிய நாடுகளிலுள்ள பெண்களுக்கு வாக்குரிமை உண்டு. அங்கே எந்த ஷரியத் சட்டமும் குறுக்கிடவில்லையே.

எனவே இதுபோன்ற பேச்சுக்கள் ஷரியத் சட்டத்தைப் பிரதிபலிக்கவில்லை. மாறாக, பெண்களுக்கெதிரான நிலைப்பாட்டைத்தான் வெளிப்படுத்துகின்றன.

(தி ஹிண்டு - அஸ்கர் அலி என்ஜினியர்,
மும்பை)

தொகுப்பு : **ஜி.எஸ்.எஸ்**

கல்கி

VBC Jewellery

House of Vummidi

★ 78, G.N.Chetty Road, **Vani Mahal Circle,** (Opp. Hotel Residency), T.Nagar, Chennai - 600 017.
✆ : 8229556, 8229560
★ 11-B, Nageswara Rao Road, **Panagal Park,** T.Nagar, Chennai - 600 017. ✆ : 4342407, 4346297

இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி; பொன்நகைப் பரிசு!

'**ஏ**ழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'னு அரசியல்வாதிங்க அடிக்கடி மேடைகளில் முழங்குவாங்க! நீங்கள் இறைவனைக் காண்பது எதில்? ஏன்? கூப்பனில் எழுதி அனுப்புங்கள்.

சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கும் இரண்டு வாசகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தலா நான்கு கிராம் தங்கம் பரிசு பெறும். நாங்க பொன் வைக்கிற இடத்துல, நீங்க சிரிப்பு வையுங்க!

புன்னகைப் போட்டி - 1

கண்டேன் கடவுளை!

____

____

____

____

கூப்பன் அனுப்பும் உறையில் **புன்னகைப் போட்டி -1** என்று குறிப்பிடவும். கடைசி தேதி: **25.2.2002.** ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

இன்னும் சில போதிமரங்கள்

ஆர்.எம்.வர்மன் உயரே உயரே போய்விட்டான். ஜனாதிபதியிடம் 'சிறந்த இயக்குனர்' விருது வாங்கிவிட்டு, இருக்கின்ற எல்லா டி.விக்களுக்கும் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்த வேளையில்தான் திருவேங்கட செட்டியார் கதவைத் தட்டினார்.

ஆள் அடையாளமே தெரியவில்லை. அண்ணா சாலையில் பாரவண்டி இழுப்பவன் போல் இருந்தார்.

'வீடு ஏலத்துக்கு வந்துருச்சு..' என்றார். வர்மனைப் பார்ப்பதைத் தவிர்க்கும் விதமாய்க் சுவரில் மாட்டியிருந்த பச்சைக் கிளியை ரசிப்பதாய் பாவனை செய்தார்.

முந்திரி, திராட்சை போட்ட மசாலா பால் தருவித்துக் கொடுத்தான்.

"உங்களுக்குப் பிடிக்குமே..." என்றான்.

செட்டியார் மனசுக்குள் அடித்த அலைக்கு கண்ணில் நீர் தேங்கியது.

ஆர்.எம்.வர்மன் ஒரு காலத்தில் செட்டியாரிடம் மண்டியிட்டு அழுதிருக்கிறான்.

"ஒரே ஒரு சான்ஸ்!"

அழுது பழக்கமில்லாததால் தொண்டைக்குள் அடைத்து 'ஹக்'என்று ஒரு பெருஞ்சப்தம் இன்னும் காதில் இருக்கிறது.

திருவேங்கட செட்டியாரின் முதல் படம். ஆர். மகேந்திர வர்மனை அவர்தான் ஆர்.எம்.வர்மன் ஆக்கினார். புதுசு புதுசாய் ஆள் தேடிக் கொடுத்தார்.

வர்மன் அடைகாத்தான். குஞ்சு வீரியமாய் வெளிவந்தது.

"அற்புதமாய்ப் பண்ணியிருக்கேய்யா... நிறைய அவார்டு வாங்கி அலமாரிய ரொப்பிக்கலாம். என் பொட்டி ரொம்பாது போல இருக்கே..'' என்றார், கவலையுடன்.

அதுதான் நடந்தது.

பொட்டி ரொம்பவில்லை...

செட்டியாருக்கு மீளமுடியாத அடி.

வர்மனுக்கு ஊரெல்லாம் வெளிச்சம். 'ஏ' சென்டர் சுகவாசிகள் அர்ச்சித்தனர். வர்மன் மேலே போன உயரத்திற்குச் செட்டியார் கீழே விழுந்தார்.

இன்று கையேந்தி விட்டார்.

"ஹீரோ கால்ஷீட் நான் வாங்கிடறேன். நீங்க கொஞ்சம் தாராள மனசோட படம் பண்ணித்தரணும். மூச்சுக் காத்து கிடைச்சா போதும்.. மேல வந்துடுவேன்."

செட்டியாரின் வேண்டுகோள் வர்மனுக்குப் புரியாமல் இல்லை. இரண்டு கோடி ரூபாய் வேலை இலவசமாக. செய் நன்றிக்கு ஈடு.

"ஒரு மாசம் 'டைம்' கொடுத்திங்கன்னா சொல்லிர்றேன்..'' என்றான்.

"சொன்னேனே... வீடு ஏலத்தில்.."

"புரியுது... இப்ப நான் குடும்பத்தோட எங்க கிராமத்துக்குக் கிளம்பறேன். வந்தவுடனே நானே கூப்பிடறேனே..."

திருவேங்கட செட்டியார் உயிர்ப்பிச்சைக்கான கும்பிடு ஒன்றைப் போட்டுச் சிறிது நின்றார். பின் நடந்தார்.

குளிர் தாங்கிய ஈரக் காற்று காருக்குள் நிரம்பி வழிந்தது. வர்மனின் மேல் சட்டைப் பித்தான்களை நீக்கி தன் இடது கையை முடிகள் அடர்ந்த அவன் மார்புக்குள் செலுத்தி கதகதப்பைத் தேடினாள் சாந்தினி. திடீரென்று,

"அந்தாளை எங்கேயாவது போயி முட்டிக்கச் சொல்லுங்க" என்றாள்.

"யாரை?"

"அந்தச் செட்டியாரைத்தான்... இந்தாளு நொடிஞ்சு போனா நம்மளுக்கென்ன..?"

"என்னை அடையாளம் காட்டினவரே அவர்தாண்டி."

"அதுக்காக.... ஏதாச்சும் ஒரு லட்சம் இரண்டு லட்சம் கொடுத்தனுப்புங்க..."

"பிச்சையா?"

"பின்னே? இப்ப நீங்க ஓடற குதிரை... கிடைச்ச வரைக்கும் ஓடுறப்பயே செத்துடணும்... நொண்டிக் குதிரை ஆனப்புறம் வயலும் வாழ்வும் எடுக்கத்தான் போகணும்..!"

"சரி... யோசிச்சு முடிவு பண்ணலாம். ஒண்ணும் அவசரமில்லை..." என்ற வர்மன் வண்டியை நிறுத்தச் சொல்லி இறங்கினான்.

காதடைக்கும் நெடும்பயண இடைவெளியில் புளிய மர நிழலில் இளநீர் குடித்தல் ஒரு மிகப் பெரிய ஆசுவாசம்.

அங்கே ஏதோ ஒரு சின்ன நீரோடை, சப்தம் போடாமல் திருடன் மாதிரி ஓடிக்



கொண்டிருந்தது. ஓடையின் இரு மருங்கிலும் தேக்கு, பூவரசு, புங்க, புளிய மரங்கள். ரம்மியமான மணம்.

வர்மனுக்குப் பழக்கமான மணம். சின்ன வயசு ஞாபகத்தில் இருக்கும் மணம். மகிழம் பூ மணம்.

வர்மன் தேடினான்.

மகிழ மரம். நெடிதுயர்ந்த மரம்.

வர்மனுக்குத் தவசியின் ஞாபகம் வந்தது.

தவசி...!

நினைவு தெரிந்த நாளிலிருந்தே அவனுக்குச் சினிமாவை ஊட்டியவர். ஒரே சினிமாவை நாலைந்து கோணங்களில் சொன்னவர்.

அவனுக்கு முடி வெட்டிக் கொண்டே அவன் மனத்தில் சினிமாவை ஆழப் பதித்தவர்.

மகிழ மரத்தடிதான் தவசியின் சலூன். மகிழ மரம் பற்றி தவசி சொன்னவை இன்னும் நினைவுப் பள்ளங்களில்.

"வாசனையாப் பூக்கத் தெரிஞ்ச ஒரே மரம் இதான்யா... அவ்ளோ பெரிய யானைக்கு இத்துனூண்டு கண்ணு மாதிரி இத்தனாம் பெரிய மரத்துக்குத் துக்குனியூண்டு பூ.."

முடி வெட்டல் என்பது பொதுவாகவே அந்தக் கிராமத்துச் சிறுவர்களுக்குப் போலீஸ் சித்ரவதைக் கணக்குத்தான். காரணம் தவசியின் அந்த முடிவெட்டும் மெஷின். வெட்டுக்கிளி மாதிரி இரண்டு கால்களோடும் வாய் நிறைய பற்களோடும் பாய்ந்து பாய்ந்து முடியைப் பிடுங்கும். அவஸ்தை வலி.

ஆனால் வர்மனுக்கு மட்டும் ஸ்பெஷலாய் தவசி கத்திரிக்கோலால் வெட்டும். கத்திரிக்கோல் வெட்டு என்பது பெரியவர்களுக்கே உள்ள மரியாதை. அந்த மரியாதையை வர்மன் பெற்று விட்டதில் மற்ற சிறுவர்களுக்குப் பொறாமை.

வர்மனும் ஒவ்வொரு முறையும் தான் சேர்த்து வைத்த காசில் இரண்டு ரூபாய் கொடுப்பான் யாருக்கும் தெரியாமல்.

"ஒரு மட... ரெண்டு வரிக்கி.." என்று தவசி சொல்லும். இன்று பரவலாய் 'பொறை' என்று அழைக்கப்படும் அந்தக் கடின வஸ்துவுக்கு 'வரிக்கி' என்றும் பெயர் உண்டு.

அந்தத் தவசி இப்போது என்ன செய்து கொண்டு இருக்கிறதோ!

ஊர் போனவுடன் முதல் காரியமாய் தவசியைத் தேடிய தமிழகத்தின் முன்னணி இயக்குநர் ஆர். எம். வர்மனை அந்த ஊரே அதிசயமாய்ப் பார்த்தது.

தவசிக்குக் கண் தெரியவில்லை.

கைகளில் நடுக்கம்.

உத்தேசமாய் நடந்து வந்து, உத்தேசமாய்ச் சிரித்தது.

"தம்பி..!" என்று சிலிர்த்துக் கொண்டது.

"உம்படத்தை இப்போவெல்லாம் கேக்கிறதுக்காகத்தான்யா போறேன்.." என்றது.

"தாத்தனுக்குப் பொழுதன்னிக்கும் உங்க பேச்சுத்தான் போங்க.." என்றான் ஒரு சுட்டிப் பயல், வயசுக்கு மீறிய முக பாவங்களுடன்.

"என் பேரன்.." என்று அவனை அணைத்துக் கொண்ட தவசி, "நம்மூர்ல ஒரு படத்த எடுத்து வுட்டுர்யா.." என்றது.

தயக்கமாய்த் தன் ஆசையைச் சொன்ன வர்மனை அதிசயமாய்ப் பார்த்தபடி தன் பெட்டியை எடுத்து வந்தது.

"அந்த மகிழ மரத்தடி...?"

"இருக்கு... நாளை எண்ணிக்கிட்டு... என்னை மாதிரியே.." என்றவாறே அந்த மகிழ மரத்தடிக்குக் கூட்டிச் சென்றது தவசி.

காலம் அந்த இனிய சுகந்தத்தை தன் கோரக் கரங்களால் சிதைத்து விட்டிருந்தது.

மணம் இல்லை.

சக்கரமாய்ச் சுழன்று வரும் வெண்பூக்கள் இல்லை.

இருவரும் அமைதியாய் மகிழ மரத்தடியில் அமர்ந்தனர்.

"எல்லாத்தையும் வெட்டிப் போடற சவத்துப் பசங்க, இத மட்டும் விட்டு வெச்சிட்டானுங்க... உனக்காவயோ என்னமோ.."

நடுங்கும் கைகளோடு பழைய கதைகளை அசை போட்டபடி முடிவெட்டி முடித்த தவசியின் கரங்களைப் பற்றி நூறு ரூபாய் தாள் ஒன்றைத் திணித்து,

"இது பணம் இல்ல... அன்பு.." என்றான், வர்மன்.

"இல்ல... இது பணம் தான்.." என்று அதனைத் திருப்பிக் கொடுத்து விட்டது தவசி.

"ரெண்டு ரூவா குடு.. அதான் அன்பு.." என்றது.

அதிர்ந்த வர்மனைப் பார்த்து,

"ஒரு மட... ரெண்டு வரிக்கி..." என்று சிரித்தது.

வர்மனுக்கு மனம் கனத்துப் போனது.

திரும்பி வரும்போது திருவேங்கட செட்டியாரின் கண்ணீர் கும்பிடு நினைவில் வந்தது. போனவுடன் அவரைக் கூப்பிட்டு பட ஏற்பாடுகளில் இறங்கச் சொல்லப் போவதாக சாந்தினியிடம் சொன்னான் வர்மன்.

"உங்களுக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கா?" என்று கத்திய சாந்தினியிடம், இல்லை... ஞானம்.." என்றான் வர்மன். ○



"ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் தூங்கறீங்க?"

"வீட்லேயா? ஆபீசிலேயா டாக்டர்?"

— மங்கை

திட்டமிட்டுச் சேர்த்த குறத்தி டான்ஸ்!



சுமி சூப்பர்மார்க்கெட்

நான் வி.ஆர்.எஸ்ல வெளியேறிட்டதா நினைச்சு சந்தோஷப் பட்டுக்கிட்டிருக்கறவங்களுக்கெல்லாம் ரொம்ப ஸாரி...! இங்கேதான் இருக்கேன்!

அப்புறம், குழந்தையைக் காணுமேன்னு தேடிட்டிருந்தவங்க கற்பூரம் ஏத்தியோ, தேங்காய் உடைச்சோ இஷ்ட தெய்வத்துக்கு தேங்க்ஸ் சொல்லிக்கலாம்.

'அழகி' பார்க்கறதா வேண்டாமான்னு யோசிச்சுக்கிட்டிருந்தவங்க எல்லாரும் மீடியா (இன்க்லூடிங் கல்கி) அதுக்குக் கொடுத்த மெகா பிரசாரத்தைக் கண்டு தியேட்டருக்கு ஓடியிருப்பீங்களே! நானும் ஓடினேன். முதல் பாதி - ஐ வெப்ட்! இரண்டாவது பாதி... ஐ ஸ்லெப்ட்! சுமிக்கு ரசனை பத்தாதுன்னு வையறது காதுல விழுது. பட், நைட் ஷோவுக்கு இரண்டாவது பாதி தாங்காது. ரொம்ப ஸ்ட்ரெய்ன் எடுத்து குறவன் குறத்தி டான்ஸெல்லாம் சேர்த்திருக்காங்கன்னாலும் தாங்காது!



இந்த மாதிரி ஆபாச டான்ஸ் கிராமங்கள்ல அப்பப்போ நடக்கறதுதான். ஆனால், சினிமாவுல எந்த இடத்துல எத்தனை நேரம் அதைக் காட்டலாம்னு ஒரு ஸென்ஸ் ஆஃப் ப்ரபோர்ஷன் வேணும். ஒரு பண்பட்ட கரெக்டரா பார்த்திபனை ரொம்ப அழகா வளர்த்துட்டு, திடீர்னு அவர் குழந்தைங்களுக்குக் கதை சொல்ற காட்சியில இப்படி ஒரு ஆபாச கதையைச் சொல்ற மாதிரி ஃப்ளாஷ் பேக் புகுத்தறதும், வழக்கம் போல பள்ளிக்கூட வாத்தியாரை ரொம்ப கேவலமா காட்டறதும் கடைசியில குழந்தைங்க அந்த டான்ஸையும் வாத்தியாரோட மலிவான ரசனையையும் நேர்ல பார்த்த மாதிரி சிரி சிரின்னு சிரிக்கறதும்... நல்லாவேயில்லை... 'அழகி'ல பல நல்ல விஷயங்கள் இருந்தாலும் இது கொஞ்சங்கூட நல்லாயில்லைன்றதை மீடியா மொத்தமா மிஸ் பண்ணிட்டுது!

ஓ.கே. 'அழகி'ன்ற டைட்டிலுக்கு வருவோம். அதுக்குத் தனியா நல்ல மார்க் போடணும். அடுக்கடுக்கா பல அர்த்தங்கள் பண்ணிக்க இடம் கொடுக்கற டைட்டில். எதுக்காக அதைத் தேர்ந்தெடுத்தாங்கன்னு தெரியலை. நந்திதா தாஸுக்காக மட்டுமே வைச்சிருந்தாகூட டபுள் ஓ.கே. ஏன்னா அவரும் அழகு. அவர் நடிப்பும் அழகுதான்!

லாஸ்ட் வீக் ஒரு ஃப்ரெண்ட் வந்து புதுசா வெளியாகியிருக்கற தன்னோட சிறுகதைத் தொகுப்பைக் கொடுத்துட்டுப் போனார். கிரௌன் சைஸ்ல 168 பேஜஸ். புக் விலை முப்பத்தஞ்சு ரூபாய். இந்த புக் வர்றதுக்கு, பதிப்பாளர்கிட்டே கதாசிரியர் ஒன்பதாயிரம் ரூபாய் பணம் கொடுத்திருக்கார்! பதிப்பகத்துல மேற்கொண்டு இருபதாயிரம் செலவழிச்சிருக்கறதாச் சொல்றாங்களாம்! (சென்னையைச் சேர்ந்த லீடிங் பப்ளிஷர்தான்.) பட், புக்கைப் பார்த்தா அதுல பாதிதான் செலவாகியிருக்கும்னு தோணுது.

'இப்படி எதுக்காக காசு குடுத்து புக் போட்டுக்கறீங்க நண்பரே?'ன்னு கேட்டேன். பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணிப் பார்க்கணும்னு ஆசை இல்லையா? அதுமாதிரி இதுவும் ஒரு ஆசை'ன்னார். தொகுப்பில் இருக்கற கதைகள் ஏற்கெனவே பத்திரிகைகல வந்ததுதானாம்.



இந்த டிரெண்ட் ஆரோக்கியமில்லாத அபாயமான போக்குன்றதைச் சம்பந்தப்பட்ட எல்லாருமே உணரணும். பத்திரிகைல அச்சாகற எல்லாமே புத்தகமா வரதுக்குத் தகுதியுடையதான்றது முதல் கேள்வி. இப்படியே காசு கொடுத்து புக்ஸைக் கொண்டு வந்தா மார்க்கெட் ரொம்ப டைல்யூட் ஆகாதான்றது அடுத்த கேள்வி.

சுமி சூப்பர்மார்க்கெட் தொகுப்புன்றதைப் பத்தி பேச்சு வரும்போது இதை நான் ஞாபகம் வைச்சுக்காட்டியும் நீங்க கட்டாயமா ஞாபகப்படுத்துங்க, ப்ளீஸ்!

– சுமி



ஒருவர் பதிகம்!

ஆண்டவனிடம் ஏதேதோ கேட்டுப் பாடியவர்கள் பலருண்டு. காதலர்களை வாழ வைக்கும்படி கேட்டுப் பாடியவர் ஒருவர் உண்டென்றால் அவர்தான் திருஞானசம்பந்தர்.

இறைவன் அருளால் பாண்டியன் நெடுமாறனின் வெப்பு நோயை நீக்கியது, அனல் வாதம், புனல் வாதத்தில் வென்றது, ஆண் பனையைக் காய்க்க வைத்தது, சாம்பிலில் இருந்து பூம்பாவையை எழச் செய்தது என பல அற்புதங்களைச் செய்தவர்.

அவரது அற்புதங்களில் அதிகம் பேசப் படுவது காதலர்களை வாழவைக்க இறைவனிடம் முறையிட்ட 'திருமருகல் பதிகம்' தான்.

எத்தனையோ ஸ்தலங்களைச் சுற்றிக் கொண்டு திருமருகல் வந்து சேர்ந்தார் திருஞான சம்பந்தர். அங்கு எழுந்தருளியுள்ள வண்டுவார் குழலி சமேத மாணிக்க வண்ணன் என்கிற ஈசனை வழிபட்டார்.

கோயில் பிராகாரத்தை வலம் வந்து முன் மண்டபத்தில் அமர்ந்தார். நேரமோ இரவு. கண்ணயரலாமென நினைத்த போது, அழு குரல்! திரும்பிப் பார்த்தார். 'திருமருகல் சத்திரத்தில் வந்து தங்கிய காதலர்களில் ஆடவனைப் பாம்பு தீண்டி விட்டது. ஊரில் உள்ளவர்கள் எல்லாம் வைத்தியம் பார்த்தும் பலன் கிடைக்கவில்லை' உடன் போக்கில் (ஓடி வந்த காதலர்கள்) வந்தவள் அலறித் துடிக்கிறாள்' என்றனர்.

ஞானசம்பந்தர் ஓடோடிச் சென்று விசாரித்தார். அழுது கொண்டிருந்தவளிடம் 'பெண்ணே என்ன நடந்தது?' என்றார்.

'அய்யா நான் அருகில் உள்ள வைப்பூரில் ஒரு வியாபாரி மகள். இவர் என் உறவுதான். இவருக்கு என் சகோதரியைக் கட்டி வைப்பதாகச் சொல்லி என் தந்தை ஏமாற்றி வந்தார். நாங்கள் ஏழு பேரில் இவருக்கு ஒரு பெண்ணையும் என் தந்தை கொடுக்காமல் ஏமாற்றினார். நானோ கடைசிப்பெண். இவர் மீது காதல் கொண்டு இருவரும் ஓடி வந்து விட்டோம். வந்த இடத்தில் இப்படியாகிவிட்டது" என்று கதறினாள்.

"பயப்படாதே. உனக்கு எல்லாம் நன்மையாக முடியும்." ஆறுதல் சொன்ன சம்பந்தர் திருமருகல் இறைவனை நோக்கி அப்பெண்ணையும் அவள் காதலனையும் காப்பாற்றக் கோரி —

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே.

எனத் தொடங்கி பத்து பாடல் பாடி பதிகத்தை நிறைவு செய்தபோது விஷம் இறங்கி எழுந்தான் காதலன்! ஊரே வியந்து சம்பந்தரைப் பாராட்டியது.

— சுந்தரானந்தா

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

வாழ்வில் முடிவெடுத்த அந்தத்
தருணம் என்றும் பசுமையானது...



அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள்
யெஸ்டி அஸோஸியேடட் பில்டர்ஸிடம் இல்லம்
வாங்கும் இனிய தருணம்தான்!



அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி, முகப்பேர் (கிழக்கு) மற்றும் பிற இடங்களில் அழகிய தரமான டீலக்ஸ் ஃப்ளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LTD.

(FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS)

402, "Challamall" 17, Thyagaraya Road, (Pondy Bazaar),T. Nagar,
Chennai - 600 017. Phone: 4340224/4333636/4349667 Fax: 044-4340210

E.Mail:yesde@md3.vsnl.net.in Web:www.yesde-builders.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

